அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள்: உலகின்கண் பாகவதர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களென்றும்; அவர்களுடைய மகிமை சொற்கடங்கா தென்றும் கூறி அவர்களை நமஸ்கரிக்கிறார்.

16—C

(31) ஸ்ரீ ராகம் - ஆதிv.

ப. எந்தvரோ மஹாநுபாvவு - லந்தvரகு வந்தvநமு (எ)

அ. சந்திvர வதvநுநி யந்தv - சந்தvமுநு ஹ்ருதvயார
விந்தvமுந ஜூசி ப்vரஹ்மா - நந்தv மநுபvவிஞ்சு வா (ரெ)

ச. ஸாமகாvநலோல மநஸிஜலாவண்ய தvந்ய மூர்தvந்யு (லெ)

2. மாநஸ வநசரவர ஸஞ்சாரமுநிலிபி
மூர்த்தி பாvகுvகv பொvடvகvநெடுv வா (ரெ)

3. ஸரகுvந பாதvமுலகு ஸ்வாந்தமநு
ஸரோஜமுநு ஸமர்பணமுசேயு வா (ரெ)

4. பதிதபாவநுடvகுv பராத்பருநி குvறிஞ்சி பரமார்த்தமகுv நிஜ
மார்கvமுதோநு பாvடுvசுநு ஸல்லாபமுதோ
ஸ்வரலயாதிv ராகvமு தெvலியுவா (ரெ)

5. ஹாரிகுˇண மணிமய ஸரமுலு கˇளமுந
ஶோபி¦ல்லு ப¦க்தகோடி இலலோ
தெலிஸிதோ ஜெலிமிதோ கˇருணகˇல்கிˇ
ஜகˇமெல்லநு ஸுதா¦த்ˇருஷ்டிசே ப்ˇரோசுவா (எம்)
6. ஹொயலுமீற நடˇலுகல்குˇ ஸரஸுநி ஸதாˇ கநுலஜூசுசு புலகித
ஶரீருலை யாநம்தˇபயோதி¦ நிமக்ˇநுலை முதˇம்புநநு யஶமு கˇலவா (எம்)
7. பரம பா¦கˇவத மௌநிவர ஶஶி விபா¦கர ஸநக ஸநம்தˇந
திˇகீˇஶ ஸுர கிம்புருஷ கநககஶிபு ஸுத நாரதˇ தும்புˇரு
பவநஸூநு பாˇலசந்த்ˇரதˇர ஶுக ஸரோஜப¦வ பூ¦ஸுரவருலு
பரமபாவநுலு க¦நுலு ஶாஶ்வதுலு கமலப¦வ ஸுகு¦லு ஸதாˇநுப¦வுலுகாˇக (எம்)
8. நீமேநு நாம வைப¦வம்புˇலநு நீ பராக்ரம
தை¦ர்யமுல ஶாம்த மாநஸமு நீவுலநு வசந ஸத்யமுநு ரகு¦வர நீயெடˇ
ஸத்ˇப¦க்தியு ஜநிம்சகயு துˇர்மதமுலநு கல்லஜேஸிநட்டி நீ மதிˇ
நெறிம்கிˇ ஸம்தஸம்புˇநநு குˇண ப¦ஜநாநம்தˇ கீர்தநமு ஜேயு வா (எம்)
9. பா¦கˇவத ராமாயண கீˇதாதிˇ ஶ்ருதி ஶாஸ்த்ர புராணபு
மர்மமுலந் ஶிவாதிˇ ஷண்மதமுல கூˇட¦முலந் முப்பதிˇமுக்கோடி

ஸுராம்தரம்கvமுல பா¦வம்புvல நெறிகிv பா¦வ ராகv லயாதிv ஸௌக்¦யமுசே
சிராயுவு கvலிகிv நிரவதி¦v ஸுகா¦த்முலை த்யாகvராஜாப்துலைந வா (ரெம்)

10. ப்ரேமமுப்பிரி கொvநுவேள நாமமு தvலசுவாரு
ராமப¦க்தஸுத த்யாகvராஜநுதுநி நிஜதாvஸுலைந வா (ஏறம்)

பத உரை

மஹாநுபா¦வுலு - மிக்க அனுபவமுடைய வர்கள்

எந்தvறோ - எத்தனைபேரோ

அந்தvரிகிந் - அவர்களெல்லோருக்கும்

வந்தநமு - வந்தனம் (வந்தன மளிக்கிறேன்) (எந்தvரோ)

சந்திvரவதvநுனி - சந்திரனுக்குச் சமமாகிய முகத்தையுடையவனுடைய

அந்தv சந்தvமுலந் - அழகையும் திட்டத்தையும்

ஹ்ருதvயார விந்தvமுநந் - மனதாகிய கமலத்தில்

சூசி - கண்டு (சேவித்து)

ப்ரஹ்மாநந்தv மநுப¦விம்சுவாரு - ப்ரம்மானந்தத்தை யனுபவிக்கிறவர்கள்

எந்தvரோ - எத்தனை பெயர்களோ

ஸாமகாvநலோல - ஸாமவேத கானத்தில் ஆசையுடையவனே

மநஸிஜ லாவண்ய - மன்மதனைப்போல அழகு வாய்ந்தவனே

த₃ங்ய மூர்த₃ங்யுலு - க்ருதார்த்தர்களிற் சிறந்தவர்கள்
எந்த₃ரோ - எத்தனை பேர்களோ
'மாகஸ...ஸ்ம்சாரமு'
மாகஸ - மனமென்கிற
வந - வனத்தில் (இது ஶ்லேஷ-ரூபகாலங்காரம்)
சாவர - ஆஞ்சனேயனைப்போல்
ஸம்சாரமு - சஞ்சாரத்தை
ஸலிபி - செய்து
மூர்த்தி - ஸ்வரூபத்தை
பா₃கு₃கந் - நன்றாய்
பொட₃ க₂நெடு₃வாரலு - தரிசனம்செய்கிறவர்கள் (எந்த₃ரோ)
ஸாகு₃நந் - விரைவில்
பாத₃முலகுந் - பாதங்கட்கு

ஸ்வாம்தமுந அந - சித்தமென்கிற
ஸரோஜமுந - கமலத்தை
ஸமர்ப்பணமு சேயுவாரு - நன்றாய் அர்ப்பணம் செய்கிறவர்கள் (எந்த₃ரோ)
பதிதபாவநுட₃கு₃ - பாவஞ் செய்தவர்களை யெல்லாம் பவித்திரம் செய்கிற
பராத்பருநிந் - உயர்வற உயர்ந்தவனை
கு₃றிம்சி - உத்தேசித்து
பரமார்த்தமுந அகு₃ - அந்தக்கரண சுத்தியோடுகூடிய
நிஜமார்க்க₃முதோநு - உண்மையான நடவடிக்கைகளோடும் கூடினவனை
பாடு₃சுநு - பாடிக்கொண்டே
ஸல்லாபமுதோநு - ஆலாபத்தோடும்
ஸ்வரலயாதி₃ ராக₃முலந் - ஸ்வரலயங்களை முதலாகவுடைய இராகங்களை
தெலியுவாரு - அறிகிறவர்கள் (எந்தரோ)

'ஹரிகுvண...ஸரமுலு'
ஹரி - ஸ்ரீ ஹரியினுடைய
குvண - குணங்களால் காந்தியைப்பெற்ற
மணி - இரத்தினங்களால்
மய - நிறைந்த
ஸரமுலு - ஹாரங்கள்
கvளமுநந் - கழுத்தில்
ஸோபிv|ல்லு - ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற
பv|க்தகோடுலு - பக்தகோடிகள்
இலலோந் - உலகத்தில்
தெலிவிதோந் - ஞானத்தோடும்
செலிமிதோந் - ப்ரீதியோடும்
கருணாகல்கிv - தயை யுடையவர்களாய்
ஜகvமு எல்லநு - உலகத்தை எல்லாம்
ஸுதாv|த்vருஷ்டிசேந் - அம்ருதத்தைப்
　போன்ற கடாக்ஷத்தினல்

ப்vரோசுவாரு - காப்பாற்றுகிறவர்கள்
　(எந்தvரோ?)
' ஹொயலு...ஸரஸுனி '
ஹொயலு - உல்லாசம்
மீறந் - அதிகரிக்கும்படியான
நடvலு - நடைகளை
கலுகுv - உடைய
ஸரஸுநி - ரஸிகனை
ஸதாv - எப்பொழுதும்
கநுலந் - கண்களால்
ஜூசு - சேவித்துக்கொண்டு
புலக ஸரீருலை - மயிர்க் கூச்செறிந்த சரீரத்
　தர்களாய்
'ஆநந்த|...நிமக்|நுலை'
ஆநந்தv - பேரானந்தத்தா லாகிய
பயோதிv| - சமுத்திரத்தில்

நிமக்நுலை - மூழ்கினவர்களாய்
முதம்பு நு - சந்தோஷத்தோடும்
யஶமு - ஸ்ரேயஸை, கீர்த்தியை
கலவாரு - பெற்றவர்கள் (எந்தரோ)
'பரம...பூஸுரவருலு'
பரம - ஸ்ரேஷ்டமாகிய
பாகவத - பாகவதர்கள்
மௌனிவர - முனீஸ்வரர்கள்
ஶஶி - சந்திரன்
விபாகர - சூரியன்
ஸநக ஸநந்தந - ஸனக ஸனந்தனாதிகள்
திகீஶ - திக்பாலகர்கள்
ஸுர - தேவர்கள்
கிம்புருஷ - கிம்புருஷர்கள் (குதிரையினுடையமுகமும் மனிதனுடைய சரீரமும் வாய்ந்த ஒரு தேவயோநி விசேஷம்)
'கநக...ஸுத'

கநககஶிபு - இரணிய கசிபனுடைய
ஸுத - மகனாகிய ப்ரஹ்லாதன்
நாரத - நாரதர்
தும்புரு - தும்புரு
பவநஸூநு - வாயுபுத்திரனாகிய ஆஞ்ஜநேயன்
பாலசந்த்ர தர - பிறையணிந்த சிவன்
ஶுக - சுகப்ரம்மம்
ஸரோஜபவ - பிரமன்
பூஸுர வருலு - ப்ராம்மண ஸ்ரேஷ்டர்கள்
பரமபாவநுலு - மிகவும் பரிசுத்தமானவர்கள்
கநுலு - பெரிய யோக்கியதை யுடையவர்கள்
ஶாஶ்வதுலு - சிரஞ்சீவிகள்; நாசத்தையடையாதவர்கள்
கமல பவமுகுலு - பிரமன் முதலியவர்கள்

ஸதா^v^நுப^v^வுலு - எப்பொழுதும் ஆனந்தத்
 தையே அநுபவிக்கிறவர்கள்
காக - அன்றியும் (மற்றுமுள்ளவர்கள்)
 (எந்த^v^ரோ)
ரகு^v^வர - ரகுவம்சத்திற் சிறந்தவனே
நீ - உன்னுடைய
மேநு - சரீரத்தினுடையவும்
நாம - நாமத்தினுடையவும்
வைப^v^வம்பு^v^லநு - வைபவங்களையும்
நீ - உன்னுடைய
பராக்ரமதை^v^ர்யமுலநு - பராக்கிரமத்தை
 யும், தைர்யத்தையும், வல்லமையையும்,
 ஆண்மையையும்
ஶாந்த மாநஸமுநு - அமைதியோடு கூடிய
 மனத்தையும்
ஈவுலநு - ஈகையையும்

வசந ஸத்யமுநு - சொற்பிழைபாமையையும்
நீயெட^v^ - உன்னிடத்தில்
ஸத்^v^ப^v^க்தி - நல்ல பக்தி
ஜநிம்சகயு - பிறக்காதிருக்கிற
து^v^ர்மதமுலநு - துஷ்ட மதங்களை
கல்லசேஸிநட்டி - கனவைப்போல் செய்த,
 தலைகாட்டவிடாமற் போக்கிய
நீ மதி^v^ - உன்னுடைய மனதையும்
எறிங்கி^v^ - தெரிந்து
ஸந்தஸம்பு^v^நநு - சந்தோஷத்தோடு
'கு^v^ண...கீர்த்தனமு ஸேயுவாரு'
கு^v^ண - உன்னுடைய கல்யாண குணங்களை
ப^v^ஜந - பஜநம் செய்வதினுலாகிய
ஆநந்த^v^ - ஆனந்தத்தை யுடைய
கீர்த்தநமு ஸேயுவாரு - நாம ஸங்கீர்த்த
 னத்தைச் செய்கிறவர்கள் (எந்த^v^ரோ)

'பாˇகˇவத...புராணபு'
பாˇகˇவத - ஸ்ரீபாகவதம்
ராமாயண - ஸ்ரீமத் ராமாயணம்
கீதˇ ஆதிˇ - பகவத் கீதாதி ப்ரம்ம வித்யா சாஸ்திரங்களையும்
ஶ்ருதி - வேதங்களையும்
ஶாஸ்த்ர - சாத்திரங்களையும்
புராணபு - புராணங்களுடைய
மர்மமுலநு - மர்மங்களையும்
ஶிவாதிˇ...கூˇடˇமுலநு'
ஶிவாதி - சிவத்தைப் போதிக்கும் சைவ மதம் முதலிய
ஷண்மதமுல - ஆறு மதங்களுடைய
கூˇடமுலநு - தத்வார்த்தங்களையும், இரகசிய அர்த்தங்களையும்
முப்பதிˇமுக்கோடி - முப்பத்து மூன்று கோடி
ஸுராம்தரங்கˇமுல - தேவாந்தரங்கங்களின்
பாˇவநப்புˇலநு - அபிப்பிராயங்களையும்

எறிங்கிˇ - அறிந்து
'பாˇவ...ஆதி'
பாˇவ - பாவம்
ராகˇ - இராகம்
லய - லயம், தாளம்
ஆதிˇ - இவைகளை ஆதியாயுடைய
ஸௌக்யமுசேநு - சுகத்தினால் (காநஸுகத்தினால்)
சிராயுவு - நீண்ட வயது
கலிகிˇ - உண்டாகி
நிரவதிˇ ஸுகாத்முலை - இடைவிடாத சுகமுடையவர்களாய்
த்யாகˇராஜாப்துலைநவாரு - தியாகராஜனுக்கு உயிர்த்துணை போன்றவர்கள் (எந்தˇரோ)
'ப்ரேம...தˇலுசுவாறு'
ப்ரேம - ப்ரீதி
முப்பிரி கொநுவேள - அதிகரிக்கிறகாலத்தில்
நாமமு - ஸ்ரீராம நாமத்தை

தஸுவாரு - நினைக்கிறவர்கள்
'ராம...நுதுநி'
ராமபக்த - ஸ்ரீராம பக்தனாகிய ப்ரம்மத்தி
னுடைய
ஸுத - பிள்ளையாகிய
த்யாகராஜ - தியாகராஜனால்
நுதுநி - சேவிக்கப்பட்ட ஸ்ரீராமனுடைய
நிஜ - உண்மையாகிய
தாஸுலு ஐநவாரு - தாசராகியவர்கள்
(எந்தரோ)

விசேஷார்த்தம் :—'எந்தரோ மஹாநுபாவுலு' என்பதனால், சேதனன் தாஸாநுதாஸனா யிருப்பதினால் உபாயபூர்த்தியைச் சீக்கிர மடைந்தவனாய் முக்தி யடைகிறானென்று ப்ரகடனம் செய்கிறார். மேலும், பெரியோர்களெல்லாம் ஆசார்யவர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்று

'என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கு - யாரிடவே யவர்குருக்கள் நிறைவணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல் - பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த உய்யக் கொண்டார் - நாதமுனி சடகோபன் சயன நாதன்
இன்னமுதைத் திருமகளென் றிவர்கள் முன்னிட் - டெம்பெருமான் திருவடிக ளடைகின்
[றேனே'

என்கிறபடியாய், பூர்வாசார்ய வந்தனம் செய்கிறாரென்றும் பொருள். அன்றிக்கேல்,

'அடியார்ந்தவையமுண் டாலிலையன்னவசம்செய்யும்
படியாதுமில் குழவிப்படி எந்தை பிரான்தனக்கு

அடியாரடியார்தம் மடியா ரடியார்தமக்
கடியாரடியார் தம்மடியா ரடிபோங்களே'

என்றபடி; நாம் பரமதாஸவர்க்கத்தில் சேர்ந்தவ ரென்கிறரென் றும் பொருள்.

நதிகட்கெல்லாம் சமுத்திரம் எப்படி கதியாயிருக்கிறதோ அப்படியே ஜீவகோடிகட்குப் பகவான் கதியாயிருக்கிறன். நதிகளெல்லாம் பூமியில் பற்பல விடங்களில் உற்பத்தியாகி பற்பலவழி போடி முடிவில் சமுத்திரத்தையே அடைவதுபோல; பற்பல மார்க்கங்களைக் கடைப்பிடித்த மனிதர்களும் முடிவில் பகவானையே அடைகின்றனர்கள். 'த்யானே நாத்மனி பச்யந்தி கேசிதாத்மாந மாத்மநா:-அந்யே ஸாம்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே-அந்யேத்வேவமஜாநந்த: ச்ருத்வாந்யேப்ய உபாஸதே - தேபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதிபராயணா:' என்று கீதாசாரியன் கூறியதுபோல்; கர்ம ஞான பக்தி யோகங்கள் பகவானை யடைவதற்குப் பிரஸித்த மார்க்கங்களாக விருக்கின்றன. மேலும் ஸ்லோகத்திலுள்ள 'அபி' என்கிற சப்தத்தில் பகவானை யடைவதற்குள்ள மார்க்கங்கள் பற்பலவா யிருக்கின்றன வென்றும் விளங்குகின்றன. அப்படி பல்வகையா யுள்ள மார்க்கங்கள் மேலே கூறப்பட்ட மூன்று மார்க்கங்களைத் தழுவியனவே என்பர் சிலர். மூன்று மார்க்கமே யல்லாது வேறு பல மார்க்கங்களும் உண்டென்பார் சிலர். எப்படி யிருந்தபோதிலும் மார்க்கங்கள் அதிகாரியினுடைய போக்கியதைக்குத் தகுந்தபடி பற்பலவாகவே இருக்கின்றன. அவனவனுடைய அதிகாரத்திற்குத் தகுந்த மார்க்கத்தை அநு

சரித்துச் செல்லுகிறவன் முடிவில் பகவானை யடைகிறான். ஆகையால், பகவத் சம்பந்தத்தை யுண்டாக்கி வைக்கிற எந்த மார்க்கத்தை யடைந்தவ ராயினும் அவர்கள் பாகவதர்களே. அப்படிப்பட்ட பக்தர்கள் எண்ணிறந்தவர்கள் என்றும் அவர்கட்கெல்லாம் அப்பரவர்கள் 'தாஸாநுதாஸ' 'ப்ருத்யஸ்ய ப்ருத்ய:' இத்யாதி வாக்கியங்களிற் கூறியபடி அத்யந்த தாசரென பொருள்பட 'அந்தரகு வந்தநமு' என்கிறார். இவ்விதமாகிய பகவதாராதன த்ரயம் மனிதனுங் குண்டாவது மிகவும் கடினம். இந்த உபாயத்தை யடைந்தவனுக்கு, பகவான் மிகவும் ஸுலபனா யிருக்கிறானென்று கருத்து.

பல்லவியில் பாகவத கோஷ்டிகளைத் தொகுத்துக்கூறி அநுபல்லவிமுதல் சரணம் முடிவாக அவர்களை வகுத்துச் சொல்லுகிறார்.

'சந்த்ரவதநுநி அந்தசந்தமுநு ஹ்ருதயாரவிந்தமுந ஜூசுசு ப்ரஹ்மாநந்த மநுபவிஞ்சு வாரெந்தரோ' என்பதனால், 'சந்த்ரகாந்தாநநம் ராம:' என்கிறபடி, பூர்ணசந்திரனைப் போன்ற முகமுடையவனும்; 'த்ருஸ்யந்தி, ர: த்ரு: ப்ரலம்பஸ்ச... உந்நத:' இத்யாதி வாக்யங்களிற் சொல்லப்பட்டபடி யமைந்திருக்கிற சாமுத்திரிகா லக்ஷண முடையவனு மாகிய ஸ்ரீராமனை மனதில் நிறுத்தி இடைவிடாது ஸேவித்து பிரமாநந்தத்தை யநுபவிக்கிறவர்க ளெத்தனையோ பேர் என்கிறார்.

'ஸாமகா^{v}ந...மூர்த^{v}ந்யு லெந்த^{v}ரோ' என்பதனால், 'வேதா^{v}நாம் ஸாமவேதோ^{v}ஸ்மி' என்கிறபடி, பகவான் வேதங்களில் ஸாமவேதமா யிருக்கிறபடியால் ஸாமகான ப்ரீதியுடையவனென்றும், அப்படிப்பட்ட பகவானை, 'ஸாமவேதாதி^{v}த^{v}ம் கீதம் ஸம்ஜக்^{v}ராஹ பிதாமஹ: - இமம்பஞ்சமம் வேத^{v}ம் ஆந்யாதுமுபசக்ரமே' என்கிறபடி, பிரமனால் ஸாமவேதக் கடலினின்றும் திரட்டி எடுக்கப்பட்ட வெண்ணெய் போன்ற ஸங்கீதத்தோடுகூடிய துதிகளால் ஏத்திபேத்தித் தொழுகிற சிறப்புற்றோரிற் சிறந்தவர்களெத்தனை பெயர்களோ இருக்கிறார்கள். அவர்கட்கெல்லாம் நான் வந்தனமளிக்கிறேனென்கிறார்.

'மாநஸ...எம்த^{v}ரோ' என்பதனால், தியாக யோகத்தினால் ஸ்ரீராமனுடைய ஸ்வரூபத்தை மனத்திலிருத்தி இடைவிடாது பரமானந்தத்தை யனுபவிக்கிறவர்கள் எத்தனை பெயரோ என்கிறார். அதாவது, 'ஸ்நேஹோபரமோராஜந் த்ரயி நித்யம் ப்ரதிஷ்டித:-ப^{v}க்த்யாநி யச்சிதாவீரா பாவோ நார்யத்ர க^{v}ச்சதி' அதாவது; 'ஸ்ரீராமா எனக்கு ஸ்நேஹம் உன்னிடத்திலேயே யிருக்கிறது. பக்தியும் உன்னிடத்திலேயே நிலைகொண்டுவிட்டது. ஆகவே, மனது உன்னைவிட வேறு விஷயத்தில் புகமாட்டேனென்கிறது' என்று சொல்லித் தனக்கு எப்பொழுதும் ஸ்ரீராமாவதாரத்தோடேயே சேவை தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து அநவரதம் ஸ்ரீராம வைபவத்தைத் தியானயோகத்தினால் அனுபவித்துக்கொண்டு சிரஞ்சீவியாய் ப்லக்ஷ த்^{v}வீபத்தில் கதலீவனத்தில்

வீற்றிருக்கிற அநுமானைப்போன்ற மகானுபாவர்கள் எத்தனைபேரோ! அவர்கட்கெல்லாம் வந்தன மளிக்கிறே னென்கிறார்.

'ஸாகு^ந...சேயுவாரு' என்பதனால்; 'த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்^யே' என்கிறபடி, பகவானுடைய பாதங்களில் ஆத்மஸமர்ப்பணம் செய்கிற மகாநுபாவர்கள் எத்தனை பேரோ என்கிறார். அதாவது, ஸங்கதோஷத்தினாலோ அல்லது ஆசாரியனை யடையாததினாலோ அல்லது ஆசாரியனை யடைந்தும் நிலைபாததினாலோ அல்லது ஊழ்வினைப் பயனாலோ தன் வாணாளை வீணாளாய்க் கழித்தவனும், யாதாமொரு சமயத்தில் எந்தக் காரணத்தை முன்னிட்டாகிலும் பகவானை தக்ஷணம் சரணமடைந்தவன் குற்றமற்றவனாய்ப் பரம பாகவத கோஷ்டியிற் சேர்ந்துவிடுகிறான். இராவணனோ டிணங்கியிருந்த அவனது தம்பியாகிய விபீஷணன் இராக்கத குலத்தைச் சேர்ந்தவனாயினும், தர்மாதர்ம விசாரம் செய்தவனாய்த் துன்மார்க்கனாகிய இராவணனுடைய சகவாசத்தை ஒழித்து உத்தர க்ஷணத்திலேயே, 'த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராக^வம் ஶரணம் க^த:' என்கிறபடி, மனைவி மக்களையும் சொத்து சுதந்திரங்களையும் விடுத்து விரைந்தோடி ஸ்ரீராமனைச் சரண மடைந்து பரம பாகவதனாய் விளங்கின னல்லவா? அப்படிப்பட்ட மகானுபாவர்கள் எல்லாருக்கும் வந்தனமளிக்கிறேனென்கிறார் என்று பொருள்.

'பதிதபாவநுட^கு^...தெலியுவா றெந்தரோ' என்பதனால், 'பா^ஷாகர்^நம் நகர்தவ்யம்' என்கிறபடி, பகவத்குணானுபவத்தை யநுசரிக்காத ஸங்கீதம் பாபஹேதுவாகையால், அப்படிச்

செய்யாது நாரதாதிகளைப்போல் பகவத்குணானுபவத்தோடு கானம்செய்து பகவானுடைய ப்ரீதிக்குப் பாத்திரமாயிருக்கிற மகானுபாவர்கட்கு வந்தனம் புரிகிறாரென்று பொருள். அன்றியும் ஸங்கீதத்தை அப்யசிக்கும்பொழுதும் பகவானுடைய பஜந ஸம்பந்தமாகிய ஸாஹித்யத்தைக் கூட்டிப் பாடாது, வெறும் ஸ்வரரூபமாய்ப் பாடுவதும் பாபஹேதுவென்கிறார். அதாவது, 'ஸரிகமபதநிஸ' என்று முதன்முதல் அப்யசிக்கிற காலத்திலும், அந்த ஸ்வரத்தோடு

ஸ ரி க ம ப த நி ஸ் - ஸ் நி த ப ம க ரி ஸ
ர கு^{v} வ ர ச ர ணா மு - ப^{v} வ ப^{v} ய ஹ ர ணா மு

என்றொரு ஸாஹித்யத்தைக் கூட்டிப் பாடினால் பாடுவதற்கு எளிய நடையா யிருப்பது மாத்திரமல்லாது காதிற்கும் சுகத்தைக் கொடுத்து நற்கதிக்கும் வழி காட்டுமல்லவா? அப்படிச் செய்வதினால் ஸங்கீத ஞானமும் ஆத்ம ஞானமும் ஒன்று கூடி வளர்ந்து மனதிற்கு இன்பத்தை யுண்டுபண்ணுகிறது. இவ்விதமாய் ஸங்கீதத்தை அப்யசிக்கிறவர்கள் பாகவத கோஷ்டிகளை யொழிய கேவலம் வித்தியார்த்திகளல்ல. ஆகவே, அய்யரவர்கள் இவர்களையும் நமஸ்கரிக்கிறாரென்றுபொருள்.

'ஹரிகு^{v}ண பணிபடலாருலு...ப்ரோசுவாரு எந்த^{v}ரோ என்பதனால், 'ஏகம்ட லக்^{v}நதுலஸீநளிநாக்ஷமாலா...தேவைஷ்ண வாகம பயோநிதி^{v} பூர்ணசந்த்^{v}ரா:' என்கிறபடி, ஹரிகுணங்களா

லமைந்த மணிமாலையைக் கண்டத்தில் தரித்துக்கொண்டு வருகிற, அதாவது ஹரியினுடைய பஜனத்தையே ஆபரணமாக மதித்திருக்கிற பெரியோர்களின் கடாக்ஷத்தைப் பெற்றவன் க்ஷேமத்தை அடைகிறானென்கிறார். இஃது ஆசாரியனுடைய மகிமையைச் சொல்லுகிற வாக்கியம். நல்ல ஒழுக்கங்களையுடைய ஆசாரியன் சாதாரணமாய்க் கிடைக்கத் தக்கவனல்லன். நல்ல ஆசாரியனை அடைந்தவன் பகவானையே ப்ரத்யக்ஷமாய் அடைந்தவனாகிறான். ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கியிருக்கிறவனை ஆசாரியன் பக்திமார்க்கமென்கிற தெப்பத்தின் மேலேற்றிக் கரை சேர்க்கிறான். இத்தகைய காரணங்களை முன்னிட்டு அய்யரவர்கள், 'செலிமிதோ கருணக॑ல்கி॑ ஜக॑மந்தயு ஸு॒தா॑த்॑ருஷ்டிசே ப்॑ரோசுவாற எந்த॑ரோ' என்றார். அதாவது ஸ்நேகத்தோடும் கருணையோடும் கூடியவர்களாய் உலகத்தையெல்லாம் தமது கடாக்ஷத்தினாலே காப்பாற்றக் கூடிய பெரியோர்கள் எத்தனைபேருளரோ அவர்களனைவர்க்கும் வந்தனமளிக்கிறேனென்றார்.

'ஹொயலுமீற...யமுலு க॑லவா ரெந்த॑ரோ' என்பதனால், 'தீ॑ர்க॑பா॑ஹு॒ம் மஹாஸத்வம் மத்த மாதங்க॑ கா॑மிநம்' என்கிறபடி, மதயானையைப்போன்ற கம்பீரமான நடையுடையவனும், யாவருடைய மனதையும் கவரும்படி யமைந்துள்ள திருமேனியை யுடையவனுமாகிய ஸ்ரீராமனை அயோத்தியாபுரிவாசிகளைப்போல நேரில் தரிசனம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் எத்தனையோபேர்களிருக்கிறார்களென்று அவர்கட்கு வந்தனமளிக்கிறார்.

'பாமபாகவத,..ஸதாநுபவுனு காக' என்பதனால், கர்மம், ஞானம், பக்தி என்கிற மூன்று மார்க்கங்களின் வழியாய் பகவானுடைய அருளைப் பெற்ற பெரியோர்களைக் குறிப்பிட்டு ஸாதுநாம ஸங்கீர்த்தனம் செய்கிறார். பகவானுடைய நாம ஸங்கீர்த்தனம் எத்தகைய பலனைக் கொடுக்குமோ அத்தகைய பலனைப் பாகவதர்களுடைய நாம ஸங்கீர்த்தனமும் கொடுக்கவல்லது. 'ஸம்பாஷாதர்ஶநம் ஸ்பர்ஶ: கீர்த்தநம் ஸ்மரணம் நதி:-பாபநாஸிகிலைதானி ஸாதூநாமிதி ஶாஸ்ருமே, - ஸேவ்யாஸ்ரேயோர்த்திபிஸ் ஸந்த: புண்யதீர்த்த பலோபமா: - ஸத்ஸேவாஸநயோகோபி நதேஷாம் நிஷ்பலோபவேத் - ஸாதூநாம் தர்ஶநம் புண்யம் தீர்த்த பூதாஹி ஸாதவ: - காலேந பலதம் தீர்தம் ஸத்யஸ்ஸாதுஸமாகம:' அதாவது; ஸாதுக்களாகிய பாகவதர்களுடைய வார்த்தைகளைச் சொல்லுதல், அவர்களோடு வார்த்தையாடுதல், அவர்களைத் தரிசனம் செய்தல், அவர்களை ஸ்பரிசித்தல், அவர்களுடைய நாமங்களைச் சொல்லுதல், அவர்களை மனதில் நினைத்தல், அவர் பெருமையைப் பேசுதல், அவர்களைத் தியானித்தல், அவர்கட்கு நமஸ்கரித்தல் முதலியன மனிதனைப் பவித்திரனாகச் செய்ய வல்லன. புண்ணிய தீர்த்தத்திற்குச் சமானமாகிய பெரியோர்கள், ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற விரும்புகிறவர்களால் சேவிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அத்தகைய பெரியோர்கட்கு ஒரு கணப்பொழுதேனும் ஊழியம் செய்தால் மிக்க பயனைத்தரும். அவர்களைத் தரிசிப்பது மகாபுண்ணியம். புண்ணிய தீர்த்தங்கள் சில காலங்கட்குப் பின்னரே பயன்தரக் கூடியவைகள். ஸாதுக்களுடைய தரிசனம் அப்பொ

மூகே பயன்தரத்தக்கது என்று பெரியோர்களுடைய மகிமை வியந்து பேசப்பட்டிருக்கிறது. 17—C ஆகவே அய்யரவர்கள் இந்தச் சரணத்தில் ஸாதுநாம ஸங்கீர்த்தனஞ் செய்தாரென்று பொருள்.

'நீமேநு...சேயுவா ரெம்தரோ' என்பதனால், 'கம்தர்வராஜ ப்ரதிமம்' என்கிறபடி, அநவரதமும் நேத்திரானந்தத்தைப் பெருக்குகிற ஸ்ரீராமனுடைய திவ்யமங்கள விக்ரக வைபவத்தையும்; 'ராமப்தோச்சாரணு தேவமுகாம் நிர்யாம்திபாதகா:-புந: ப்ரவேஸ பீத்யாச மகாரஸ் தத்க வாடவத்' என்கிறபடி எப்பொழுதும் ஜிஹ்வானந்தத்தைப் பெருக்குகிறதும், ஸம்ஸார பாதையை ஒழிப்பதுமாகிய ஸ்ரீராமநாம வைபவத்தையும், 'ராமம் ஸத்யபராக்ரமம்' என்கிறபடி ஸ்ரீராமனுடைய நிகரற்ற பராக்ரமத்தையும்; 'வீர்யவாந்நச வீர்யேண மஹதாஸ்வேந விஸ்மிதா, என்கிறபடி யமைந்திருக்கிற ஸ்ரீராமனுடைய வீர்யத்தையும்; 'ஸசநித்யம் ப்ரஸாம்தாத்மா' என்கிறபடியுள்ள ஸ்ரீராமனுடைய சாந்தத்தையும்; 'கதம்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி' என்கிறபடி அற்பமாகிய உபகாரத்தைச் செய்த போதிலும் விசேஷ திருப்தியடைகிறதும், 'நஸ்மரத்யபகாராணும் ஸ்தமப்யாத்ம வத்தயா' என்கிறபடி, எவ்வளவு அபகாரம் செய்தபோதிலும் அதைப் பொருட்படுத்தா திருக்கிறதுமாகிய ஸ்ரீராமனுடைய மனநிலைமையையும்; 'பரமோதார:' என்கிறபடி யுள்ள அவனது உதாரகுணத்தையும்; 'ராமோத்விர்நாபி பாஷதே' என்கிறபடி, ஸ்ரீராமனுடைய சொற்றவறுமையையும்; 'பவாந்மே ப்ரியகாமார்தம் வசநம் யதி ஹோக்தவாந்-அகார்யம் கார்ய ஸம்காஸமபத்யம் பத்ய ஸம்மிதம், நிர்மர்யாதஸ்து புருஷ: பாபாசார

ஸமந்வித: - மாநம் நலபு³தே ஸத்ஸுபி³ந்த சாரித்ர த³ர்ஶந:...யத்³வ்ருத்தாஸ்ஸந்தி ராஜ்ஞ: தத்³ வ்ருத்தாஸ் ஸம்தி: ப்ரஜா:' இத்யாதி வாக்கியங்களாலும் மற்றும் சார்வாகாதி மதங்கள் ஸ்ரீராமனால் நிந்திக்கப்பட் டிருப்பதையும்; மற்றுமுள்ள ஸ்வபாவ விஶேஷகுணங்களையும் நன்கறிந்து ஸ்ரீராமனை பஜனம் செய்யப்பட்ட மகானுபாவர்கள் எத்தனைபேரிருக்கிறார்களோ அவ்வனைவர்க்கும் வந்தன மளிக்கின்றே னென்று பொருள். 'இந்த சரணம் நாரத வால்மீகாதி ரிஷிகளைப் போன்ற மகான்களைக் குறிப்பிடுகிறதென் றறியத்தக்கது.

'பா³க³வத...ஆப்துலைன வா ரெம்த³ரோ' என்பதனால், 'அஷ்டா த³ஶபுராணநி அஷ்டௌ வ்யாகரணநிச - ஜ்ஞாத்வா ஸத்யவதீ ஸுது: சக்ரேபா³ரத ஸம்ஹிதாம்' அதாவது, பதினெண் புராணங்களையும், எட்டு இலக்கணங்களையும், சத்யவதியினுடைய மகனாகிய வ்யாஸன் அறிந்து கொண்டு ஸ்ரீ மஹாபாரதத்தை இயற்றினாரென்றும்; 'லக்ஷோ ணைகேந ப்ரோக்தம் வேதார்த, பரிப்ரஹ்மணம்' என்கிறபடி, ஒருலக்ஷம் ஶ்லோகத்தினாலாய ஸ்ரீமகாபாரதம் வேதார்த்தங்களைத் தெரிவிக்கிறதென்றும், அந்த வேதார்த்தம், பகவா னொருவனே அடையத்தகுந்தவ னென்று முறை யிடுகிறதென்றும்; ப்ரம்மத்தை யடைவதற்கு எளிதாகியவழி பக்திமார்க்கமே யென்றும்; அந்த பக்திமார்க்கத்தை ஸங்கீதத்தோடு கூடிய நாம ஸங்கீர்த்தனத்தினால் அனுஷ்டிக்கிறவர்கள் சிரஞ்சீவிக ளென்றும்; அத்தகைய பெரியோர்களே ஸ்ரீ அய்யரவர்கட்குச் சிறந்த உறவினரென்றும் தெரிவிக்கிறார்.

'ப்ரேம...நிஜதா^V^ஸுலின் வாரெம்த^V^ரோ' என்பதனுல், பக்திப் பெருக்கினுல் மெய்மறந்து ஸ்ரீராம நாமத்தை கோஷிக்கிற மகானுபாவர்கள் அனேக ருளரென்றும் அவர்கட் கெல்லாம் வந்தனமளிக்கிறு ரென்றும் பொருள்.

ஸ்ரீ ராக^V^லக்ஷணம் இரண்டாவது வால்யத்தில் காண்க.

ப. ; ; *	ஸாரீ ரீகரிஸா ;	; - ஸநீ̣நீ̣பா̣	நீ̣ ; நீ̣ ; ‖
; ; *	எம்தமீரு. ம ;	; - ஹா. நு	பா; வு ; ‖
2. ஸா; *	,,	,,	,, ‖
அ ; *	,,	,,	,, ‖
3. நீ̣ஸாநீ̣ *	,,	; - நீ̣பரிஸநீ̣ப̣	நீ̣ ; ஸா - ரிஸ ‖
ஆ. . *	,,	; - ஹா . நு.	பா ; வு - . . ‖
4. ,, *	ஸா ரீ-ரீகரிஸா-நீ̣ஸ-ரீ க ரி	ஸா - நீஸரிஸநீ̣ப̣	நீ̣ நீ̣ஸா - ரிக ‖
,, *	எம்த-மீரு . -ம . -ஹா .	. - நு.	பா. வு - . . ‖
5. ரிஸஸரி*	,,	,,	,, ‖
ஆ. . . *	,,	,,	,, ‖

,, * ந்ஸா - ரிமாரி - ரீ , மபா ; | ;-மா ,ப-மாபமரீ; | ரீ ; - ரீகரி - ஸாரிஸ ||
,, * அம்த - றி. . - கி, . . ; | ;-வம், .- . . .த; | ந ; - மு. - . . . ||
ந்ஸாநி * † ந்ஸா - ரிமாரி - ரிரிமப | மபநிப - பநிபம | மபமரி - ரிகரிஸ ||
ஆ. . * அம்த- றி . . - கி. . . | வம் . . - த . . . | ந . . . - மு . . ||
,, * ,, | ,, - ஸ்நிபம | பா,த-பம-ரீகரி-ஸாரிஸ||
,, * ,, | ,, - த . . . | ந, . - . . -மு .- . . . ||

† இந்த மார்க்குப் போட்டிருக்கும் யிடங்களில், 'எம்த^v^ரோ மஹாநுபா^v^வுலு' என்று முதல் ஸங்கதியை ஒவ்வொருதரமும் பாடி பிறகு, 'அம்த^v^றிகி வம்த^v^நமு' என்ற ஆவ்ருத்தங்களைச் சேர்த்துப் பாடவும்.

,, * ,, - ரிமப - ம | பநி - பநிஸ் - நிஸ்நி | பாநிப-மாபம-ரீகரி-ஸாரிஸ||
,, * ,, - கி. . - . | . . - வம் . - த . . | ந . . - . . . -மு. - . . . ||
,, * ,, - ரிமபம | பநிஸ்ரி - ரிக்க்ரி | ஸ்ாரிஸ்-நிஸ்நி-பாநிப-மாபம ||
,, * ,, - கி. . . | வம் . . - த. . . | ந . . -. . .-மு . .- . . . ||
ரீகரி-ஸரிஸநி *
ஆ.- . . . . * (எம்தரோ)

அ. ; ; * பாம்பாரீமாரீ | ரீமா - மாமா | பா ; - பா ; ||
; ; * சங் . திரவத | நு. - நி . | . ; - . ; ||
; ; * ,, | ரிமபநி - பநிபம | ரீ ; - ரிகரிஸ ||
; ; * ,, | நு. . . - நி . . . | யம்; - த. . . ||
ரிமபநி * பநிபம - ரீ , ஸ - ஸநிஸா | ரிமாரி - ரிமபம | பாபமபா ; ||
. . . . * சம்த. - மு, . - ல . . | ஹ்ரு. - த . . . | யா . . ர ; ||
பா ; * ரீ ரீ - ரீக்ரிஸ்ா - நிஸ் - ரீக்ரி | ரிஸ் - நிஸ்ரிஸ்நிப | நீ நீ ஸ்ா ; ||
. ; * விம்த - மு . . . ந . - . . . | . . - ஜ௵. . சி . | ப்ரஹ்மா; ||
ஸ்ா; * ரீஸ்ா - ஸ்ாரிஸ்நீ - நீஸ்நிபா | பாநிபமா - மாபமரீ | நிபாம - ரிகரிஸ ||
. ; * நம்த - ம . . . - நு . . . | ப . . . - விம். . . | சு . . . - வா . . ||
ரிஸாநி *
. . . * (ரெம்தரோ)

ச. ஸா ; ஸா ; - ஸாஸா - ஸாஸநி | நிஸநி - நிஸநி - பா | ; ; - மப நி ஸ ||
ஸா ; . ; - ம . - கா . . | ந . . - லோ. - ல | ; ; - மநவிஜ ||

ரீ ; ரீ - ; ரீ ரீ - கரிரிக | ரி - ரிகரி - ரிகரிரி | ஸா ; ; - கரி ||
லா; . - ; . . - வன். | ய - .தக் - . . ய. | மூர் ; ; - த. ||

ரிரிஸநீ *
. . ந்யு * (லெம்தரோ)

2. ரீ கரி - ரிகரிரிஸநீ - ஸாஸாரிஸ | ஸரிஸஸநீப - தா | ; - க ரி ஸ - ரிக ரீ ||
மாநஸ- வநசாவ ர - ஸம்சா ரமு | ஸமிபிமூர்தி - பா | ; - குகபொ- டகநெ ||

, - ரிஸநீ *
, - டு .வா* (ரெம்தரோ)

3. ப பமரி ரீ - ப பமரி - பா , மரிரி | நிபா -நி ப ம- ம ப | ; - ம ரி ரி - கா , ரி ||
ஸாகுநபா - தமுலகு- ஸ்வாம், நமநா | ஸரோ-ஜமுநா-ஸமர் | , - பணமு - சே, யு ||

ரிஸஸநீ*
வா. . . * (ரெம்தரோ)

4. ப மம ப -ரி ரி க ரி-நிஸ ரி க-ரி ரிஸநீ | பநிஸ் ரீ ரி - ரீ | க - க ரிஸ - ரி ம பா ||
ஹரிகுண-மணிமப-ஸரமுலு-களமுந | ஸோ.பில்லு- பக் | த - நோ.டு - லிலலோ ||

ப ஃஸ ரீ - ரி மப நீ - மபநிஸ்ரீரி | க்ரி ரி க்ரரி ஸ் ஸ் | ; - ஸ் நிபபமரி க ||
தெலிஸிதோ- ஜெலிமிதோ- கருணநல்கி | ஜகமெல்லநுஸாதா | ; - த்ருஷ்டிசேப்ரோ ||

ரிஸாநி *

சுவா . * (ரெம்தரோ)

5. ஸஸநிபா - ரிஸ நிபா - க ரீ ஸ நிப - | மபா - பஸ ரீ | ; - கரிஸ - ரிம பா ||
ப திதபா - வருடகு - பராத்பருநி- | குரிம்- சிபரமார் | ; - தமகு- நிஜமார் ||

பநி ஸா -பபாம-ரிமபநி பா -ஸ்நி | பா - ரிஸ்நிபா - க் | ரீ ஸ்நிப ம ரி க ||
கமுதோ-நுபாடு-சுநுஸல்லா-பமு | தோ-ஸ்வரலபா-தி | ராகமுலதெலியு ||

ரீ ஸநி *

வா. . * (ரெம்தரோ)

6. ப நிஸ்-பாநி-மபநி- ரீ ம பநிப ம | ரி ரீ - கரிஸ - ஸ | நி - கரிஸ - நிபஸ ||
ஹொயலு-மீர-நடலு-கல்குஸரஸாநி | ஸதா- கநல - ஜு | . - சுசுபு - லகிதமு ||

ரீ , மரிமபா , - நிமப - நிஸா ரி | க்ரீஸ்நிப - ஸ் நி | , பமரி - ப ம பரி ||
ரீ , ருலேயா , - நம் த - பயோதி | நிமக்நுலை - முதம் | , புநரு - பமாமுக ||

ரிஸாநி *

லவா. * (ரெம்தரோ)

7. ரிமபநீ - மபநி - ரீ ; மபநிப ம | ரி ரீ கரிஸநீப் | ழப்ாநீஸா; ||
பாமபா- கவத - மௌ, நிவரமூமி | விபாகரஸநத | ஸநம்தந ; ||
ப்ஸாநீ - ஸ ரி ரீ - கரீஸ - ரிமபநி | ப நி ம ப -ரி கரிஸ | ரிமபமபா ; ||
திகி ம - ஸ்ரகிம்- புருஷ- கந கக | மிபுஸாத -நார. த | தும்பு. ரு ; ||
நிபநி-மா ப - ரீ ம பா நி-மபநி ஸ் | ரி ஸ்ாக்ரீஸ்பா | ம பநிநிஸ்ா ; ||
பவந-ஸஓநு-பாலசம்த்ர-தரமா த | ஸரோஜபவபூ | ஸாரவருலு ; ||
ரிக்ரி- ரீ க் ரி ஸ்-நிஸ் ரி-ஸ்ா ஸ்நி ப | மபரிம - ரி மப நி | பஸ்ாநி - பம ரி க ||
பரம-பாவநுலு-கநுலு-மாஸ்வதுலு | கமலப - வமுகுலு | ஸதாநு- பவுலுகா ||

ரிஸாநீ *

. . க * (எம்தரோ)

8. ஸா ; ; - ரி மப - ரீ ம - ரிமபா | மபா - ரிக ரீரீ | ; - கரிஸ - நீப்நீஸ ||
நீ ; ; - மே நு - நாம - வை. | பவம்- புலநுநீ | ; - பராக். ரமதை ||

ப் நீஸ - ப்ா ப் - ரீ கரி ஸ - பாபமரி | மபநி - ரீ ம பநி | ஸரி மப - நீ ப நி ||
யமு ல - மாம்த- மாநஸமு - நீ வுலநு | வசந - ஸத்யமுநு | ர குவர - நீயெட ||

ஸ்ஙிஸ்ா - ஙிஸ்ரி ரீ - ரிக்ரி ரீ க்ரி | ரிஸ்ரி - ரிரிஸ்ஙிரி | ஸ்ஸ்ா ஙி - பஙிஸரி ||
ஸத்பக் - தியுஜநிம்- சகநுதுர்மத | முலநு- கல்க .ஜே | விநட்டி - நீ . மதி ||

க் ரீ ரி ஸ்ா - ஸ்ஙீ ஙி பம - ரி ம பஙி | ஸா , ஙி - பா , ம | ரீ , க - ஸஙீ ப ||
நெறிங்கிஸம்- தஸம்புநமு- குணபஜ | நா , . - நம் , த | கீர், த - நம்புஸே ||
ரிஸாநி *
யுவா . * (ரெம்தரூ)

9. ரீ ; ; - பர்ஸ ரீ - நி ஸரி க ரி | ரீ , ஸா - ஸ நி ப | ம ப நீஸ ரீ ப நி ||
பா; ; - பவதரா- மாயணமு. | கீ , தா - திஸ்ருதி | மாஸ்த்ரபுராணபு ||

ஸாரி ஸரீ - க ரீஸ - நி ஸரிமபஙி | பாபம ரீ - ப ப | மரி - நீஙிபாப ||
மர்மமுலங்- மிவாதி- ஷண்மத. பு. | கூடமுலங்- முப் | பதி - முக்கோ ||

ஸ் ஙி பா - ரிரீ ஸ் ஙிப - ஸாபாமரி | ரி க் ரி - ரீ ரி ரீ | க்ரி - ரிக்ரி- ரீ ரி ||
டிஸாராம்- தரம்கமுல- பாவம்புல | நெறிகி- பாவரா | கல - யாதி-ஸௌக்ய||

ஸ்ஸ்ா-பஸ்ா-ரி ரீ-க்ரிஸ்-ஙிபஙிஸ் | ரி ஸ்ா ஸ்-ஸ்ாபா | பபா ரீ ரி ரீ ||
முசே-சி ரா -யுவு-கலிகி-நிரவதி | ஸாகாத்மு-லேத்யா | கராஜாப்துலே ||
கரிஸநி *
நவா. . * (ரெம்தரூ)

10. ; ; * பாமாபா - ரீ மா ரீ | ரிமபாமாமா | மாநிபா ; ||
; ; * ப்ரே. ம - .முப்பி | ரி . கொ. நு | வே. ள ; ||
பா ; * ,, | ரிமபநி - பநிப ம | கா ; ரிகரிஸ ||
. ; * ,, | ரி . . . - கொ. நு | வே; ள. . . ||
ஸ்ரிம* நி பபம - ரீ , ஸ - ஸா | ரிமாரி - ரிமபம | பா ; பா ; ||
. . . .* நா. ம. - மு, . - த ல | சு . . - வா . . | ரு ; . ; ||
; ; * ரீ ரீ - ரீக்ரிஸ்ா - நிஸ்ரிக் | ரிஸ் - நிஸ்ரிஸ்நிப | நீ ; ஸ்ா ; ||
; ; * ராம - பக். . - த . . . | ஸ ¬ - த . . . . . | த்யா; க ; ||
; ; * ரீ ஸ்ா - ஸ்ரிஸ்நி - நிஸ்நிப | பநிபம - மபமரி | நிபாம ரி க ரிஸ ||
; ; * ராஜ - வி . . . - நு . . | து . . - நி . . . | நி . ஜதாஸ¬. லெ ||
ஸாநி *
ந . வா * (ரெம்தரோ)

—❖—

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யாவர்கள், உலகின்கண் மானிடர்கள் செயற்கரிதாகிய தர்மங்களைச் செய்தும் நிரதிசய இன்ப வீடாகிய மோக்ஷத்தைப் பெறாது, இடைபுகுந்து நிற்கின்ற அணிமாதி அஷ்டசித்திகளையும், பிரம்மபட்டம் முதலாகிய பதவிகளையும் கண்டு மயங்கி 'புனரபி ஜனனம்' என்கிறபடி ஸ்வரூபநாசம் செய்துகொள்கிறார்களே! இது என்ன ஆச்சர்யம்? இப்படியும் மோசம் போவார்களா? என்று வியப்படைகிறார்.

(32) நாத^v^வராங்கி^v^ணி - ஆதி^v^.

ப. க்ருபாலவால! கலாத^v^ரஶேக^h^ர - க்ருதாபி^v^வம்த^v^ந ஸ்ரீராம (க்ரு)

அ. ந்ருபோத்தம ஶரணாக^v^த ஜநாந^v^ - நிவாரண அப்^v^ஜ ஹிதாங்கஶஶாங்க (க்ரு)

ச. அபவர்க^v^ப^h^ல காமமூலநு ஜூசி யட்^v^ட^v^மை
யணிமாத்^v^யஷ்ட ஸித்^v^து^v^ல மோஸபோயெத^v^ரய்யா
ஶுபவித்ரரூப ஸதா^v^ கருணாஜூடு^v^
ஶூரபாலக த்யாக^v^ராஜநுத (க்ரு)

பத உரை

க்ருபாலவால - தயவுக்குப் பாத்திபோன்ற வனே
'கல...வந்த^v^ன' கலாத^v^ர...சந்திரனை

ஶேக,ர - சிரத்தி லணிந்த சிவனால்
க்ருத - செய்யப்பட்ட
அபிᵛவம்தᵛந-நமஸ்காரங்களை யுடையவனே
ஸ்ரீராம - ஸ்ரீராமா
ந்ருபோத்தமா - அரசர்களிற் சிறந்தவனே
'ஶரணு...நிவாரண'
ஶரணுகᵛத - உன்னைச் சரணடைந்த
ஜந - மனிதர்களுடைய
அகᵛ - பாவங்களை
நிவாரண - போக்கடிப்பவனே
'அப்ᵛஜ...ஶஶாங்க'
அப்ᵛஜ - தாமரைக்கு
ஹித - நண்பனாகிய சூரியனுடைய
அந்வய - குலத்திற்கு
ஶஶாம்க - சந்திரனைப்போன்றவனே
'அபவர்கᵛ...காமமுலநு'
அபவர்கᵛப,ல - போகஃபலத்தைக் கொடுக்கக்கூடிய
காமமுலநு-அக்னி ஹோத்ராதி கருமங்களை
ருசி - அநுஷ்டித்துப் பார்த்து
அட்டமு ஜ - திரும்பி
அணிமாதிᵛ அஷ்ட சித்ᵛதுᵛலந் - அணிமாத்யஷ்ட சித்திகளில்
மோஸபோயெதᵛரய்யா - மோசம் போகிறார்கள் ஐயனே
ஸுபவித்ரரூப - மிகவும் பரிசுத்தமாகிய உருவமுடையவனே
ஸுரபாலக - தேவர்களை இரக்ஷிப்பவனே
த்யாகᵛராஜநுத-தியாகராஜனால் கொண்டாடப்பட்டவனே
ஸதாᵛ - எப்பொழுதும்
கருணாந் ஜூடᵛ - கருணை கூருவாய்

விஶேஷார்த்தம்:—'க்ருபாலவால கலாத,ர ஶேக,ர க்ருதாபி,வம்த,ந ஸ்ரீராமா' என்பதனால், ஸ்ரீராமன் பரமசிவனால் நமஸ்கரிக்கப் பட்டவனும், 'ராஜாதி,ராஜஸ்ஸர்வேஷாம்' என்கிறபடி அரசர்கட்கெல்லாம் அரசனும், 'லோகநத,ஸ்ய ராமஸ்ய' என்கிறபடி ஸமஸ்த லோகங்கட்கும் நாதனுயு மிருக்கிற ஸ்ரீமந் நாராயணனே என்று ஸ்ரீராமனுடைய பரத்வத்தை நிரூபிக்கிறார்.

'ந்ருபோத்தமா' என்பதனால், ஸ்ரீராமன், சூரியகுலமென்கிற சமுத்திரத்திற்கு சந்திரனைப் போ லிருக்கிறபடியினால், சக்ரவர்த்திகளிற் சிறந்தவனே என்று கொண்டாடுகிறார். 'ஶரணாக,த ஜநாக, நிவாரணா' என்பதனால், சூரியகுலத் துதித்த சக்ரவர்த்திகளெல்லாம், ஆஶ்ரயித்தவர்களுடைய கஷ்டங்களைமாத்திரம் தீர்க்கக்கூடியவர்களா யிருந்தார்களே யொழிய, பாவங்களைப் போக்கடிக்க வல்லாரில்லை. ஸ்ரீராமனோ வெனில் ஆஶ்ருதர்களுடைய கஷ்டங்களை மாத்திரமே யல்லாது ஊழ்வினையையும் போக்கடித்து உத்தம பாதத்தைத் தரத் தக்கவன் என்கிறாரென்று பொருள்.

'அபவர்க...மோஸ பொய்யெதரய்யா' என்பதனால், சிலர் மோக்ஷத்தை யடையவேண்டி அரிய பெரிய கருமங்களைச் செய்தும் பயனடையாது அணிமாதி சித்திகளைப் பெற்று மோசம் போகிறார்களென்கிறார். அதாவது, கருமங்கள் காம்யமென்றும் நிஷ்காம்யமென்றும் இரண்டு வகைப்படும். மனிதன் பலாபேக்ஷையில்லாது கருமங்களைச் செய்து மோக்ஷத்தைப் பெறவேண்டும். அப்படிப்பட்ட கருமத்தை மனிதன் செய்யும் பொழுது, பிரமன் முதலாய தேவர்கள்

அவனுக்கு வரங்களையும் மற்றும் கொடுத்து, ஸ்வர்காதி போகங்களைக் காட்டி அவனுடைய புத்தியை மயக்கிவிடுவார்கள். அப்பொழுது அவன் சுவர்க்காதிபோகங்களில் மூழ்கினவனாய் மெய் மறந்து, மதியிழந்து, ஸித்திகளையும் மற்றும் கைக்கொண்டு நெடுங்காலம் உழன்று திரிந்து, புண்யம் நசித்தவுடனே புவியில் வீழ்ந்து ஜனனமரண பாதையை யடைந்து பிரயோஜன மற்றவனாகிறான். விஸ்வாமித்ரன் முதலிய மகான்களே அரிய தவத்தினின்றும் நழுவுவரேல் மற்றவர்களின் கதியைச் சொல்லவேண்டுமோ! ஆகவே, அய்பரவர்கள், பக்திமார்க்கம், மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல மார்க்கங்களிற் சிறந்ததென்றும், அதை யநுஷ்டிக்கும்பொழுது புத்திக்கு மயக்கம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு ஸ்ரீராமன் கிருபை செய்யவேண்டு மென்றும் பிரார்த்திக்கிறார் என்று பொருள்.

நாத^v^வராங்கி^v^ணி ராக^v^லக்ஷணம்:—இஃது ஔடவ ஸம்பூர்ண வக்ரராகம். 22-வதுமேளத்திற் பிறந்தது. ஆரோஹணத்தில் ரிஷப தைவதங்கள் வர்ஜியம். அவரோஹணத்தில் ரிஷபம் வக்ரம். இதில் தாட்டு ஸ்வரப்பிரயோகமே ரஞ்சகமானது. சுத்த மத்யம பஞ்சம கைசிகி நிஷாதங்கள் இராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்,	அவரோஹணம்.
ஸ பா ம நி த நி ஸ.	ஸ ப நி த ப ம க ரி க ஸ.

ப. பாபா ; மாநீதாநீஸ்ா	பாநீதாபா	மாகாரீகா ‖
க்ருபா ; லவா. ல க	லா . த ர	ஸே. க ர ‖
ஸ பா ; மா நீ ; தாபா	பமரீகா ;	ஸா ; நிதபம ‖
க்ருதா; பிவம்; த ந	ஸ்ரீ . ரா ;	மா ; . . . . ‖
பாபா ; மாநீதாநீஸ்ா	ரீ ; க்ாஸ்ா	பாநீ - தபமா ‖
க்ருபா; லவா ல க	லா; த ர	ஸே. - க . ர ‖
ஸாபா; மா நீ ; தபமா	கா ; ரீகா	ஸா ; ; ; ‖
க்ருதா; பி வம்; த . ந	ஸ்ரீ ; ரா.	மா ; ; ; ‖
பாபாநிதபம - நீதாநீஸ்ா	ம்க்ரீக்ாஸ்ா	ஸ்ாபா - நிதபம ‖
க்ருபா. . ல. - வா. ல .	லா. த ர	ஸே. - க . . . ‖
பாநீதபமாகாரீகாஸா	ஸா ; பா ;	நிதபம - கரிகஸ ‖
க்ருதா. பிவம். த ந	ஸ்ரீ ; ரா ;	மா . . - . . . . ‖
அ. நீ தா ; நீஸ்ா ; ஸ்ாஸ்ா	க்ாக்ாரீஸ்ா	ஸ்ாஸ்ா ; ஸ்ா ‖
ந்ருபோ; த்தமா; ஶ ர	ஞா . க த	ஜ நா ; க ‖

ஸ்பா ; மா - க்ரீ க்ரஸ்ா	ஸ்பா - நிதபம	காரிகாஸா	‖
நிவா ; ர - ணஅப்ஜஹி	தாங். - வ.. ய	ஸஸம்க.	‖
ச. ஸாபா - பாமா - நீதாநீஸ்ா	ஸாபா - நீதா	மகரீ - காஸா	‖
அப - வர் க - பல காம	முல - நுஜு	சி. யட் - டமை	‖
ஸாபா - பாமா - கா ரீ காஸா	பா, ம - நீ, த	நீ, ஸ் - பா ;	‖
அணி - மாத்ய - ஷ்டஸித்தல	மோ, ஸ - போ, யெ	த, ரய் - யா ;	‖
நீ தா நீ ; ஸ்ாஸ்ா ; ஸ்ா	ஸ்ாப்ா ; ம்ா	ம்ாரீக்ாஸ்ா	‖
ஸுபவித் ; ர ரு ; ப	ஸ தா ; க	ருணாஜூடு	‖
ஸ்ாஸ்ாபா ; நீதாபாமா	ஸாபா ; மா	காரிகாஸா	‖
ஸு ர பா ; ல க த்யா	க ரா ; ஜ	நு . த .	‖

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யாவர்கள், பகவான் பாதந்திரனாகிய சேதனனைக் காப்பாற்றுகிறானென்றும், ஸ்வதந்திரனை உபேக்ஷிக்கிறானென்றும் தெரிவிக்கிறார்.

18—C

(33) ஶுத்தபங்காளா - ரூபகம்

ப. தப்பகனே வச்சுநா - தநுவுந லம்பட நீக்ருப (தப்ப)

அ. மெப்புலகை கொப்புனு கல - மேடி ஜநுலஜூசி பஜந (தப்ப)

ச. ரூகலகை பைகி மஞ்சி - கோகலகை ஹாரமுலகு
நாகலகை த்யாகிஞ்சி - த்யாகராஜநுதுநி பஜந (தப்ப)

பத உரை

நீக்ருப - உன்னுடைய தயவு
தப்பகனே - தவறும் பொழுதே
தநுவுந - தேகத்தில்
லம்பட - சங்கடம்
வச்சுநு ஆ - வருமா? (வந்துவிட்டதே என்ன ஆச்சரியம்)
மெப்புலகு ஐ - மெப்புக்காக-உலகத்தோர் மெச்சிக்கொள்வதற்காக

கொப்புனு கல - கொண்டையையுடைய
மேடிஜநுலந் - அழகிய பெண்களை
ஜூசி - பார்த்து
பஜந - பஜனம் செய்வதை
(தப்பகனே...லம்பட - தப்பிப் போவதினாலே கஷ்டம் வருமா)
ரூகலகை - பணத்திற் காகவும்
பைகிந் - மேலணிவதற் காகிய

மம்சி - சிறந்த

கோகலகை - ஆடைகட்காகவும்

ஹாரமுலகுந்-தாவடங்கட் காகவும் (முத்து மாலே அரத்தினமாலே முதலிய தாவடங்கள்)

நாகலகை - நொய்யரிசிக் காகவும்

த்'யாகிம்சி - ஆத்திரங்கொண்டு

த்யாக'ராஜநுதுநி - தியாகராஜனுல் கொண்டாடப்பட்ட ஸ்ரீராமனுடைய

ப'ஜந - வழிபத்தை (தப்பகநே வச்சுநா... லம்பட - தப்பிப் போவதினுலேயே சரீரத்திற்கு சங்கடம் நேரிடுமா! நேரிடுகின்றதே என்று பொருள்)

விசேஷார்த்தம்:—'தப்பக'நே வச்சுநா தனுவுந லம்பட நீ க்ருப' என்பதனுல், மனிதனுக்கு பகவானுடைய கிருபை எப்பொழுதில்லா தொழிகிறதோ அப்பொழுதே அவனுக்கு சரீர அசௌக்கிய முண்டாகிறதே இதென்ன ஆச்சரிய மென்கிருர். இங்கு சரீர சௌக்கியத்தையே முக்கியமாய்க் கூறுகிருர். ஏனெனில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்குவித புருஷார்த்தங்களேயும் அனுபவிப்பதற்கு சரீரமே முக்கிய சாதனமாக விருக்கின்றது. புருஷார்த்தங்களிற் சிறந்ததாகிய மோக்ஷத்தை யடையவேண்டியதற்குச் சாதகமாயுள்ளது சரீரம் என்கிற ஞாபகமுடையவனே ஞானி எனப்படுவான். அந்த ஞாபகத்தோடு பகவானே வழிபடுகிறவன் பக்த னெனப்படுவான். பகவானுடைய பஜனத்தினும் சிறந்ததாகிய மற்ருெரு மோகமென்பதே இவ்வுலகினும் உம்பருலகினு மில்லே என்கிற மனநிலேமையை யுடையவனே விராகி எனப்படு

வான். இவனே மோக்ஷாதிகாரி யாவான். இவ்வழிக்கு மாறுபாடாக, தர்மம், அர்த்தம், காமம் என்கிற மூன்று புருஷார்த்தங்களை மாத்திரம் அனுபவிப்பதற்குத் தனது சரீரம் சாதனமாக விருக்கிற தென்கிற எண்ணத்தோடு உலகவின்பத்தை யனுபவிப்பதிலேயே மனமுடையவனும்; தனது ஜன்மகாரணத்தையும், பகவா னொருவனுள னென்கிற நினைவையும் மறந்துவிடுகிறவன் பகவானுடைய திரு உள்ளத்திற்குப் புறம்பான காரியத்தைச் செய்கிறவனும் அதம கதியை யடைகிறான். பகவத்பஜனத்தை மறந்த மாத்திரத்திலேயே மனிதனுக்கு சரீர அசௌக்கிய முண்டாகிறது. அரோக த்ருடகாத்திரத்தோடு கூடிக்கொண் டிருக்கிற காலத்தில் மனிதன் எவற்றைப் போகமென்றும் பாக்கியமென்றும் அனுபவிக்கிறானோ அவற்றை, உடல் பிணியால் வருந்தும் பொழுது விஷமாக பாவிக்கிறான். அக்காலத்தில் அவனுடைய அபராதங்கள் அவனுக்கு ஞாபகம் வருகிறபடியால் இனி செய்வதியா தென் றறியாமல் வருத்த முறுகிறான். தசரதன் ஓர் நள்ளிரவில் வேட்டையாடப் போயிருந்த தருணத்தில் ஒரு இருடியின் மகன் கமண்டலத்தில் ஜலம் மொள்ளுகிற சத்தத்தைக்கேட்டு அஞ்ஞானத்தால் யானை என்றெண்ணி ஆய்ந் தறியாமல் பாணத்தை விடுத்துக் கொன்றதற்காகப் பெற்ற சாபத்தை யனுபவிக்கும் காலம் வந்த சமயத்தில் ஸ்ரீராமனுடைய வனகமன காலம் சம்பவித்தது.

'காலமறிந்தாங்கிட மறிந்து செய்வினையின் - மூலமறிந்து விளைவறிந்து - மேலும் தாம்
சூழ் வினை சூழ்ந்துத் துணைமை வலிதெரிந் - தாள்வினை யாளப் படும்'

என்கிற கொள்கைக்கு மாறுபாடாய் பெண்வலைப்பட்டுழன்றமையால் தசரதன் இராமனைப் பிரியும்படி நேரிட்டது. ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து பெரிய பதவியை படையவேண்டுமென்ற காலத்தில் வினைப்பயன் இடை புகுந்து துன்பத்தை விளைவித்தது. 'யாவத்துரியதஸ்தஸ்ய ரஜோரூப மத்^{v}ருஶ்யத - நைவேக்ஷ்வாகு வரஸ்தாவத் ஸம்ஜஹாராத்ம சக்ஷுஷீ - யாவத்^{v}ராஜாப்ரியம் புத்ரம் பஶ்யத்யம்த தா^{v}ர்மிகம் - தாவத்^{v}வ்ய வர்த்ததே வாஸ்ய த^{v}ரண்யாம் புத்ர த^{v}ர்ஶனே, நபஶ்யதி ரஜோப்யஸ்ய யதா^{v} ராமஸ்ய பூ^{v}மிப: - ததா^{v}ர்த^{v}ஶ்ச விஷண்ணஶ்ச பபாத த^{v}ரணிதலே' அதாவது, ஸ்ரீராமன் வனத்திற்குப் போகும் காலத்தில் தசரதன் நேத்திரங்களை நீட்டிப் பார்த்துக்கொண் டிருந்தான். மிகவும் தார்மிகனும், ப்ரியனுமாகிய மகனைப் பார்த்துக்கொண் டிருக்கையில், இவன் ஸ்ரீராமனைப் பார்க்கவோ! என்கிறபடியாய் தூளிகள்மேலெழுந்து மறைத்தன. அத் தூளிகளும் சிறிது நேரத்திற்குள் மறைந்துபோயின. உடனே தசரதன் கஷ்ட மதிகரித்தவனாய் பூமிமேல் விழுந்தான். (அதாவது, தசரதனுடைய கண்கட்கு ஸ்ரீராமன் புலப்படா தொழிந்தும் ஸ்ரீராம சம்பந்தமாகிய தூளிகள் புலப்பட்டமையால் சிரமமுண்டாகவில்லை. அத்தூளிகளும் மறைந்தபோது பூமிமேல் விழுந்தான். இதனால் ஸ்ரீராம சம்பந்தமாகிய தூளிகட்கும் சேதனனேஜ் ஜீவனாசக்தி சொல்லப்பட்டது) இப்படி ஸ்ரீராமனைப்பெற்ற தசரதனுக்கே இவ்வித கஷ்ட மேற்படுமென்றால் மற்றோர்களின் கதி என்ன? என்கிறாரென்று பொருள்.

'மெப்புலகை கொப்புலுக^V^ல மேடிஜனுலஜூசிப^V^ஜாதப்பக^V^கே வச்சுநா தனுவுந லம்பட' என்பதனுல்; ஸ்த்ரீ சாபல்யம் பகவத் பஜனத்திற்கு முக்கியமாகிய இடையூறுடையது என்கிறார். அதாவது, சக்ரவர்த்திக்கு எல்லாரும் தாஸவர்க்கத்திற் சேர்ந்தவர்களேயாவார்கள். அப்படியிருக்கும்பொழுது ஸ்ரீராமனுக்கு தாசனல்லாத ஒருவனுளனே? இல்லை. தயரதன் ஸ்ரீராமனுக்குப் பட்டம் கட்டுவித்து தான் தாஸவர்க்கத்திற் சேர்ந்து கைங்கரியம் செய்யவேண்டுமென்றெண்ணி, அநருபஸ்ஸ வைநாதோ, லக்ஷ்மீவாந் லக்ஷ்மணாக்^V^ரஜ: - த்ரைலோக்ய மபிநாதே,ந ஏநஸ்யாயந் நாத, வத்தரம்' என்கிறபடி, திரிலோகநாதனுகிய ஸ்ரீராமனை நாதனுக அடைந்து அயோத்திமாநகர் சிறந்த நாதனை யுடையதாகட்டுமென்று சங்கல்பம் செய்தபொழுது, இவனது சங்கற்பம், கைகேயியினுடைய மோகவலையிற்பட்ட காரணத்தினுல் ஈடேறவில்லை. பத்துத்திசைகளையும் ஜெயித்த தசரதனுக்கே மன்மதபாணம் பராபவத்தை யுண்டுபண்ணியதென்றல், 'சேதோபுவ: சாபலதாப்ரஸங்கே^V^ காவா கதா, மானுஷ லோகபா^V^ஜாம்' என்கிறபடி, பெண்பிணி பிடித்த பித்தர்களின் கதியைச் சொல்லவும் வேண்டுமோ என்று பொருள்.

'மெப்புலகை கொப்புலுக^V^ல' என்பதனுல், உயர்ந்த வம்சத்திற் பிறந்து, சிறந்த வம்சத்திற் புகுந்து, பெரியோர்களுடைய சகவாசமும் பேரறிவும் பெற்ற கைகேயிபால் தயரதனுக்கு நாசகாலம் சம்பவித்தது. ஆகவே, 'த்வம் மயாத்ம விநாஸார்த்,ம் ப^V^வநம் ஸ்வம்ப்ரவேஸிதா - அவிஜ்ஞாநாந் ந்ருபஸுதா வ்யாளீ திக்ஷ்ண விஷாயதா,' அதாவது, அறிவின்மையால் என் நாசத்

தின்பொருட்டு ராஜபுத்திரியாகிய உன்னை க்ரூரமாகிய விஷமுடைய சர்ப்பமென் றறியாமல் கொண்டுவந்து வீட்டில் வைத்துக்கொண்டேன் என்று தயாதன் வருந்தி கைகேயியை நிந்தித்தான். நற்குடிப் பிறந்த பெண்மணிகளாலேயே இப்படிப்பட்ட ஆபத்துக்கள் சம்பவிக்குமாயின், 'மெப்புலகை கொப்புலுகல' அதாவது, ஊரிலுள்ள விடர்கள் மெச்சிக்கொள்வதற்காக கொண்டையிட்டுக்கொண்டு திரிகிற துஷ்ட ஸ்த்ரீகளின் சகவாசம் எப்படிப்பட்ட ஆபத்தை விளைவிக்குமென்று சொல்லவும் வேண்டுமோ! அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே ஆபத்து சம்பவிக்குமென்கிறாரென்று பொருள்.

'ருகலகை...பஜந' என்பதனால்; தனம்; வஸ்த்ரம்; ஆபரணம் அன்றேல், வயிறு வளர்ப்பதற்காக அரிசி நொய் முதலிய சாதனங்கள் இவைகளைக் குறித்து பஜனம் செய்தால் அது பயன்படா மாட்டாதென்கிறார். பலாபேக்ஷை இல்லாமல் கருமத்தைச் செய்கிறவனுடைய க்ஷேமத்தைப் பகவான் வகித்துக் கொள்ளுகிறார். பலாபேக்ஷையோடு கருமம் செய்கிறவனுடைய எல்லாப் பொருள்களையும் பகவான் போக்கடித்து விடுகிறார். ஆகவே, பகவானையே நம்பி பஜனம் செய்கிறவனுக்கு எல்லா விதமாகிய சம்பத்தும் பிரார்த்திக்காமலே உண்டாகுமென்கிறாரென்று பொருள்,

சுத்தபங்காளா ராகலக்ஷணம்:—2-வது வால்யத்திற் காண்க.

ப. ஸா ;	ரீமாபா ;	தா ;	ஸ்ாதா ; பா
தப் ;	பக ரே ;	வச் ;	சு நா ; .
பாமா	தாபா - மபதப	பமரீ	ரீகாரீஸா
த நு	வு ந - லம் . .	ப . ட	நீ . க்ருப
ரீ ;	பாமாபா ;	தா ;	ஸ்ாதா ; பா
தப் ;	ப க ரே ;	வச் ;	சு நா ; .
பாமா	தாபா - பதஸ்த	பமரீ	ரீகாரீஸா
த நு	வு ந - லம் . .	ப . ட	நீ . க்ருப
மாரீ	பாமாபா ;	பதபத	ஸ்ா - தஸ்ததபா
தப்.	ப க ரே ;	வச் . .	சு - நா. . . .
ததபா	மபதா - பதஸ்த	பமரீ	ரீகாரீஸா
த . நு	வு . ந - லம் . .	ப . ட	நீ . க்ருப
ரிமரிம	பம - பதபதஸ்ா	ஸ்தரீ	ஸ்ா - தஸ்ததபா
தப் . .	ப . - க . . . ரே	வச் . .	சு - நா. . . .

ததபா	மபதப - பதஸ்ா	‖ தபமரி	ரிகாரிஸா
த . நு	வு . ந . - லம் .	‖ ப . ட.	நீ . க்ருப
ரிமரிம	பம - பதபதஸ்ா	‖ தஸ்ரிம்	ரி - க்ாரிஸ்ா
தப் . .	ப . - க . . . நே	‖ வச் . .	சு - நா . .
க்ரிஸ்த	ரிஸ்தப - ஸ்தபம	‖ ரிமபத	ஸ்தபம - ரிகரிஸ
த. நு .	வு . ந . - லம். . .	‖ ப. ட.	நீ . . . - க்ரு.ப .
ரீ ;	பாமாபா ;	‖ தா ;	ஸாதா ; பா
தப்;	ப க நே ;	‖ வச் ;	சு நா ; .
அ. பாதா	ஸ்ாதாஸ்ா ;	‖ ரீ ;	ம்ா - ரிக்ரீஸ்ா
மெப்.	பு ல கை ;	‖ கோப்;	பு - ளு க ல
ரீ ஸ்ரி	ஸ்ா - தஸ்தாபா	‖ மபதா	பமரிகாரிஸ
மே. .	டி - ஜ . நு ல	‖ ஜ .	சி. பஜ ந .
பாதா	ஸ்ாதாஸ்ாரீ	‖ ஸ்ா ரீ	ப்ம்ரீ - க்ரிஸ்ா
மெப்.	பு ல கை.	‖ கொப்	பு .ளு- க . ல

ரீஸ்தஸ்	தப - ரிமபதஸ்ா	ரிஸ்தஸ்	தப - மரிகாரிஸ
மே . .	டி. - ஜநா. . ல	ஜூ. . .	.சி - ப . ஜ ந .
பதபத	ஸ்த - தஸ்தஸ்ரீ	ரி ப்ம்ா	ரீக்ாரீஸ்ா
மெப் .	பு . - ல . கை .	கொப்.	புலுகல
க்க்ரிரி	ஸ்ா - தஸ்ததபா	ரிமபத	ஸ்ா - பமரிகரிஸ
மே. .	டி - ஜ . நா. ல	ஜூ. .	சி - ப . ஜ.ந .
ரிமரிம	பம - பதபதஸ்த	தஸ்ரிம்	ரிம்ப்ம்ரிக்ரிஸ்
தப். .	ப . - க . . . .நே	வச் . .	சு. . நா . . .
க்ரிஸத	ரிஸ்தப - ஸ்தபத	ரிமபத	ஸ்தபம - ரி கரிஸ
த நு.	வு . கு. - லம். . .	ப ட.	நீ . . . - க்ரு.ப.
ச. பா ;	பாபாபா ;	மபதா	பா - மாகாரீ
ரு ;	க ல கை ;	பை .	கி - மம் . சி
பமரீ	காரீஸா ;	மா ரீ	மாபாதாபா
கோ.	க லகை ;	ஹா.	ர மு ல கு

பாதா	ஸ்ாதாஸ்ா ;	ரீ	ரீ ; ரீஸ்ா
நா .	க லகை ;	த்யா	நிம்; சித்தி
ரீஸ்ரி	ஸ்ா - தஸ்தாபா	மபதா	பம - ரீ காரிஸ
த்யா.	க - ரா. . ஜ	நா. து	நி - பஜந . .
பாதா	ஸ்ா தாஸ்ாரீ	ம்ப்ம்ரி	ரீகா ரீஸ்ா
நா .	க . லநை	த்யா .	நிம் சி த்தி
ரி ஸ்தஸ்	தப - பமப தஸ்ா	ரிஸ்தஸ்	தப - மரிநாரிஸ
த்யா . .	க . - ரா. . . ஜ	நா து .	நி . - ப. ஜ ந .
பநபத	ஸநதஸ்தஸ்ரீ	ரி ப்ம்ா	ரீக்ா - ரீஸ்ா
நா . .	க . ல . கை. .	த்யா.	நிம். - சித்தி
க்ர்ரிரி	ஸ்ாதஸ்ததபா	ரிமபத	ஸ்நபம - ரிநரிஸ
த்யா .	க . ரா. . ஜ	நா நு.	நி . ப . - ஜ. ந .
ரிமரிம	பம - பநபதஸ்த	தஸ்ரிம்	ரிப்ம்ரி - ரிக்ரிஸ்
நா . .	க . - ல . . நை. .	த்யா. .	நிம் . . - சி . . .

ஸ்ரிஸத	ரிஸ்தப - ஸ்தபம	ரிமபத	ஸ்தபம - ரிகரிஸ	
த்யா. க	ரா. . . - ஜ . . .	நா.து.	நி . ப - ஜ. ந .	

அவதாரிகை:—அய்யரவர்கள் இந்தக் கீர்த்தனத்தில் ஆசாரியன் பரமோபகாரி என்பதை விளக்குகிறார்.

(34) கௌˇரீமநோஹரி - ஜம்பை.

ப. குˇருலேக யெடுவம்டி - குˇணிகி தெˇலியகˇபோˇதுˇ (குˇரு)

அ. கறகைந ஹிருத்ˇரோகˇ - கˇஹநமுநு கொˇட்ட ஸத்ˇ (குˇரு)

ச தநுவு ஸுத தˇநதாˇர - தாˇயாதˇ பாˇம்தˇவுலு
ஜநியிம்செந்ˇரு - ஜாலிநி கருணதோ
மநஸு நம்டகசேயு - மம்தˇநுசு தத்வபோˇ
தˇநஜேஸி காபாடுˇ - த்யாகˇராஜாப்துடˇகுˇ (குˇரு)

பத உரை

குˇருலேக - ஆசாரிய னில்லாமல்
எடுவம்டி குˇணிகிந் - எப்படிப்பட்ட குண முடையவனுக்கும்
தெலியகˇ போதுˇ - அறிவதற்கு சாத்திய மாகாது
கறகு ஐந - கடினமாகிய

'ஹ்ருத்^{v}...க^{v}க^{v}நமுனு'

ஹ்ருத்^{v}ரோக^{v} - மனோ வ்யாதியாகிய

க^{v}க^{v}நமுது - காட்டை

கொட்டங் - வெட்டுவதற்கு

ஸத்^{v}கு^{v}ருலேக - நல்லாசிரிய னில்லாமல் (எடுவம்டி கு^{v}ணிகி தெ^{v}லியகபோது^{v})

தநுவு - சரீரம்

ஸுத - புத்திரன்

த^{v}ந - தனம்

தா^{v}ர - மனைவி

தா^{v}யாத^{v} - தாயாதிகள், பங்காளிகள்

பா^{v}ந்த^{v}வுலு - பந்துக்கள்

ஜெநியிஞ்செத^{v}ரு-உண்டாகிறார்கள் (என்ன ப்ரயோஜனம்)

கருணதோங் - கருணையோடு

ஜாலிநி - விசனத்தை

மனஸுந் - மனதில்

அம்டகசேயு - ஒட்டாது செய்கிற

மந்து^{v} அநகங் - மருந்தென

தத்வபோ^{v}த^{v}நங் - தத்துவார்த்த போதனத்தை

சேஸி - செய்து

காபாடு^{v} - காக்கவல்ல

த்யாக^{v}ராஜாப்துடு^{v}கு^{v} - தியாகராஜனுக்கு மிக்க நண்பனாகிய (கு^{v}ருலேக)

விசேஷார்த்தம்:—'கு^{v}ருவு' அதாவது, ஆசாரியன், "ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்தா, நாசாரேஸ்தா,பயத்யபி - ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதா^{v}சார்ய உச்யதே' என்கிறபடி, சாஸ்திரார்த்தங்களைக் கூட்டிப் போதித்து ஆஸ்ருதர்களை நல்லொழுக்கத்தில் நிலை நிறுத்துகிறவனும்;

அதுபோலவே தானும் நன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகுபவனுமா யிருக்கையால் ஆசாரிய னெனப்படுகிறா ரென்று பொருள்.

'கறகைக ஹ்ருத்'ரோக^{V} க^{V}ஹநமுநு கொ^{V}ட்ட ஸத்^{V}கு^{V}ருலேக யெடுவம்டிகு^{V}ணிகி தெலியகபோது^{V}' என்பதனால், எண்ணிறந்த சன்மங்களில்செய்த வினையின்வலியால் அடர்ந்து வளர்ந்திருக்கிற மனநோய் என்னும் காட்டை வெட்டி யொழிப்பதற்கு ஸத்குருவென்கிற கோடாலி வேண்டுமென்கிறார். ஊழித்தீயிற்பட்ட காடானது எப்படி எரிந்தொழிந்து போகுமோ அப்படியே சத்குருவினுடைய ஞானோபதேசத்தால் சீடனது மனத்துயராகிய பெருங்காடு ஒழிந்து போய்விடும். அந்த^{V}காரநிரோதி^{V}த்வாத் குருரித்யபி^{V}தீ^{V}யதே'' என்கிறபடி, அஞ்ஞானமாகிய இருளைப் போக்கடிப்பதினால் குரு வென்று சொல்லப்படுகிறான். பெரு நெருப்பின் முன் இருள் எப்படி நீங்கி யொழியுமோ அப்படியே குருபதேசமென்கிற ஞானத்தீயின்முன் அவித்தை நிற்கா தொழிந்து போகும். ஆகவே குருவென்பவன் ஆஶ்ரிதனால் அடையத்தக்கவன் என்று பொருள். 'எடுவம்டி கு^{V}ணிகி' என்பதனால், எப்படிப்பட்ட யோக்கியதை யுடையவனாயினும் ஆசாரியனை யடையாது க்ருதார்த்தனாகமாட்டா னென்று பொருள். ஆகவே ஆசாரியனை யடைந்தவன் எப்படிப்பட்ட குணஹீனனாக விருந்தபோதிலும் நல்வழிப்படுவானென்பது விளங்குகிறது. 'பாபிஷ்ட:க்ஷத்ரபந்து^{V}ஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் - ஆசார்யவத்தயாமுக்தௌ தஸ்மா தா^{V}சார்யவான் ப^{V}வேத்' என்கிறபடி, மகாபாவியாகிய க்ஷத்ரபந்துவும், மகா

புண்ணியவானுகிய புண்டரீகனும் ஆசாரியனை யடைந்ததினுல் மோக்ஷத்தைப் பெற்ருர்கள் என்று கூறியிருப்பதினுல் மனிதனை உய்யும்படி செய்வது ஆசாரியனுடைய அநுக்ரகமே யல்லாது இவனுடைய குணங்களல்லவென்று பொருள். மேலும், 'ஆசார்யஸ்ய ப்ரஸாதேந மமஸர்வமபி'ப் ஸிதம் - ப்ராப்நுயாமிதி யஸ்யாஸ்தி விஸ்வாஸஸ்ஸ ஸுகீ, ப:வேத்' என்கிறபடி, ஆசாரியனு டைய ப்ரஸாதத்தினுல் என்னுடைய மனோரதங்கள் நிறைவேறின என்று எவன் நம்புகிருனே அவன் சர்வ சுகங்களையும் அடைந்தவனுகிருன் என்பது ப்ரஸித்தம் என்று பொருள். 'ஸத்'கு'ரு' என்கிற விஶேஷணத்தினுல், சிடன் அடையவேண்டிய ஆசாரியனின் லக்ஷணத்தைக் கூறுகிருர். 'ஆசார்யோ வேத' ஸம்பந்நோ விஷ்ணுப:க்தோ விமத்ஸர: - மந்த்ரஜ்ஞோ மந்த்ர ப:க்தஶ்ச ஸதா' மந்த்ராஶ்ரயஶ்ஶுசி:, கு'ருப:க்தி ஸமாயுக்த: புராணஜ்ஞோ விஶேஷத: - ஏவம் லக்ஷண ஸம்பந்நோ கு'ருரித்யபி' தீ:யதே'. என்கிறபடி, வேதாத்தியயனம் செய்தவனுயும், தெய்வபக்தி யுடையவனுயும், த்வேஷமில்லாதவனுயும், மந்திரமறிந்தவனுயும், மந்திரத்தில் பக்தி யுடையவனுயும், மந்திரத்தை அடைந்தவனுயும், பரிசுத்தனுயும், ஆசாரியபக்தி யுடையவனுயும் விசேஷமாய்ப் புராணங்களைப் படித்தவனுயு மிருப்பவன் நல்லாசிரியன் எனப் படுகிருன், இவனே சிடனு லடையத் தகுந்தவ னென்று பொருள்.

'தநுவு...அகு' கு'ருவு' என்பதனுல், தனது உடல், புத்திரன் தனம், மனைவி,தாயாதிகள், பந்துவர்க்கங்கள் என்பனவெல்லாம் கர்மானுசாரமாய் அப்போதைக் கப்போது உண்டாகி நசித்

துக்கொண் டிருப்பவைகளே யல்லாது அவைகள் எத்துணையும் உயிர்த்துணையாகா வென்றும், ஆசாரியனுடைய சம்பந்தம் ஊழ்வினையைப் போக்கி மனிதனை உய்யும் வண்ணம் செய்யவல்ல தாகையால் சதாசாரியனை யடைந்து அவனருளைப் பெறுவதே பரம பாக்கிய மென்றும் கூறு கிறார்.

கௌ^ர்மனோஹரி ரா^கலக்ஷணம்:—இது சம்பூர்ணராகம். 23-வது மேளகர்த்தா. ஸர்வ ஸ்வர ஸம்பூர்ண கமக வரிக ரக்திராகம். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி க ம ப த நி ஸ.	ஸ நி த ப ம க ரி ஸ.

ப. பா்பா-பா ;பா-மாமா	மக	காரீ	‖ ரீ ந்ீ ஸா - ரீ காமாபா	தா	நீந்ீ	‖
குரு -லே; க -யெடு	வம்	. டி	‖ குணிகி - தெலிய க	போ	. து	‖
2. ,,			‖ ;,	த நி	ஸ்ரிஸ்ா	‖
,,			‖ ;,	போ.	. . து	‖
3. பாதாபா;பா-மாமா		,,	‖ ரீ ந்ீ ஸா			
குருலே ;க -யெடு		,,	‖ குணிகி இவ்விடத்தில் நிறுத்தவும்.			

அ. தாதாஸீஸ்ஸாஸ்ஸா-ஸ்நிதா	நிஸ்	ரீரீ	நிநிநிநிநி -நிதபா	தா	நீ ;	
கறகை. ந -ஹ்ருத்	ரோ	.க	கஹநமுநு - கொட்	ட	ஸ;	
ச. பாபா-பாபாபா-மாமா	மக	காரீ	ரீகாமா;கா-ரிகமா	கா	ரீஸா	
தநு -வுஸுத - தந	தா	. ர	தா.யா; த-பாம்.	த	வுது	
ரீகாமாபாதா - நீநீ	தா	நிதபா	மாமாமக - காரீ ஸா ;	;	; ;	
ஜநிமிம். . -செந	ரு	ஜா .	வெ நி க. - ருணதோ;	;	; ;	
ரீகா மா-மககா-ரீரீ	ஸா	; ஸா	ரீ காமாபாதா - நீநீ	தா	நிதபா	
மநஸு-நம் . -டக	சே	; யு	மம் . தநுசு - கத்	வ	போ .	
தாதாஸ்ா; ஸ்ா-ஸ்நிதா	நிஸ்	ரீரீ	நி . ; நீ நீ ; - நிதபா	தா	நீ நி	
தநஜே; வி-கா. .	பா.	.டு	த்யா; கரா ; - ஜாப்.	து	டகு	

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், பகவான், வாயினல் பாடவும் மனத்தினுற் சிந்திக்கவும் சாத்தியப்படாத அபார மகிமைகளை உடையவ னென்கிறுர்.

19—C

(35) வீரவஸந்தம் - ஆதிˇ.

ப. ஏமநி பொகˇடுˇதுˇரா - ஸ்ரீராமா நின் (நேமநி)

அ. ஸ்ரீமந்ந போˌˇமணி வம்ஶலலாம - ராம புˌˇவநவாஸீ மாராம நின் (நேமநி)

ச. ஶிவுநிகி தாமஸகுˇணமிச்சி கமல - பˌˇவுநிகி ராஜஸகுˇணமொஸகிˇ ஶசி
தˌˇவுநி கˇர்வஹ்ருதˇயுநிகாˇ ஜேஸிந - தாˇஶரதீˌ த்யாகˇராஜநிருத நின் (நேமநி)

பத உரை

ஸ்ரீராமா - ஸ்ரீராமா
நிந்நு - உன்னை
ஏமி அநி - என்னென்று
பொகˇடுˇதுˇரா - கொண்டாடுவேனடா
'ஸ்ரீமத்...லலாம'
ஸ்ரீமத் - ஸம்பத்கரமாகிய
நபோˇமணி - சூரியனுடைய
வம்ஶ - வம்சத்திற்கு
லலாம - திலகம் போன்றவனே
ராமா - ஸ்ரீராமா
புˌˇவநவாஸி - பூமியில் சிறப்புற்றவனே
மாராமா - எம்முடைய மனதை ரமிக்கச் செய்கிறவனே
ஶிவுநிகி - சிவனுக்கு
தாமஸகுˇணமு - தமோகுணத்தை
இச்சி - கொடுத்து
கமலபˌˇவுநிகி - பிரமனுக்கு
ராஜஸகுˇணமுநு - ரஜோகுணத்தை
ஒஸங்கிˇ - அளித்து
ஶசிதˌˇவுநி - இந்திரனை

க^v^ர்வஹ்ருதயுநிகா^v^ சேஸிந - கர்வமுள்ள மனதுடையவனைச் செய்த

தா^v^ஶரதி^|^ - தசரதராமா

த்யாக^v^ராஜவிநுத - தியாகராஜனால் கொண்டாடப்பட்டவனே

நிந்நுந் - உன்னை (எமநி)

விசேஷார்த்தம்:—'நிந்நேமநி பொக^v^டு^v^து^v^ரா? ஸ்ரீராமா! ஸ்ரீமந்நபோ^|^மணி வம்ஶலலாம பு^|^வநவாஸி மாராமா' என்கிற விசேஷணங்களினால், ஸ்ரீராமன் சிறப்புற்றோங்கிய ரகுகுலத் துதித்த சக்ரவர்த்திகளிற் சிறந்தவனென்றும், ஸர்வலோக ஶரண்யனாகிய ஸ்ரீமந் நாராயணனேயென்றும் ஸ்ரீராமனுடைய பரத்வ வைபவத்தைச் சொல்லி, அப்படிப்பட்ட பகவானை நானென்னென்று கொண்டாடுவேன் என்கிறார். 'ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம், ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய' என்கிற வாக்கியங்களிற் சொல்லியபடி, ஸர்வ நியாமகனாயிருக்கிற பகவானை நான் என்னென்று கொண்டாடுவேன்? என்கிறார். மேலும், 'மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித^v^ஸ்தி தநஞ்ஜய - மயி ஸர்வமித^v^ம் ப்ரோதம் ஸூத்ரே மணிக^v^ணாயிவ' என்கிறபடி, கயிற்றில் கோக்கப்பட்ட மணிகளைப்போல் எல்லாம் பகவானுடைய ஆதாரவிலிருக்கின்றன. அவனை யல்லாது இப்பிரபஞ்சத்தில் மற்றொன்றில்லை. மேலும், 'ஏஷதா^|^தா விதா^|^தாச ஸர்வேஷாம் ப்ராணிநாம் ப்ரபு^|^: - பரம் ஹி புண்டரீகாக்ஷாந் நபூ^|^தம் நப^|^விஷ்யதி' என்கிறபடி, எல்லாப் பிராணிகட்கும் பிரபுவாயும், ஸ்ருஷ்டிகர்த்தாவாயும், ரக்ஷகனாயும், கமலத்தைப்போன்ற கண்களுடையவனாயும்; தனக்கதிகமாகிய

எல்லே இல்லாதவனுயும், புராணபுருஷனுயு மிருக்கிற பகவானை என்னென்று கொண்டாடு கிறது என்கிருர்.

'சிவுநிகி த்ாமஸ கு^vணமிச்சி...தியாக^vராஜ விநுத நின்நேமநி பொக^vடு^vது^vரா' என்பதனுல், பரமாத்மாந மீசாநம் தமஸா ருத்ரரூபிணம் - ரஜஸா ஸர்வலோகாநாம் ஸர்க^vலீலா ப்ரவர்த்த கம் - ஸத்வேந ஸர்வபூ^vதாநாம் ஸ்தா,பகம் பரமேஸ்வரம் - ஸர்வாத்மாநம் மஹாத்மாநம் பரமாத் மாந மீஸ்வரம்' என்கிறபடி, பரமாத்மாவாயும், ஸர்வேஸ்வரனுயும், ஸத்வகுண ஸம்பந்ந னுயும், தனது ரஜோகுணத்தில் பிரமனையும், தமோகுணத்தில் உருத்திரனையும் ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதி லீலேகளேச் செய்கிறவனுயு மிருக்கிற பகவானுடை மகிமைகளே யாரெடுத் துரைக்க வல்லவரென்கிருர். மேலும், 'நஸமர்தா,ஸ் ஸுரா: ஸ்தோதும் யமநந்த மஜம் விபு^vம் - ஸ்வரூபவர்ணநம் தத்ர கத,ம் யோஷித் கரிஷ்யதி - ஸ்த்ரீயோநுகம்ப்யாஸ் ஸாது^vநாம் மூடா^v தீ^vநாஸ்சஜம்தவ: - யதஸ்ததோஸ்ய தீ^vநஸ்ய க்ஷம்யதாம் வத^vதாம்வர' என்று காளியனுடைய மனைவிகள் பிரார்த்தித்த மாதிரியாய், அநந்தனுய், பிறப்பில்லாதவனுய், எங்கும் நிறைந்திருக்கிறவ னுய் விளங்குகின்ற பகவானுடைய ஸ்ரூபரூப குணவிபூதிகளின் மகிமைகளே எடுத்துரைப்பதற்கு தேவர்களே சக்தியற்றவர்களாக விருக்கும்பொழுது மற்றவர்கள் எம்மாத்திரம்? தன்னுடைய நிர்ஹேதுக க்ருபா கடாக்ஷத்தினுல் ஸாதுக்களேயும், ஸ்திரீகளேயும், மூடர்களேயும், தீனர்களே யும், மற்றுமுள்ள பிராணி சமூகங்களேயும் காப்பாற்ற வல்ல பகவான், தாஸாநுதாஸனுன என்

னையும், காப்பாற்றவேண்டுமேயல்லாது, அற்பனுகிய நான் செய்யும் ஸ்தோத்திரத்தினல் அவனை வசப்படுத்தி அவனுடைய க்ருபைக்குப் பாத்திர மாகலாமென்பது சாத்தியப் படாத காரியமென்று அய்யாவர்கள், ஸ்ரீராமசந்திரனுடைய நிர்ஹேதுக ஜாயமான கடாக்ஷத்தைப் பிரார்த்திக்கிறு ரென்று பொருள்.

வீரவஸந்த ராக லக்ஷணம்:—இது ஔடவ வக்ர ஸம்பூர்ணராகம். 24-வது மேளமாகிய வருணப் பிரியாவில் ஜன்யம். ஸாதாரண காந்தார ஷட்ச்ருதி ரிஷப ஷட்ச்ருதி தைவதங்கள் இராகச் சாயா ஸ்வரங்கள். ஆரோஹணத்தில் காந்தார ரிஷபங்கள் வக்ரம். அவரோஹணத்தில் காகலீ நிஷாதம் அற்பம். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.
ஸ க ரி ம ப ஸ.

அவரோஹணம்.
ஸ நி த ப ம க ரி ஸ.

ப. ; *	ஸகாரிமா - பா பமகரிமா	பா ; ; - ;	; ; - பமகரி	‖
; *	எ . மநி - பொ.க . டுது	ரா ; ; - ;	; ; - ரா.:மா	‖
ஸநி*	ஸகாரிமா - ,,	பா ; ; - பா	,,	‖
நிந்*	நே . மநி - ,,	ரா ; ; - ஸ்ரீ	,,	‖
ஸநி*	,,	பா ; ; - தா	; பம - கமகரி	‖
நிந்*	,,	ரா ; ; - ஸ்ரீ	; . . - ரா. . .	‖

ஸநி*	,,	பா ; ; - ஸ்நி	தா ; - பமகரி	‖
நிந்*	,,	ரா ; ; - ஸ்ரீ	ரா ; - மா . .	‖
ஸநி*	,,	பாஸ்நிஸ்ா - ஸ்நி	,,	‖
நிந்*	,,	ரா . . . - ஸ்ரீ.	,,	‖
ஸநி*	ஸகாரிமா - பமகரிமாபா	ஸ்நிஸ்ா ; ஸ்நி	,,	‖
நிந். *	நே ம நி - பொ.க. டு து	ரா. . ; ஸ்ரீ.	,,	‖
ஸநி*				
நிந். *	(நேமநி)			
அ. ; *	பா , ஸ்ாநி - ஸ்க் ரி ம்ா க்ரீ	; ஸ்ா , க்ரீ	ஸ்ா ; ; ஸ்ா	‖
; *	ஸ்ரீ , மன். - ந . போ. மணி	; வம் , ஶல	லா ; ; ம	‖
; *	,,	; ரிக்ாக்ரீ	ஸ்ா , நி - தா ;	‖
; *	,,	; வம் ஶல	லா , . - ம ;	‖
; *	பா , தா , பாமாகாரீ	ஸா - ஸ்காரிமா	பதாபம - பமகரி	‖
; *	ரா , மா , பு த ந வா	. - ஸீ . மா.	ரா. . . - ம. . .	‖

ஸநி*
நிந். * (நேமநி)

ச.	;	* பபாபமா - பமகரி - ஸரிஸா	; - ஸகாரிமா	பமகரி - மாமா	‖
	;	* பவிவுநிகி - தா . . - ம . ஸ	; - குணமிச்.	சி . க . - மல	‖
	;	* பதாபமா - பமகாரீஸா	; - ஸஸா க ரீ	மா ; பாபா	‖
	;	* ப வுநி கி - ரா. . ஜஸ	; - குணமொஸ	கி ; ம சி	‖
	;	* மபாஸ்ஸ்ா - க்ரிம்ா , க் ரீ	; - ஸ்நிக்ரீ	ஸ்ா ; ஸ்ாஸ்ா	‖
	;	* தவு நி கர் - வ. . , ஹ்ரு	; - தயுநிக	ஜே ; வஸி ந	‖
	;	* ,,	; - ரிம்ாக்ரீ	ஸ்ா ; நிதா	‖
	;	* ,,	; - தயுநிக	ஜே ; வஸிந	‖
	;	* பா , தா , - பாமாபமகரி	ஸா - ஸகா - ரிமா	பதபம - பமகரி	‖
	;	* தா ; ம , - ர தி . த்யா	க - ரா . - ஜ .	வி நு - த . . .	‖

ஸநி*
நிந், * (நேமநி)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள் தமக்கு ஸேவை தந்து மறைந்து போன ஸ்ரீராமசந்திரன் மறுபடியும் ஸேவை கொடுப்பதற்கு வராமலிருந்த பொழுது; 'ஓ! மனதே! இதுவரையிலும் என்மேல் கருணைகொண்டிருந்த ஸ்ரீராமனுக்கு இப்போது பராமுகமேற்பட்டது என்ன? நீ ஏதாகிலும் அபராதம் செய்தனையோ' என்று ஸங்கடப் படுகிறார்.

(36) மாரரஞ்ஜநி - ஆதி^{v}.

ப. மநஸா ஸ்ரீராமுநி த^{v}யலேக - மாயமைந வித,^{v}மேமி (மந)

அ. க,^{v}ந து^{v}ரிதம்முல கோ^{v}டக^{v}ட்டி நா - கார்யமுல ஜெறிசிதிவோ (மந)

ச. பரதா^{v}ர பாத,^{v}கமுல காஸ - படி^{v} செடி^{v} திரிகி^{v}திவோ லேக
பர ஜீவாத்முல ஹிம்ஸிம்சிதிவோ - வர த்யாக^{v}ராஜநுதுநி மறசிதிவோ (மந)

பத உரை

மநஸா - ஓ மனதே
ஸ்ரீராமுநி - ஸ்ரீராமனுடைய
த^{v}ய - கிருபை
லேக - இல்லாமல்
மாயமு ஐந - மாயமாய்ப் போன
வித,^{v}மு ஏமி - காரணம் என்ன (மநஸா)
'க,^{v}ந து^{v}ரிதமுலந்'
க,^{v}ந - மிகுதியான
து^{v}ரிதமுலந் - பாபங்களை

கோடகட்டி - கோட்டையாய்க் கட்டி (நிரம்பச் செய்து)
நா கார்யமுலந் - என்னுடைய கார்யங்களை
செறசிதிவி ஒ - கெடுத்தாயா என்ன ?
'பரதார பரத,நமுலகு'
பரதார - இதரர்களுடைய பார்வைகள்
பாத,நமுலகு - இதரர்களுடைய பொருள்களுக்கு
ஆஸபடி - ஆசைப்பட்டு
செடி திரிகி திவோ-கெட்டுத் திரிந்தனையோ
லேக - இல்லையேல்
பர ஜீவாத்முலந் - பிற ஆத்துமாக்களை
ஹிம்ஸிஞ்சிதிவோ-ஹிம்ஸைசெய்தனையோ
வர த்யாகராஜ நுதுசி - சிறந்த தியாகராஜனால் கொண்டாடப்பட்ட ஸ்ரீராமனை
மறசிதிவோ - மறந்து போயினையோ ?
(மநஸா)

விசேஷார்த்தம் :—'மநஸா ஸ்ரீராமுநி தயலேக மாயமைந விதமேமி?' என்பதனால் அய்யரவர்கள் ஸ்ரீராமனுடைய பிரிவாற்றுமையைச் சகியாதவராகி, 'கத,ம்நாம மஹாபாஹு: ஸததா, விசதி, க்ரிய: - ப,க்தம் ஜநம் பரித்யேஜ்ய ப்ரவாஸம் ராக,வோகத:, யோநஸ்ஸதா பாலயதி பிதாபுத்ராநி வௌரஸாந் - கத,ம்ரகூ,ணாம் ஸஶ்ரேஷ்டாஸ் த்யக்த்வாநோ விபிநம் கத:, இஹைவ நித,நம்யாமோ மஹாப்ரஸ்தா,நமேவவா-ராமேண ரஹிதாநாம்ஹி கிமர்தம் ஜீவிதம் ஹி ந:, ஸந்திஶுஷ்காநி காஷ்டா,நி ப்ரபூ,தாநி மஹாந்திச - தை:ப்ரஜ்வால்ய ஜிதாம்ஸர்வே ப்ரவிஶாமோத,பாவகம்' அதாவது, அழியாத கார்யமுடையவனும், மஹாபுஜபலபராக்ரம

முடையவனுமாகிய ஸ்ரீராமன் பக்தஜனங்களை இவ்விடம் விட்டுக் காட்டுக்கு எப்படிச் சென்றனனோ? வயிற்றிற் பிறந்த பிள்ளையை எப்பொழுதும் பிதா போஷிக்கிறபடி எங்களை ஸதா ரக்ஷித்துக் கொண்டிருந்தவனும், ரகுகுலத்திற் சிறந்தவனுமாகிய ராமன் எங்களைவிட்டு எப்படித் தான் அரண்யத்துக்குச் சென்றான்? இவ்விடத்திலேயே பிராணத்தியாகம் செய்துகொள்ள வேண்டும் நாம். இன்றேல் மஹாப்ரயாணம் செய்யவேண்டும். அன்றேல் ராமனைப் பிரிந்து பிரயோஜனந்தான் என்னை? ஸ்ரீராமனைப் பிரிந்திருப்பதை விட. இவ்விடத்தில் உள்ள கட்டைகளை எல்லாம் பொறுக்கிப் பெரிய நெருப்புண்டாக்கி அதில் விழுந்துவிடுவோமா! அந்தோ தெய்வம் சதி செய்தது. நாம் என் செய்வோம்? என்று ஸ்ரீராமனது பிரிவாற்றாமையால் அயோத்திமக்கள் வருத்தம் அடைந்ததுபோல், அய்யரவர்கள் வருந்துகிறாரென்று பொருள்.

விசேஷார்த்தம்:—'செம்தநே ஸதா^v யும்சுகோ வய்யா' என்பதனால், 'தவாம்ருதஸ்யம்தி^v நி பாத^v பம்கஜே நிவேஶி தாத்மா கத, மங்யதி^v ச்ச,தி' என்கிறபடி, அய்யாவர்கள் ஸ்ரீராமனுக்கு அத்யந்த அந்தரங்க கைங்கரிய பராய் இருக்க விரும்பினவராய், "ஓ ராம! நான் எவ்வித பதவியாலும் திருப்தியடையமாட்டேன். உன் மருங்கே என்னை இருக்கச்செய்து உனது பாதசேவையை எனக்குக் கிருபை செய்தருளவேண்டு" மென்று பிரார்த்திக்கிறார்.

'மம்துகெக்கு...ஸ்ரீ காம்தா' என்பதனால், "ஸ்ரீராமா! மலைகள் குன்றுகள் மரங்கள் முதலியவைகளில் குதித் தோடுவதும், நிலையில்லாத சித்த வ்ருத்தியுடையது மாகிய குரங்கு மரபில்வந்த அநுமான் உன்னுடைய கைங்கரியத்தில் நிலைகொண்ட மனதுடையவனாய், 'ப^vக்த்யாநிபச்சிதா வீரா பா^vவோநாங்யத்ர க^vச்சதி' என்கிறபடி, உன் பக்தியைவிட மற்றொன்றும் தனக்கு வேண்டாமென்று உனக்குச் சேவை செய்யவில்லையா? என்னையும் அவ்வாறு கடாக்ஷிப்பையேல் நான் உனக்கு மிகவும் சிறந்த வேலைக்காரனாயும் சிநேகிதனாயு மிருப்பே" னென்கிறார்.

'தலகினபநல...ப^vரதுநிவலெ' என்பதனால் "ஸ்ரீராமா! அனுமந்தன் நீ சொன்ன காரியத்தைச் செய்தான். நானோ வெனில் உன்னுடைய பக்திபலத்தினால் நீ நினைத்த காரியத்தைச் செய்யவல்லேன். மேலும் பரதனுடைய ஸ்தானத்தையும் எனக்குக் கொடுக்கவேண்டும்" என்கிறார். அதாவது பரதன் ஸ்ரீராம பாதுகையை யடைந்து ராஜ்ய பாரத்தைச் செலுத்தியதுபோல் அய்ய

ரவர்களும் ஸ்ரீராம பாதுகையை யடைந்து தமது மனோராஜ்ஜியத்தை யாளக் கருதுகிறு ரென்று பொருள்.

27—C

ப. ; ; ; *	ஸாமாபா ; தா	நிதநீ ; - பத	நீ - நி ததாபா ‖
; ; ; *	செம்தநே; ஸ	தா . ; - உஞ்	சு - கோ. வய் . ‖
2. பமமா ; *	,,	,,	நித - ஸ்நிநித - தப ‖
ய . . ; *	,,	,,	சு. - கோ . . - வய் ‖
,, *			
,, *	(செம்தநே)		
அ. ; ; ; *	நீ நீ - தாஸ்ாஸ்ா	ஸ்ா ; ; - ம்ா	ம்ா - ம்ம்ாப்ம்ா ‖
; ; ; *	மம்து- கெக் .கு	ஸ்ரீ ; ; - மம்	து - டௌ.ஹ ‖
ம்ா ; ; *	ஸ்ாஸ்ா - ஸ்நிநீநீ	தாஸ்நிநீ - நித	தா-பதநித- மப ‖
று ; ; *	மம் து - ரீ . . தி	கா . . . - ஸ்ரீ	. - . . . . -காம் ‖
தப-பமமா *			
, .-த . . *	(செம்தநே)		

ச. ; ; ;	*	பாபாமா ; மா	பாமா ; - ஸா	ஸா - ஸந்தாதா ‖
; ; ;	*	த ல சி ; ந	ப நு ; - ல	நு - நே. . தெ ‖
பாபா ;	*	தாந் - தஸஸாந்	தாஸந்தப - தா	தாஸா ; தா ‖
வெலி ;	*	த ல - தோ . ந	டி சி . . . - ஸம்	த ஸில்; து ‖
ஸாஸா;	*	நீ நீ தா - ஸ்ாநீ	தாஸ்ாஸ்ா - ம்ா	ம்ாம்ம்பாம்ா ‖
து ர ;	*	பலுமா - . று	பல் . க - ப	நி லே . து ‖
ம்ா ; ம்ா	*	ஸ்ாஸ்ா - ஸ்நிநீநீ	நிததா ; - நி த	தா - பதநித - மப ‖
ரா ; ம	*	ப ர - து . . நி	வ லெ ; - த்யா	க - ரா. . . - ஜ. ‖

தபபமமா *

நு. த. . * (செம்தநே)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், ஸ்ரீராமா! நானெவ்வளவோ உண்மையாய் உன்னை பஜநம் செய்கிறேன். நீயோவெனில் என் பொருட்டுக் கொஞ்சமேனும் கருணை காட்டாதிருக்கிறாய். இது நியாயமா? என்கிறார்.

(54) கோகிலத்,'வனி - ஆதி'.

ப. கொநியாடெ'டு' நாயெட' த'ய வெலகு - கொ'நியாடெ'த'வுஸாமீ ராம நிந்நு (கொ)

அ. அநயமு நீ ஸொக'ஸாநு கநிபொம்கு'சு - அம்தரமுந நதி ப்ரேமதோ நிநு (கொ)

ச. விம்தவிம்த மதமுலலோ ஜொரப'டி' - வெதஜெம்த'க' லேட'நு நீ மநஸாந
கிம்த தெ'லிஸி த்யாக'ராஜஸந்நுத - ஏவேள நு நீ ஸாப,' சரிதம்பு'நு (கொ)

பத உரை

ராமா - ஸ்ரீராமா

நிந்நு - உன்னை

கொநியாடெ'டு' - பிரார்த்திக்கிற

நாயெட'ந் - என் பொருட்டு

த'ய - கிருபையை

வெலகுகொ'நி - விலைக்கு வாங்கி

ஆடெ'த'வுஸாமீ - பேசுகிறாய் அப்பா

அநயமு - அனவரதம்

நீ - உன்னுடைய

ஸொக'ஸாநு - அழகை

கநி - கண்டு

பொங்கு'சுந் - உளமகிழ்ந்துகொண்டு

அம்தரமுநந் - அந்தரங்கத்தில்

அதிப்ரேமதோ - மிகுந்த ஆசையோடு

நிநு - உன்னை (கொநியாடெ'டு'...யாடெ'த'வு)

விம்தவிம்த - விந்தை விந்தையாகிய

மத'முலலோந் - மதங்களில் (பற்பல சமயங்களில்)

சொரப'டி' - பிரவேசித்து

வெத செந்க^v^ங்கந் லேட^v^நு - கஷ்டப்பட வல்லேனல்லை
த்யாக^v^ராஜ ஸந்நுத - தியாகராஜனால் கொண்டாடப்பட்ட ராமா
நீ மநஸுகுந் - உன் மனதிற்கு
இம்த தெலிஸி - இவ்வளவு தெரிந்தும்
(இந்த விஷயத்தை நீயறிந்தும்)
எவேளநு - எப்பொழுதும்
நீ ஸுப^v^சரிதம்முநு - உன்னுடைய நற்சரித்திரங்களை
(கொநியாடெ^v^டு^v^...பாடெ^v^த^v^வு)

விசேஷார்த்தம்:—'கொநியாடெ^v^டு^v^ நாயெட^v^ த^v^ய வெலகு^v^ கொநியாடெ^v^த^v^வு ஸுமீ' என்பதனால், ஸ்ரீராமா! என்னுடைய ஸர்வஸ்வமும் நீயே என்று நான் உன்னையே பஜநம் செய்கிறேன். நீயோ வெனில், கிருபாநிதி என்கிற பெயரை வஹித்தும்; என் பொருட்டு கருணை காட்டுமிடத்து மாத்திரம் உன் கருணைக்கு விலை மதிப்பிடுகிறா யென்று தோன்றுகிறது. நீ கருணையை விலைக்குவாங்கி விற்கிற வர்த்தகனா? கருணைக்கடல் என்கிறபேர் உனக்கென்ன மங்களமாய் ஏற்பட்டதா? என்று ஸ்ரீராமனோடு வாதுசெய்கிறாரென்று பொருள்.

'அநயமு நீஸொக^v^ஸுநு கநி பொங்கு^v^சு...அதி, ப்ரேமதோ நின்னு கொநியாடெ^v^டு^v^' என்பதனால், ஸ்ரீராம! 'அசிம்த்ய தி^v^வ்யாத்^v^பு^v^த நித்ய யௌவந ஸ்வபா^v^வ லாவண்ய மயா ம்ருதோத^v^தி^v^ம் - ஶ்ரிய: ஶ்ரியம் ப^v^க்தஜநைக ஜீவிதம் ஸமர்த, மாபத்ஸக, மர்த, கல்பகம்' என்கிறபடி,

மனதினாலும் எண்ணி அளவிடமுடியாததும், ப்ரகிருதி சம்பந்த மில்லாததும், ஆச்சரியமாயது மாயிருக்கிற நித்ய யௌவநத்தையே ஸ்வபாவமாக உடையவளா லாவண்யம் நிறைந்த அம்ருத சமுத்திரம் போன்று விளங்குகிற ஸ்ரீமகாலக்ஷ்மியினுடைய அழகையே கொள்ளைகொண்டு, 'ஶ்ரிய: ஶ்ரிய:' என்கிறபடி, லக்ஷ்மிதேவிக்கே லக்ஷ்மியாய் விளங்குகிற உன் திருமேனியின் வனப்பையே அனவரதம் சேவித்தும்; விரும்பியதைக் கொடுக்கக்கூடியவனாயும், ஆபத்காலத்தில் பந்துவாயும், எம்போலிய பக்தர்கட்கு முக்கிய ஜீவனமாயு மிருக்கிற உன்னையே, 'ப॒வந்தமே வாநுசரந் நிரந்தரம்' என்கிறபடி, இடைவிடாது மிகுந்த பிரீதியோடு கொண்டாடியும் நிற்கிற என் பொருட்டாகவா நீ தயவு காட்டயோசிப்பது? இது உன்னுடைய ஸ்வபாவகுணத்திற்கு விரோதமல்லவா? என்று மன்றாடுகிறாரென்று பொருள்.

'விம்தவிம்த...நீ ஸுப॒சரிதம்முது' என்பதனால், மகான்கள் சிலர் பற்பல மதங்களிலும் புகுந்து ஆய்ந்தறிந்து முடிவில் ஹரிபக்தியினும் சிறந்ததாகிய மதமொன்றேனும் கிடையா தென்று இம்மதத்தையே தழுவி உஜ்ஜீவித்தார்கள். அப்படியெல்லாம் உழன்று திரிவதற்கு எனக்கு வயது போதாது. சக்தியும் கிடையாது. உன்னை யல்லாது மற்றொரு தெய்வத்தைத் தொழவும் என்மனம் செல்லாது. இந்த விஷயம் உன் திருவுள்ளத்திற்குத் தெரிந்ததே. அப்படி யிருந்தும் என் பொருட்டு கருணை காட்டாதிருப்பது தரும மல்ல என்கிறாரென்று பொருள்.

கோகிலத்வனி ராகலக்ஷணம்:—இது வக்ர ஷாடவ வக்ர ஸம்பூர்ணராகம். 28-வது மேளத்திற் பிறந்தது. சுத்த மத்யம சதுஸ்ருதி தைவதங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள் எப்பொழுதும் பாடக் கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி க ம த நி த ஸ	ஸ நி த நி ப ம க ரி ஸ

ப. மா நீ - நிததா - ஸ்ாஸ்ா - ஸ்நிதநி	பாபா - நீதா	ஸ்நிதநி - பமமா	‖
கொநி- யா . - டெ டு - நா. . .	யெட - த ய	வெல. . - கு. .	‖
பாமா - மககரி - ஸாஸா - ஸாஸா	ஸ்ரிகாரீ - ரிக	மாமா - மாதா	‖
கொநி - யா . . - டெ த - வு ஸு	மீ . . . - ரா	. ம - நிநு	‖
அ. ; மதா - மதாஸ்ா - ; ரீ ரீ -	ஸ்ரிக்ா - ரிக்மா	மக்க்ரி - ஸ்ாஸ்ா	‖
; அந - யமு நீ - ஸொக-	ஸுநு - க . நி	பொங் - கு சு	‖
; ஸ்ா , நிதா - ஸ்நிதநிபாபா -	மககரி - ஸாஸா	ஸரிகா - ரிகமா	‖
; அம், த ர - முந . ந . தி -	ப்ரே. - . ம	தோ . - நிந்நு	‖
ச. பா ; பாபா ; மா - தாதா	தாநீ பா ; -	; க மாகரீ	‖
ஷிம் ; தஷிம் ; த - ம த	முலலோ; -	; ஜொரபடி	‖

பாமா - மககரி - ஸாஸா - ஸரிகா	ரீ - ரி கமா ;	மாமா - பாபா	‖
வெத - ஜெம். - த க - லே .	. - டநுநீ ;	ம ந - ஸா ந	‖
; மதா - மதா - ஸ்ா ; - ஸ்ரிக்ா	ரிக்ம்ா - ம்க்க்ரி	ம்க்க்ரி - ஸ்ாஸ்ா	‖
; கிம்த - தெலி- வி ; - த்யாக	ரா . - . . ஜ.	ஸங். . - நு த	‖
ஸ்ா ; - ஸ்நிநீ - நிததாபா ;	; ம மாகரீ	ஸரிகரி - காமா	‖
ஏ ; - வே . - ள. நு நீ ;	; ஸாப சரி	தம் . . - பு நு	‖

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், அநவரதமும் தனக்கு ஸ்ரீராமனுடைய சேவை கிடைக்கா திருப்பதைப் பற்றி, ஊழ்வினைப்பயன் எப்படியோ என்று சிந்திக்கிறுர்.

(55) கோகிலத்வனி - ஆதி.

ப. தொலி நேநு ஜேஸின பூஜா - ப₁ல மீலாகே (தொ)

அ. வெலவேஸி தீயக வச்சுநா - வெத தீருநா மநஸாரக (தொ)

ச. பரமாத்ம நீ காயாஸபட - ப நிலேது ரா கருணகர

வரபக்தவேஷமு வேயுவேள - வர்ஜ்யகாலமேமோ த்யாக ராஜநுத (தொ)

பத உரை

தொலி - முன், (முன்சன்மங்களில்)
நேந் - நான்
சேஸிந - செய்த
பூஜா - பூசையினுடைய
ப₁லமு - பயன்
ஈலாகு^v எ - இப்படிப்பட்டதே
வெலவேஸி - விலை கொடுத்து
தீயங் கந் வச்சுநா - வாங்க முடியுமா
வெததீ^v றுநா-சங்கடம் நீங்குமா
மநஸாரங் கந் - என் மனமார (நான் முன் செய்த பூசையில்லை என்று நினைக்கிறேன்)
பரமாத்ம - பரமபுருஷனே
கருணாகர - தயை புரிபவனே
த்யாக^vராஜநுத - தியாகராஜனால் துதிக்கப் பட்டவனே
நீகுந் - உனக்கு
ஆயாஸபடந் - ஆயாசப்படுவதற்கு
பநிலேது^vரா - காரண மில்லையடா
வரப^v₁க்தவேஷமு - சிறந்த பக்தன் என்கிற வேஷத்தை
வேயுவேளந் - பூண்கிற சமயம்
வர்ஜ்ய காலமேமோ - விலக்கக்கூடிய கால மோ என்னவோ ?

விசேஷார்த்தம்:—'தொலிநே ஜேஸிந பூஜாப₁ல மீலாகே^v' என்பதனால், 'க்₁யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஸ்ச ஸாநுக்ரோஶஸ்ச ராக₄வ: - ஸத்^vவ்ருத்தோ நிரநுக்ரோஶ: ஶம்கேமத்பா₁க்ய ஸம்க்ஷயாத' அதாவது, தோஷத்தோடு கூடி யிருந்தபோதிலும் நற்குணத்தையே கிரகிக்கப்பட்

டவன். அற்பமாகிய உபகாரத்தைப் பெரியதாக நினைத்து எப்பொழுதும் ஞாபகத்திலேயே வைத்துக்கொண் டிருப்பவன். ஆஸ்ரிதர்கட்கு அற்பமாகிய துக்கம் சம்பவித்தபோதிலும் அதற்காகத் தான் அதிகமாய்த் துக்கப்படுகிறவன். இதரனுடைய க்ஷேமத்தையே கோருகிறவன். சத்ருக்களாலும் கொண்டாடப் பட்டவன். இப்படிப்பட்ட ஸ்ரீராமன், பரம துர்ஜன சபையையடைந்திருக்கிற என் பொருட்டு தயவுசெய்து இங்கு வராமலிருக்கிறது என்னுடைய பாக்கியமில்லாமையே, என்று அசோக வனிதையில் சீதாதேவி வருந்திய மாதிரியாய் அய்யரவர்களும், ஸ்ரீராமனை எங்கு தேடியும் காணுதவராய், அந்தோ! என் ஊழ்வினைப்பயன் இத்தகையதே. நானென் செய்யவல்லேன்? 'முன்செய்த முழுவினையாற் றிருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதே னகல்வதுவோ?' என்று வருந்துகிறுரென்று பொருள்.

'வெலவேவஸி தீயக' வச்சுநா? வெத தீருநா.' என்பதனுல், தைலதாரையைப்போல் இடைவிடாது பஜனம் செய்து வருகிற பெரியோர்களால் அடையக்கூடிய ஆனந்தம் விலை மதிக்கத்தக்கதா? விலை கொடுத்து வாங்கத்தக்கதா? பகவானுடைய கைங்கரியத்தைச் செய்வதினுலேயே ஆறுதல் அடைகிற மனம் மற்றொன்றினுல் திருப்தி யடையுமா? எனக் கிப்பொழுது கை நழுவிநிற்கிற பகவத் கைங்கரியம் எப்பொழுது திரும்பக்கிடைக்குமோ? என்று வருந்துகிறு ரென்று பொருள்.

'பரமாத்ம...வர்ஜ்ய காலமேமோ' என்பதனால்; ஸ்ரீராமா! நீ கருணாமூர்த்தியே. நீ என்னைக் கடாக்ஷிக்க வேண்டுமென்றாலும் என்னுடைய வினைப் பயன் இடைபுகுந்து நிற்கின்றது. இதற்காக நீ ஆயாசப்படவேண்டாம். நான் பக்தவேடம் பூண்டசமயம் நல்லதல்ல. இராகுகாலமாயிருக்கும். என் கருமத்தை நானனுபவித்தே தீரவேண்டும் என்று தம்மையே நொந்து கொள்கிறார்.

குறிப்பு:—சேதனன் வருந்துகிற சமயத்தில் பகவானும் சங்கடப் படுகிறான். பகவானுக்கு ஸர்வாதிகார மிருந்தபோதிலும் சில சமயங்களில் அவ்வதிகாரத்தை யுபயோகிப்பதில்லை. தந்தையானவன் குருவினால் சிக்ஷிக்கப்பட்ட மகனைக்கண்டு, அந்த சிக்ஷை மகனுடைய க்ஷேமத்தின் பொருட்டே என்று வருந்தா திருப்பதுபோல், சில சமயங்களில் ஜீவனுக்குங் கர்மானுபவம் கர்த்தவ்ய மென்று பகவான் நினைக்கிறான். நித்யாநபாயினியாகிய சீதாதேவியையே பதினொரு மாதம் பிரிந்து தானும் வருந்தி அன்னவளையும் வருந்தச் செய்தது இங்கு கவனிக்கத் தக்கது.

ப. ; ; ;	* ஸா ரீ கா ; மா	தா ; ; - நீ	நீதநிபாமா	‖
; ; ;	* தொலிநே ; நு	ஜே ; ; - ஸி	நபூ . . .	‖
காகாரீ	* ஸாரீகா ; மா	காரீரிகாரி	ஸா ; ; ;	‖
ஜா . .	* ப ல மீ ; .	லா. . . .	கே ; ; ;	‖
அ. ; ; ;	* தா நீதா ; தா	ஸா ; ; - ரிக்	மாகா ; ரீ	‖
; ; ;	* வெலவே ; ஸி	தீ ; ; - ய .	க வச் ; க	‖

ஸ்ா; ; * ஸ்ாநீநிததா - தா | ஸ்ா ; ; - ஸ்நி | தநிபா ; மா ||
நா ; ; * வெததீ. . - ரு | நா ; ; - ம . | ந ஸா ; ர ||
காகாரீ *
க . . * (தொலி)

ச. ; ; ; * பாபாபா ; பா | தாநீபம - கா | மாதா ; நீ ||
; ; ; * ப ரமாத்; ம | நீ . . . - கா | . யா ; ஸ ||
தாதா ; * ஸ்ாநீதா ; நீ | பா; ; - மா | காகா ; ரீ ||
ப ட ; * ப நிலே ; தி | ரா; ; - க | ருணை ; க ||
ஸா ; ; * தாநீதா ; தா | ஸ்ா ; ; - ரிக் | ம்ாக்ா ; ரீ ||
ர ; ; * வ ரபக் ; த | வே ; ; - ஷ. | முவே ; யு ||
ஸ்ாஸ்ா; * ஸ்ாநீ தா ; தா | ஸ்ாஸ்ா ; - ஸ்நி | தநிபா - மா ; ||
வே ள ; * வர்ஜ்யகா ; ல | மேமோ; - த்யா | க ரா - ஜ ; ||
கா ரீ ; *
நுத ; * (தொலி)

அவதாரிகை:—இந்தக் கிர்த்தனத்தில் அய்யரவர்கள்; ஸ்ரீராமனை யல்லாத தெய்வங்களைத் தொழுவதினால் பயன் கிடைக்கமாட்டாது என்கிறார்.

(56) சா,யாதரங்கி^v^ணி - சதுரச்ர ரூபகம்.

ப. இதரதை^v^வமுலவல்ல - இலநு ஸௌக்,யமா ராம (இத)

அ. மதபே^v^,த^v^முலேக ஸதா^v^ - மதி^v^நி மருலுகொந்ந நந (இத)

ச. மநஸுதெ^v^லிஸி ப்ரோசிநநு - மறசிநநு நீவே ராம
தநவாட^v^ந தருணமிதே^v^ - த்யாக^v^ராஜ ஸந்நுத (இத)

பத உரை

ராமா - ஸ்ரீராமா
இதரதை^v^வமுல வல்லந் - உன்னை யல்லாத தெய்வங்களால்
இலநு - பூமியில்
ஸௌக்,யமா-சுகமா, க்ஷேமம் உண்டாகுமா
மதபே^v^,த^v^முலேக - இராம மதத்தினின்றும் பிழையாது
ஸதா^v^ - எப்பொழுதும்
மதி^v^நி - மனத்தில்
மருலுகொந்ந - ஸ்ரீராம மோகங்கொண்ட
நநகு - எனக்கு (இதர தைவமுலவல்ல நில நு ஸௌக்,யமா)
ராமா - ஸ்ரீராமா
மநஸு - மனதை

தெலிஸி - அறிந்து
ப்ரோசிநநு - காப்பாற்றினாலும்
மறசிநநு - மறந்தாலும்
நீவே - நீயே
த்யாகராஜ ஸந்நுத - தியாகராஜனால் கொண்டாடப் பட்டவனே
தநவாடு அநந் - தன்னுடையவன் என, (என்னை உன்னுடையவனாய்ப்பாவிப்பதற்கு)
தருணமு - சமயம்
இதே - இதுவே

விசேஷார்த்தம்:—'இதர தைவமுல வல்ல நிலநு ஸௌக்யமா' என்பதனால், இரக்ஷகனாகிய ஸ்ரீராமனைத்தவிர வேறாகிய தெய்வங்களைக் கைதொழுவதால் பிரயோசன முண்டாகாதென்றும், ஸ்வரூப நாசன முண்டாகுமென்றும் தெரிவிக்கிறார். ஸப்தரிஷி ஸம்வாதத்தில் 'விஷ்ணும் ப்ரஹ்மண்ய தேவேசம் தேவதேவம் ஜநார்தநம் - த்ரைலோக்யஸ்திதி ஸம்ஹார ஸ்ருஷ்டி ஹேதும் நிரம்ஜநம், ஆதாரம் விதாரம் ஸம்தாரம் ஜகத்குரும் - விஹாய ஸபஜத்யந்யம் பிஸஸ்தைந்யம்கரோதியஃ' அதாவது, தேவதேவனையும், சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரியங்கட்குக் காரணபூதனையும், பிரகிருதி சம்பந்த மில்லாதவனையும், எல்லா வஸ்துக்களையும் தன்னிடத்திருத்தி அவைகட்குப் பலத்தைக் கொடுத்து இரக்ஷிக்கிற லோக குருவாகியுமிருக்கிற பகவானை விட்டு இதரதெய்வங்களை பஜிக்கிறவன், தாமரைக் கிழங்கைத் திருடினவனென்று சொல்லப்படுகிறான். அதாவது, மனோஹரமாகிய தாமரை மலரை யநுபவிக்காது அதைக் கிழங்கோடு பிடுங்கி மூலநாசம் பண்ணினவன் எவ்வளவு மூடனோ, அதுபோலவே ஆஸ்ரிதர்களின் பால்

சிந்தாமணியாய் விளங்குகிற ஸ்ரீராமனைத் தொழாது இதர தெய்வங்களை யடைகிறவன் பயனற்றவனென்று பொருள். 'கற்பாரி ராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ' 'தேவதேவனைத் தென்னிலங்கை எரியெழச் செற்றவில்லியைப் பாவநாசனைப் பங்கயத் தடங் கண்ணனைப் பரவுமினோ' என்னும் ஆழ்வா ரருளிச் செயல்கள் இங்கு நினைக்கத் தக்கவை. 'மதபேத³முலேக' என்பதனால், ஸ்ரீராமனைத் தொழுவதென்கிற கொள்கையில் நின்றும் நழுவாமல் என்று பொருள். 'ஸதாமதி³நி மருலுகொங்க தனகு' என்பதனால்; பகவத் விஶ்லேஷத்தைப் பொறுக்க முடியாது பித்தேறி,

'ஏறிய பித்தினொ டெல்லாவுலகும் கண்ணன் படைப்பென்னும்
நீறு செவ்வே யிடக்காணில் நெடுமா லடியா ரென்றோடும்
நாறுதுழாய் மலர்காணி நாரணன் கண்ணியீ தென்னும்
தேறியுந் தேராது மாயோன்றிறத் தனளேயித் திருவே'

என்கிறபடி, எங்கும் பகவதனுபவத்தையே நாடி யிருக்கிற பரமபக்தர்கட்கு ஸ்ரீராமனை யல்லாத தெய்வங்களால் சுகமுண்டாகமாட்டா தென்கிறார்.

'மநஸா தெலிஸி...த்யாக³ராஜ ஸந்நுத' என்பதனால், 'நிராஸகஸ்யாபி நதாவது³த்ஸஹே மஹேஶஹாதும் தவபாத³ பங்கஜம் - ருஷாநிரஸ்தோ தபி ஶிஶு:ஸ்தநந்த³யோ ந ஜாதுமாதுஶ்சரணௌ ஜிஹாஸதி' என்கிறபடி, ஸ்ரீராமா! நீ என்னைக் காப்பாற்றினாலும் சரியே. கைவிட்

டாலும் சரியே, தாயினுல் திரஸ்கரிக்கப்பட்ட குழந்தை மறுபடியும் அவளடியிலேயே விழுந்தழுவதுபோல, உன்னுல் நான் திரஸ்கரிக்கப் பட்டபோதிலும் உன் திருவடிகளை நான் விடமாட்டேன் 'உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன் என்னையு முன்னிலிட்டேன்' நான் உன்னுடைய சொந்த சொத்து. என்னைக் கடாக்ஷிக்க இதுவே தருணம் என்று அடைக்கலம் புகுகிருரென்று பொருள்.

சாயாதரங்கிணி ராகலக்ஷணம்:--இது வக்ர ஷாடவ ஸம்பூர்ணராகம். 28-வது மேளத்திற் பிறந்தது. ஆரோஹணத்தில் தைவதம் வர்ஜ்யம். காந்தாரம் வக்ரம். அந்தர காந்தார கைசிகி நிஷாதங்கள் இராகச் சாயாஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்	அவரோஹணம்.
ஸரிமகமபநிஸ.	ஸநிதபமகரிஸ.

ப. பாஸ்ா	நிதபா ; மா	மாகா	ரிகமககரிஸா	
இத	ர . தை; வ	மு ல	வல். . . . ல	
; ரிரி	மா பா ; தா	பா ;	பா ; - பாமா	
; இல	நுஸௌக்; ய	மா ;	. ; - ர்ாம	
2. பாஸ்ா	நித - பஸ்நிதபம	கமகம	ரிமகரிஸாஸ்ா	
இத	ர . - தை . . வ.	மு.ல .	வல். . . ல	

; ரி ரி	மா - பா நீ நீ	ஸ்ா ;	ரிஸநித - பமகம	
; இல	நு - ஸௌக்ய	மா ;	. . . . - ராம. .	
3. ; ரி ரி	மா - பா ஸ்ா நீ	நிஸ்க்ரி	ரிஸ் - ஸ்நிநிதபம	
; இல	நு - ஸௌக்ய	மா. . .	. . - . .ரா.ம .	
4. ,,	மா - ப ஸ் நீஸ்ரி	ம்க்க்ரி	ரிஸ் - ரிஸ்நிதபம	
,,	நு - ஸௌக். . ய	மா . .	. . - . . ரா. . ம	
5. பாஸ்ா	நித - பாமாகா	மாகா	ரிகமககரிஸா	
இ த	ர . - தை . வ	மு ல	வல். . . . ல	
; ரி ரி	மா பா ; தா	பா ;	; ; - ; ; .	
; இல	நுஸௌக்; ய	மா ;	; ; - ; ;	
அ. பாஸ்ா	ஸ்ரிக்ரிரீ	ரீம்ா	க்ாரீக்ா ;	
ம த	பே . .தமு	லே.	கஸதா ;	
ரீம்ா	க்ா - ரீம்ாக்ா	ரீ ;	ஸ்ா - ரிஸ்நிதபம	
மதி	நி - மஃருலு	கொந்;	ந - த . ந . . .	

28—C

ச. பாபா | பாபா பாபா || பநிஸ்ா | நிதநித - பாமா ||
மந | ஸாதெலிஸி || ப்ரோ. | சி. ந. - . நு ||
மாபா | மா - கமரீஸா || ஸரிமா | மா - ரிமபாபா ||
மர | சி - ந.. நு || நீ . . | வே - ரா. . ம ||
பாஸ்ா | ஸ்ரிக்ரி - ரீரீ || ரீம்ா | க்ா ரீக்ா ரீ ||
த ந | வா. . . - டந || தரு | ணமிதே. ||
ரீ ம்ா | க்ா - ரீம்ாக்ா || ரீ ; | ஸ்ா - ரீஸ்நிதபம ||
த்யா | க - ரா. ஜ || ஸங்; | நு - த . . . . ||

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், 'ஸ்ரீராமா! பிரபுக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு திரிகிற சிலரால் எனக்குக் கொஞ்சம் கஷ்டம் சம்பவித்திருக்கிறது. இத் தருணம் என்னைக் காத்தருளவேண்டும்' என்கிறார்.

(57) சா,யாதரங்கிᵛணி - ஆதிᵛ.

ப. க்ருபஜூசுடகு வேளரா ராம (க்ருப)

அ. அபராத,ᵛமுல நோர்வ வஶமா - யநபோᵛகும ஸரிவாரலலோ (க்ருப)

ச. பரமார்த, மௌ மார்க^{v} மெறுக^{v}ரு - ப்ரபு^{v}வுலெல்ல நீச ஸேவகுலுரா
பரலோக ப^{v}யமிம்தகா^{v}நரு - வர த்யாக^{v}ராஜ ஹ்ருத்ஸத^{v}ந (க்ருப)

பத உரை

ராம - ஸ்ரீராம
க்ருபந் - தயை
ஜூசுடகு - பார்ப்பதற்கு (கருணை காட்டுவதற்கு)
இதி^{v}வேளரா - இது சமயமடா
ஸரிவாரலலோந் - சரியொத்தவர்களின் மத்தியில்
அபராத^{v}முலநு - அபராதங்களை
ஓர்வந் வஶமா - பொறுக்கமுடியுமா
அநந் போகுமா - என்று சொல்லாதே அய்யனே!
'வர த்யாக^{v}ராஜ ஹ்ருத்ஸத^{v}ந'
வர - சிறந்த
த்யாக^{v}ராஜ - தியாகராஜனுடைய
ஹ்ருத் - மனதை
ஸத^{v}ந - வீடாக உடைய ஸ்ரீராமா!
பரமார்த்த, மு ஔ - உண்மையாகிய
மார்க^{v}மு - வழியை
எறுக^{v}ரு - அறியமாட்டார்கள்
ப்ரபு^{v}வுலு எல்லந் - பிரபுக்கள் எல்லாரும்
நீச ஸேவகுலுரா - இழிகுலத்தவர்க் கூழியம் செய்கிறவர்களடா!
பரலோகப^{v}யமு - உயருலகின் பயம் (மற்றொரு உலகின் கண்ணுள்ள பயத்தை)
இம்தந் - எத்துணையும்
காநரு - கண்டறிகிறார்களில்லை (க்ருப)

விசேஷார்த்தம்:—'க்ருபஜூசுடகு வேளரா ராம!' என்பதனால், 'ஸ்ரீராமா! நீ ஆபத்பந்து வென்று பெயர் வகித்திருக்கிறாய். இதோ உன்னுடைய தாசனுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிறது. காப்பாற்றிக்கொள்' என்கிறார்.

'அபராத^v மூல...ஸரிவாரலலோ' என்பதனால், 'ஸ்ரீராமா! நான் பாகவத கோஷ்டியிற் கைங்கரியம் செய்கிறேன். ஆகவே என்னிடத்து யாதொரு குற்றமுமில்லை. ஒருவேளை முன்சன்மங்களிற் செய்திருக்கிற அபராதத்தை யேதாகிலும் காட்டி அதன் மூலமாய் என்னைக் கைவிடுவை யேல் அது உனக்குத் தகாத காரியம். நானெப்படிப்பட்ட அபராதியாக விருந்தபோதிலும், பாகவத கோஷ்டியின் சம்பந்தத்தினால் பரிசுத்தனாய்க் காப்பாற்றத் தகுந்தவனா யிருக்கிறேன். இவ்வளவு பாகவதர்களின் நடுவில் என்னை நீ அபராதி என்று நீக்குவையேல் அந்த அகௌரவம் உனக்கே யாகும். கவனித்துப்பார்' என்கிறார்.

'பரமார்த...ஸத^vந' என்பதனால், 'ஸ்ரீராம! இக்காலத்தில் நீசவ்ருத்திகளைச் செய்கிற சிலர் பிரபுக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு, எமலோகத்திற் றமக்குக் கிடைக்கப் போகிற தண்டனை இன்னதென் றுணராமல் துஷ்டகாரியங்களையே செய்து வருகிறார்கள். இவர்கள் உண்மை இன்னதென் றறியாமல், திரவியச்செருக்கினால் மத்தேறித் தம்மைப் பாடும்படி பாகவதர்களைத் தொந்திரவு செய்கிறார்கள், "த்வமுத்^vதி^vஸ்ய ஸ்ரீமாநிதி வத^vதி வாகௌ^vபநிஷதீ^v" என்கிற படியும், 'வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியே னல்லேன்' என்கிறபடியும், பகவானை

யல்லாது மற்றொருவனைப் பாடுவதற் கிஷ்டமில்லா திருக்கிற பாகவதர்கட்குப் பெரிய ஆபத்து நேரிடும்போல் தோன்றுகிறது. இந்த சமயத்தில் நீ சும்மா யிருக்கக்கூடாது. சீக்கிரம் வந்து காத்தருள்வாய்' என்று ஸ்ரீராமனுடைய சகாயத்தை வேண்டுகிறுரென்று பொருள்.

ப. ஸாரீ - மாகாமா ; - மாமா	பா - பமமாமா	கா ; - கரிஸா	‖
க்ருப - ஜா . . ; - சுட	கு - வே . ள	ரா ; - ரா.ம	‖
2. ஸாரீ - ஸரிமகமா ; - பாமா	,,	,,	‖
க்ருப - ஜா . . . ; - சுட	,,	,,	‖
3. ,,	பா - நிததபமா	,,	‖
,,	கு - வே . . ள	,,	‖
4. ,,	பா - மபநிநிஸ்ா	நிததப - மககரி	‖
,,	கு - வே . . ள	ரா. . . - ரா·ம.	‖
5. பாபா - நீஸ்ா ; ; - நீதா	பா - பா ; மா	கா ; - கரிஸா	‖
க்ருப - ஜா. ; ; - சுட	கு - வே; ள	ரா ; - ரா. ம	‖
6. நி•தபா - ரீஸ்ா ; ; - ரீம்க்	ரீ - ரிஸ்நிதபா	பமகா - கரிஸா	‖
க்ரு. ப - ஜா. ; ; - சுட.	கு- வே. . . ள	ரா. . - ரா. ம	‖

அ. தாபாநீஸ்ா ; ; - நீஸ்ா	ரீம் க்ா ; - ம்ா	க்ாரிஸ்ா ; ‖
அ ப ரா . ; ; - தமு	ல நோர் ; - வ	வஸமா ; ‖
நீநீ நீ ; - நிதபம - பாநீ	ஸ்ா ; ; - ரிஸ்	நீதாபா ; ‖
யகபோ ; - கு. ம . - ஸ ரி	வா ; ; - . .	ரலலோ ; ‖
,,	,,	நித - தபமககரி ‖
,,	,,	ர . - ல .லோ. ‖
ச. பாபாபா ; ; மா - ம பநீ	; - நீததாபா	மாகாகாரீ ‖
ப ர மார் ; ; த - மெள.	; - மார் . க	மெறுகரு ‖
பாமாகா - கரிஸாஸா - ஸரிமக	மா - பா ; மா	நீதாபா ; ‖
ப்ர பு வு - லெல். ல - நீ . . .	ச - ஸே ; வ	குஹுரா ; ‖
தாபாநீஸ்ா ; ஸ்ா - ரீஸ்ா	க்ா ; ; ம்ா	க்ாரீஸ்ா ; ‖
ப ரலோ. ; க - பய	மிம் ; ; த	காந ரு ; ‖
நீநீ நீ ; - நிதபம - பாநீ	ஸ்ா ; ; - ரி ஸ்	நீதாபா ; ‖
வரத்யா ; - . . க. - ரா .	ஜ ; ; - ஹ்ருத்	ஸத ந ; ‖

,,	,,	நித - தபமககரி	‖
,,	,,	ஸ. - த . ந . . .	‖

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், லக்ஷ்மீஸமேதனுகிய ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை எப்பொழுதும் மனனம் செய்வதே மனிதனுக்கு ஜீவனமென்கிறுர்.

(58) நாக^v^ஸ்வராவளி - ஆதி^v^.

ப. ஸ்ரீபதீ நீபத^v^ சிம்தநமே ஜீவநமு (ஸ்ரீபதீ)

அ. நே பரதே^v^ஶி நாகா^v^லி பா^v^பவே - சநுவுந த^v^யசேஸி (ஸ்ரீபதீ)

ச. ராஜாதி^v^ராஜ ரவிகோடிதேஜ - பூஜிம்சி நிக்கிம்த்^v^ராது^v^லு தி^v^க்^v^
ராஜுலெ வெலயலேதா^v^ - ராஜில்லு ஸ்ரீத்யாக^v^ராஜுநகு (ஸ்ரீபதீ)

பத உரை

ஸ்ரீபதீ - இலக்குமிநாதனே!
நீ - உன்னுடைய
பத^v^ சிம்தநமு ஏ - பாதத் தியானமே
ஜீவநமு - உய்யும் வழி
நேந் - நான்
பரதே^v^ஶிந் - ஆஶ்ரய மில்லாதவன்;
சநுவுநந் - அன்புடன்
த^v^யசேஸி - தயவுசெய்து

நாகா^வலிங் - என்னுடைய தாபத்தை
பா^பவே - போக்கடிப்பாய்
ராஜாதி^ராஜா - வேந்தர்கட்கு வேந்தே!
ரவிகோடிதேஜ - கோடி சூரியர்களின் தேஜ
ஸ்ஸை யுடையவனே!
நின்னுங் - உன்னை
பூஜிம்சி - பூசைசெய்து
இம்த்^ராது^லு - இந்திரன் முதலிய தேவர்
கள்
தி^க்^ராஜுலு ஐ - திக்பாலகர்களாய்
வெலயலேதா^ - விளங்கவில்லையா
ராஜில்லு - மகிழாநின்ற, உளம் மகிழ்கிற
ஸ்ரீ த்யாக^ராஜுநகுங் - சப்பத்காரனாகிய
தியாகாராஜனுக்கு (ஸ்ரீபதீ)

விசேஷார்த்தம்:—'ஸ்ரீபதீ நீ பத^ சிம்தநமே ஜீவநமு' என்பதனால், பகவான் அடைவதற்குத் துர்லபனா யிருந்தபோதிலும், புருஷகாரம் செய்வதற்கென்றே முன் வந்து நிற்கிற ஸ்ரீமகாலக்ஷ்மி யோடு கூடிக்கொண் டிருக்கிறபடியால் அடைவதற் கதி ஸுலபனா யிருக்கிறா னென்றும், அப் படிப்பட்ட பகவானை யடைவதற்குப் பெருந் தவம் புரியவேண்டிய தில்லை என்றும், 'கடிசேர் துழாய் முடிகண்ணன் கழல்கள் நினைமினோ' என்கிறபடி, பகவானுடைய அடியிணையைச் சிந்திப் பதே போதுமென்றும், இச் சிந்தனையே பக்தர்கட் குஜ்ஜீவன மென்றும் விளக்குகிறார்.

'நேபரதே^வலி...த^யசேவி' என்பதனால், "ஸ்ரீராமா! 'தீ^நாநுகம்பி த^ர்மஜ்ஞ:' என்கிறபடி, நீ தீனர்களின் பொருட்டு விசேஷமாய்க் கருணை காட்டுகிறவன். நானோவெனில், பரம ஏழையா

யிருக்கிறேன். உன்னுடைய ஸ்வபாவகுணத்தால் என்மேல் கருணைகூர்ந்து சீக்கிரம் இரக்ஷிப்பாய்' என்று பிரார்த்திக்கிறார்.

'ராஜாதி⁴ராஜ' என்பதனால், 'ராஜாதி⁴ராஜஸ்ஸர்வேஷாம்' என்கிறபடி, தன்னிலும் பெரியதாகிய எல்லை இல்லாததனால் உலகங்கட்கெல்லாம் சக்கரவர்த்தியாய் விளங்குகிறவனென்று பொருள். 'ரவிகோடிதேஜ' என்பதனால், 'தேஜஸாதி³த்ய ஸங்காஶ:' என்கிறபடி, எண்ணிறந்த சூரியர்களின் தேஜஸ்ஸை யுடையவனென்று பொருள். 'பூஜிம்சி நின்நிம்த்³ராது³லு தி³க்³ராஜுலை வெலயலேதா³' என்பதனால், பிரமன் முதலாகிய தேவர்கள் பகவானை ஆராதனம் செய்தே அவரவர்களுடைய பதவியை அடைந்தார்களென்று பொருள். 'ராஜில்லு ஸ்ரீ தியாக³ராஜுநிகி' என்பதனால்; பிரமன் முதலியவர்கட்கெல்லாம் தேவனாயிருக்கிற பரமபுருடனை யல்லால் அய்யரவர்களைப் போன்ற பக்தர்கட்காஶ்ரயமில்லை யென்றும் கூறுகிறாரென்று பொருள்.

நாக³ஸ்வராவளி ராக³லக்ஷணம்:—இது ஔடவராகம். 28-வது மேளத்திற் பிறந்தது. சதுச்ருதி தைவத அந்தர காந்தாரங்கள் இராகச் சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் கானம் செய்யக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ க ம ப த ஸ.	ஸ த ப ம க ஸ.

ப. ; ; ; * பதஸ்ாதா - பா ; | பமமமா - கம | பாபா - மபதப ||
; ; ; * ஸ்ரீ. . ப - தி ; | நீ . . - . . | . . - . . ப. ||

2. தா ; ; * பதஸ்ாதா - பமகம | பதஸ்தபம - கம | ,, ||
த ; ; * ஸ்ரீ. . ப - தி. . . | நீ. . . . . - . . | ,, ||
,, * பதஸ்ாதா - பதஸ்ா | ஸ்ா-ஸ்தபம-மப | மகஸா - ஸமகம ||
,, * ஸிம் . த - நமே. | . -ஜீ . . . -வ. | . . . - ந . . . ||

மபாமதா *
மு . . . * (ஸ்ரீபதீ)

அ. ; ; ; * தாஸ்ாக்ாக்ா ; | ஸ்க்ம்க் - ஸ்க்ம்க் | ஸ்க்ம்க் - ம்ப்ம்க் ||
; ; ; * நே . ப ர ; | தே . . -வி . . | நா. . - கா. . . ||
ஸ்ா; ; * ஸ்ாதாஸ்ா - தஸ்தா | ஸ்ாதாஸ்ா - தஸ் | ததபா - பதஸ்ா ||
வி ; ; * பா . ப - வே. . | ச நு வு - ந . | த . ய - சே. . ||

ஸ்ா-ஸ்தபம*
. -வி . . . * (ஸ்ரீபதீ)

ச. ; ; ; * பா ; பா ; பா - | மபமமபா - மப | மா ; க - மபமக ||
; ; ; * ரா ; ஜா ; தி - | ரா. . . ஜ - ரவி | கோ, டி- தே. . . ||

ஸா; ; * ஸா ; கா ; கா | ஸகமா ; - கம | பா - மபதாபா ||
ஜா ; ; * பூ ; ஜிம்; சி | நிங். . ; - நிம் | . - த்ரா . து ||

மாபா ; * ஸ்ாதாஸ்ா - தஸ்தத | ஸ்ா - தஸ்ததஸ்ா- | க்ாஸ்ாக்ா - ஸ்க் ||
லு தி ; * க்ரா . . - ஜா. . . | . - ஓ. . . . - | வெ ல ய - லே. ||

ம்ா க்ா ; * க்ா ; ஸ்ா ; க்ா - | ஸ்க்ஸ்ஸ்தா - தஸ் | ததபா - பதஸ்ா ||
. தா ; * ரா ; ஜில் ; லு - | ஸ்ரீ. . . . - த்யா | . . க - ரா. . ||

ஸ்ா-ஸ்தபம*
ஜா- ந .கு .* (ஸ்ரீபதீ)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், ஸ்ரீராமன், ஸாமதான பேத தண்டோபாயங்களைக் கையாடுகிற திறமையைப் பிரகடனம் செய்கிறார்.

(59) காபிநாராயணி - ஆதிˇ.

ப. ஸரஸ ஸாமதாˇந பேˇ,தˇதˇண்டˇ சதுர - ஸாடிதைˇவ மெவரே ப்ˇரோவவே (ஸ)
அ. பரமஸாம்ப,ˇவா க்ˇரேஸரும்டˇநசு பˇல்கு-ராவணுடுˇ தெலியலேகபோயெ (ஸ)

ச. ஹிதவுமாட லெம்தோ பா^v^க^v^ ப^v^ல்கிதிவி - ஸதமுநா^v^ நயோத்^v^ய நித்துநம்டிவி
நதஸஹோதர^v^ருநி ராஜுஙீஜேஸி ராக - ஹதமு சேஸிதிவே த்யாக^v^ராஜநுத (ஸ)

பத உரை

ஸரஸ - ரஸமுடையவனே
'ஸாம...சதுர'
ஸாம - சாமம்
தா^v^ந - தானம்
பே^v^த^v^ - பேதம்
த^v^ண்ட - தண்டம் என்கிற நான்கு உபாயங்களில்
சதுர - தேர்ச்சியுடையவனே
ஸாடிதெ^v^ய்வமு - (உனக்கு) சரிபோன்ற தெய்வம்
எவரு ஏ - யார் அய்யனே
ப்^v^ரோவவே - காப்பாற்றுவாய்
'பரம...அநுசு'
பரம ஸாம்ப^v^வ - சிவபக்தியிற் சிறந்தவர்களில்
அக்^v^ரேஸருண்டு^v^ - தலைமையானவன்
அநுசு - என்று
பல்கு - சொல்லிய, சொல்லிக்கொண்டிருந்த
ராவணுட்டு^v^ - இராவணன்
தெலியலேகபோயெந் - அறியாமற்போனன் (உன்னை யடையும் உபாயங்களை அறியாமற் போனன்)
த்யாக^v^ராஜநுத - தியாகராஜனல் கொண்டாடப் பட்டவனே
ஹிதவுமாடலு - இதமாகிய வார்த்தைகளை
எம்தோ - எவ்வளவோ

பா^v^கு^v^க^v^ங் - நன்றாய்
ப^v^ல்கிதிவி - சொன்னாய்
ஸதமுகா^v^ங் - ஸதமாய்
அயோத்^v^யங் - அயோத்திமா நகரை
இத்து நப்டிவி - கொடுப்பே னென்றாய்
நதஸஹோத^v^ருநி - வணக்கமுடைய தம்பி
யை (உன்னைச் சரணடைந்த இராவண சகோதரனாகிய விபீஷணனை)
ராஜுசேஸி-இலங்கைக் கரசனாய்ச்செய்து
ராக - அரக்கர்களை
ஹதமுசேஸிதிவி - நாசம் செய்தாய்

விசேஷார்த்தம்:—'ஸாஸ' என்கிற விசேஷணத்தினால்; ஸ்ரீராமன் ஸத்தோடு கூடியவனென்று பொருள். மகா ஸரஸனென்றும் பொருள்.

'ஸாமதா^v^ங பே^v^த த^v^ம்ட^v^ சதுர' என்பதனால், அரசர்கட்கு முக்கியமாகிய நான்குவித உபாயங்களிற் சிறந்த தேர்ச்சியுடையவ னென்று பொருள். 'ஸாடி தெ^v^ய்வமு எவரே' என்பதனால், 'நதத்ஸமஸ்யா ப்^v^யதி^v^கஸ் சத்^v^ருஸ்யதே' என்கிறபடி, தனக்குச் சமானனாவது அதிகனாவது இல்லா திருப்பதினால் நிகரற்றவனென்று பொருள். 'ப்ரோவவே' என்பதனால், இப்படிப்பட்ட பகவானே தஞ்சமென் றடையத் தக்கவ னென்றுபொருள்.

'பரமஶாம்ப^v^வ...தெலியலேக போயெங்' என்பதனால்; சிவபக்தர்களிற் சிறந்தவனாகிய இராவணன், நான்கு வேதங்களையும் கற்றறிந்தவன்; எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவன். அப்படிப்

பட்டவனே ஸ்ரீராமனை சாக்ஷாத் ஜகதீஸ்வர னென்று அறியாமற்போனான் என்கிறார். அதாவது, இராவணன் சிவபக்தனாயிருந்தும் ஸ்ரீராமனை அறியாமற் போனதனால், விஷ்ணு பக்தனல்லாதவன், தன்னுடைய முன்னிலையிலேயே பகவான் வந்து நின்றபோதிலும் அவனை பகவானென்று அறியமாட்டா னென்று பொருள்.

'ஹிதவுமாட லெம்தோ பா^கா^ ப^ல்கிதிவி' என்பதனால், 'யதி^வா ராவணஸ்வயம்' என்கிறபடி, ஆஸ்ரயித்தவன் பரம அபராதியாகிய இராவணனாயினும் சரியே காப்பாற்றாது விட மாட்டேன் என்று ஸ்ரீராமன் பரம ஔதார்யத்தைக் காட்டியும்; அங்கதன் மூலமாய் புத்தி புகட்டியும்; முதல்நாள் உயுத்தத்திற் தோற்று நின்றபொழுது ஹிதோபதேசம் செய்தும் இராவணனைக் காப்பாற்ற முயன்றான் இது ஸாமோபாயம். குருடனுடைய காலடியில் மாணிக்கங் கிடந்ததுபோலவும், சவிட்டுமண்ணிலிட்ட விதையைப்போலவும், இந்த ஸாமோபாயம் லோக மாதாவாகிய சீதாதேவியைத் திருடிப்போன மகாபராதியாகிய இராவணன்பாற் பயனற்று நின்றது. இராவணனுடைய வினைப்பயன் பகவானுடைய உபதேசத்தையும் தடுத்து நின்றதெனப் பொருள்.

'ஸதமுக^ நயோத்^ய நித்துநம்டிவி' என்பதனால், சரணடைந்த விபீஷணனுக்கு இலங்கையைப் பட்டம் கட்டுவித்தபொழுது, இராவணனும் ஒரு சமயம் வந்து சரணமென்றால் அவனுக்கு என் செய்வது என்கிற கேள்வி பிறந்த சமயத்தில், இராவணன் சரணமென்றால் அவ

னுக்கு அயோத்தியைப் பட்டம் கட்டிவைப்பேனென்று தானுபாயத்தை ஸ்ரீராமன் பிரகடனம் செய்தாரென்று பொருள்.

'நத ஸஹோதரு நிராஜு ஜேஸி' என்பதனால், இராவணன் இலங்கையைப் பரிபாலனம் செய்துகொண் டிருக்கும்பொழுதே அதை விபிஷணனுக் களித்தமையால் பேதோபாயம் விளக்கப்பட்டது.

'ராக ஹதமு சேஸிதிவி' என்பதனால், மேற் சொல்லிய மூன்று உபாயங்கட்கும் இராவணன் வழிபடாததினால் முடிவில் தண்டோபாயத்தைக் கைக்கொண்டு இராவணாதிகளைக் கொன்றாரென்று பொருள்.

காபிநாராயணி ராகலக்ஷணம்:—இது ஷாடவ ஸம்பூர்ணராகம். 28-வது மேளத்திற் பிறந்தது. சுத்தமத்யம கைசிகி நிஷாதங்கள் இராகச் சாயா ஸ்வரங்கள். இந்த ராகத்தில் வக்ரப் பிரயோகங்களே மிகவும் ரஞ்ஜகமானவைகள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி ம ப த நி ஸ.	ஸ நி த ம க ரி ஸ.

ரிமரீமா - மாககரி - நீநீ - ஸநிநிததா முதலியன இரஞ்ஜகமானவை.

ப. ;	;	;	*	ஸஸஸா - ரிமரீமா	| பா , பா , - பா	| மா - மா ; கா	‖
;	;	;	*	ஸ ர ஸ - ஸா. ம	| தா , ந , - பே	| த - தம் ; ட	‖

2.	க ரிரீ ;	*	;;	பதபதநித - தப	பம - மா ; கா	‖
	சதுர ;	*	,,	தா . . ந . - பே	த . - தம் ; ட	‖
3.	,,	*	;;	பதபதநித - நித	தப - பமமாகா	‖
	;;	*	,,	தா . . ந . - பே	த . - தம் . ட	‖
4.	,,	*	ஸஸஸா - ரிமரிமபம	பதபதநித - ஸ்நி	நித - தபபமமக	‖
	,,	*	ஸ ர ஸ - ஸா . . ம ..	தா . . ந . - பே.	த . - தம் . ட.	‖
5.	,,	*	ம கரிஸ் - ,,	,,	,,	‖
	,,	*	ஸரஸ . - ,,	,,	,,	‖
	,,	*	ஸாஸா - ஸநீதா	நீஸாஸா - ரீ	மா - ப தநீநீ	‖
	,,	*	ஸா டி - தை . வ	மெ. வ - ரே	. - ப்ரோ . வ	‖
	நிததபமா	*				
	வெ . . .	*	(ஸரஸ)			
அ.	; ; ;	*	நிநி நீ - நீ ; நீ	நிததா ; - த ப	மா - பா ; தா	‖
	; ; ;	*	பரம - மாம் ; ப	வா . ; - க்ரே	ஸ - ரும் ; ட	‖

2. தநிஸ்ா; * ,, | ஸ்நிநிதகா - தப | ,, ||
ந. சு ; * ,, | வா . . . - க்ரே | ,, ||

,, * ஸ்நிதப - தநிஸ்ாஸ்ா | நீ , தா ; - ப த | தப - மா ; கரி ||
,, * பல்கு . - ரா. வ . | ணு; டு , - தெலி | ய . - லே ; க. ||

மா மா ; * பஸ்நித - பதநிஸ்ஸ்ரி | ,, | ,, ||
போயெ ; * பல்கு . - ரா. . வ . | ,, | ,, ||

,, *
,, * (ஸரஸ)

ச. ; ; ; * த தபா - தா ; தா | த பமா ; - பத | நிஸ் - ஸ்நிநீதா ||
; ; ; * ஹிதவு - மா ; ட | லெம்தோ; - பா. | கா. - பல் . கி ||

தபமா ; * ஸஸஸா - ஸநீதா | ஸா , ஸா , - ரீ | மா - மககாரீ ||
தி . வி ; * ஸத மு - கா. . ந | போத், ய , - நித் | து - நம்டிவி ||

; ; ; * நிநிநீ - நீ ; நீ | நிதாதா ; - தப | மாபா ; தா ||
; ; ; * நதஸ- ஹோ; த | ரு . நி ; - ரா. | ஜாஜே; வி ||

29—C

தநிஸ்ா;	* ,,	ஸ்நிநிததா - தப	,,	‖
ரா. க;	* ,,	ரு. நி. . - ரா.	,,	‖
,,	* நி ஸ் நீ - தநிஸ்ாஸ்ா	நிததா ; - பத	தபமா ; - கரி	‖
,,	* ஹதமு - ஜே. வி	தி வி ; - த்யா	க. ரா ; - ஜ.	‖

மா ; மா - *

நா , த , * (ஸரஸ)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள் 'ஸ்த்ரீப்ராய மித³ம் மந்யே ஜக³த் ஸர்வம் ஸநாதநம்' என்கிறபடி, ஸ்த்ரீ ப்ராயமா யிருக்கிற உலகத்தில் தானொருவனே பரம புருடனுயிருந்து விஹரிக்கிறு னென்கிறர்.

(60) ஸுபோஷிணி - ரூபகம்.

ப. ரமிய்சுவா ரெவருரா - ரகூ³த்தமா நிநுவிநா (ரமிம்)

அ. ஸமாதி³ஷட்³கு³ணக³ளு - ஸகலபு³வந ஜநுலலோ (ரமிம்)

ச. 'ராமு' ட³நு ஸுமர்மமு - ராம யகெடி³ மர்மமு லஸ
த³மரவருல கப்³பெ³னோ - த்யாக³ராஜ ஸந்நுத (ரமிம்)

பத உரை

ரகூ₁த்தமா - இரகுகுலத்தில் உத்தமனே
ஶமாதி₃ ஷட்₃கு₃ணக₃ணு- சமம் தமம் முதலிய ஆறுகுணங்கட்கு மிருப்பிடமானவனே
ஸகல பு₄வந ஜநுலலோந் - எல்லா அண்டங்களிலு முள்ள ஜனங்களில்
நிநுவிநா - உன்னை யல்லாது
ரமிம்சுவாரு - விஹாரம் செய்யப்பட்டவர்கள்
எவருரா - யாரய்யா (உன்னை யல்லாதொருவருமில்லை என்று பொருள்)
ராமுடு₃ - ஸ்ரீராமன்
அநு - என்கிற
ஸுமர்மமு - நல்ல இரகசியமும்
ராம - ராம
அநெடி₃ - என்கிற
ஶர்மமு - சுகமும்
லஸத் - பிரகாசிக்காநின்ற
அமரவருலகுந் - தேவர்களிற் சிறந்தோர்க்கும்
அப்₃பெ₃நோ - கிடைத்ததா? இல்லை
த்யாக₃ராஜ ஸந்நுத - தியாகராஜனுல் கொண்டாடப்பட்டவனே (ரமிம்சு)

விசேஷார்த்தம்:—'ரமிம்சுவா ரெவருரா ரகூ₁த்தமா நிநுவிநா' என்பதனுல், எல்லா அண்டங்களும் பெண்ணுருவென்றும் அவற்றில் பகவா ைெருவனே பரமபுருடனு யிருந்து கிரீடித்துக்கொண் டிருக்கிரு னென்றும் பொருள்.

'ஸமாதி^{V}...ஜநுலலோந்' என்பதனால், ஐஸ்வரியம், வீர்யம், யசஸ்ஸு, ஸ்ரீ, ஜ்ஞானம், வைராக்கியம் என்கிற ஆறுகுணங்கட்கும் உறைவிடமாய், கர்தும் அகர்த்தும் அந்யதா கர்த்தும் சத்தியை யுடையவனாய், 'உண்டு முமிழ்ந்தும் கடந்து மிடந்துங் கிடந்து நின்றும் - கொண்ட கோலத்தோடு வீற்றிருந்தும் மணங் கூடியும் கண்டவாற்றாற்றனதேயுலகென நின்றான்' என்கிற படி, பற்பல ஸ்வகீய திவ்ய சேஷ்டிதங்களால் எல்லா உலகிலும் நிறைந்து கிரீடை செய்கிறவன் ஸ்ரீராமனே என்று பொருள்.

'ராம...அப்^{V}பெ^{V}னோ' என்பதனால், 'ரமந்தே யோகி^{V}நோநந்தே...தீ^{V}யதே' இத்யாதி ப்ரமாணங்களிற் கண்டபடி ஸ்ரீராமனுடைய திருநாமம் பவதாரக மாகிய தென்றும், ஸ்ரீராமனென்கிற பதம், யோகிகளுடைய ஹ்ருதயத்தில் ரமித்துக் கொண்டிருக்கிற பரப்ரஹ்ம சூசகமென்றும்; இந்த இரகசியங்கள் பிரமன் முதலிய தேவர்கட்கும் தெரியாததனால் அவர்கள் பகவதனுபவம் செய்ய வல்லவரல்ல ரென்றும்; இந்த இரகசியங்களைத் தெரிந்து அனுபவிக்கிற பக்தர்கட்கே பகவானுடைய அனுபவானந்தம் தெரியவருகிறதென்றும் விளக்குகிறாரென்று பொருள்.

ஸுபோஷிணி ராக^{V}லக்ஷணம்:—இது வக்ர ஷாடவராகம். 28-வது மேள ஜன்யம். காந்தாரம் வர்ஜ்யம். சுத்தமத்யம கைசிகி நிஷாதங்கள் இராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ்ரிஸமபநிதஸ்.	ஸதநிபமரிமரிஸ.

ப.	ஸாரீ	; - ஸாமா ;	பாநீ	தாதா ; ;
	ரமிம்	; - சு வா ;	ரெவ	ரு ரா ; ;
	ஸ்ாதா	; - நீபா ;	மாமா	ரீமா ; ;
	ர கூத்	; - தமா ;	நி று	விநா ; ;
அ.	பா நீ	; - தாஸ்ா ;	ரீரீ	ஸ்ாஸ்ா ; ;
	ஹமா	; - தி ஷட் ;	குண	க ணு ; ;
	ம்ரம்ர	ஸ்ாதாநீபா	மாமா	ரீ மா ; ;
	ஸ க	ல பு வ ந	ஜ நு	லலோ; ;
ச.	பா ;	பா - தாநீ பா	மா ;	மா - ரீ ; ;
	ரா ;	மு - டநு ஸா	மர் ;	ம - மு; ;
	ரீமா	மா - பாமா ;	ஸ்ாதா	நீபாபாபா
	ரா.	ம - ய நெ ;	டிஸர்	மமுல ஸு

பாநீ	தாஸ்ர்ஸ்ாஸ்ர்	‖	ரீ ;	ரீரிஸ்ஸா ;	‖
த ம	ர வ ரு ல	‖	கப்;	பெநோ. ;	‖
ம்ா ;	ஸ்ாதாநீபா	‖	மா ;	ரீ மா ; ;	‖
த்யா;	க ரா. ஜ	‖	ஸங்;	நுதா ; ;	‖

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள்; ஸ்ரீராமனைத் தன் மருங்கிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படியாய்ப் பிரார்த்திக்கிறார்.

(61) ஸரஸ்வதீமநோஹரி - ஆதி.

ப. எம்தவேடு^கொம்து^ ராக^வ - பம்தமேலரா ஓ ராக^வ (எம்)

அ. சிம்தி^ர்சுட - கெம்த மோடி^ரா, அம்தராத்ம நா - செம்தராநு நே (டெம்)

ச. சித்தமம்து^ நிர்நு - ஜசு ஸௌக்யமே, உத்தமம்ப^நுசு-நுப்பொங்கு^சுநு
ஸத்தாமாத்ரமா - சாலநம்மிதிநி, ஸார்வபௌ^ம ஸ்ரீ - த்யாக^ராஜநுத (எம்)

பத உரை

ஓ ராக^வா - ஓ ராகவனே

எம்த - எவ்வளவு

வேடு^கொம்து^ங் - வேண்டிக்கொள்ளுவேன்

ராக^வா - ராகவனே

பம்தமேலரா - பிடிவாதமேண்டா
சிம்தநீ^v^ர்சுடகு - (என்) சிந்தையைத் தீர்ப்ப
தற்கு, மனேவியாகுலத்தைப் போக்கடிப்
பதற்கு
எம்தமோடி^v^ரா - எவ்வளவு தாமதமடா
அம்தராத்மா - என்னுள் அந்தரியாமியா
யிருப்பவனே
நா - என்னுடைய
செம்தந் - மருங்கில்
ராநு - வருவதற்கு
நேடு^v^ - இன்று (எம்தமோடி^v^ரா)
ஸத்தா மாத்ரமா - சத்தானவனே

ஸார்வபௌ^v^ம - எல்லா பூமிக்கும் அதிபனே
ஸ்ரீ த்யாக^v^ராஜநுத - ஸ்ரீ தியாகராஜனல்
துதிக்கப்பட்ட ஸ்ரீராமா
சித்தமந்து^v^ - மனதில்
நிந்நுந் - உன்னை
சூசு - பார்க்கிற
ஸௌக்,யமே - சுகமே
உத்தமம்பு^v^ - சிறந்தது
அநுசுந் - என்று
உப்பொங்கு^v^சுநு - சந்தோஷித்துக்கொண்டு
சாலந் - மிகவும்
நம்மிதிநி - நம்பினேன் (எம்த வேடு^v^)

விசேஷார்த்தம்:—'எம்த வேடு^v^கொம்து^v^ ராக,^v^வா' என்பதனுல், ஓ ராமா!

கொள்ள மாளா வின்ப வெள்ளம் கோதிலதந் திடும் என்
னுள்ளலே யோவையுங்கொண்டவாமனுவோ வென்றென்று

நள்ளிராவு நன்பகலு நானிருந் தோலமிட்டால்
கள்ளமாயா உன்னை என் கண்காண வந்தியாயே'

என்கிறபடி, இரவும் பகலும் உன்னையே வேண்டி முறையிட்டும் நீ சேவை தந்தருளா திருக்கின்றாயே. பரம கிருபாநிதியாகிய உனக்கு இது தகுமா? என்கிறார். 'பம்தமேலரா ஓ ராக⁴வா' என்பதனால், ஸ்ரீராமா நீ ஏன் என்முன் வருவதற்குப் பிடிவாதம் செய்கிறாய்? ஒருவேளை நான், 'ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தெனென்கொல்' என்கிறபடி, அதிகமாகிய பாவங்களைச் செய்து உன்னுடைய தரிசனத்தைப் பெறுவதற்குத் தகாதவனென்று எண்ணுவையேல், 'பாவி நீ என்று சொல்லாய்ப் பாவியேன் காணவந்தேன்' என்கிறபடி, அதையாகிலும் என் முன்வந்து தெரிவிப்பாய். அனுவசியமாய்ப் பிடிவாதம் செய்து காலகரணம் செய்யாதே என்கிறானென்று பொருள்.

'ஸிம்ஹதி³ர்சுட கெம்த மோடி³ரா...ரா?' என்பதனால், 'காணவந்தென் கண்முகப்பே தாமரைக்கண் பிரா - வாணி செம்பொன் மேனி எந்தாய் நின்றருளாய் என்றென்று' உன்னைப்பிரார்த்தும் நீ வராம லிருக்கிறாய். நீ மிகவும் தூரத்திலிருப்பதினால் இங்கு வருவதற்குத் தாமதமாகின்றதோ என்று யோசிக்கையில் நீ அந்தராத்மாவாய் என்னுள்ளேயே வீற்றிருக்கிறாய். அப்படி யிருந்தும் என்மருங்கில் வருவதற்குத் தாமதமேன் என்கிறார்.

'சித்தமந்து' ..தியாகராஜநுத' என்பதனல்,

'நோக்கி நோக்கி யுன்னைக் காண்பான் யாயெனதாவி யுள்ளே
நாக்கு நீள்வன்ஞானமில்லை நாடோறு மென்னுடைய
ஆக்கையுள்ளு மாவியுள்ளு மல்லபுரத்தினுள்ளும்
நீக்கமின்றி யெங்கும் நின்ருய் நின்னை யறிந்தறிந்தே'

'அறிந்தறிந்து தேறித்தேறி யானெனதாவி யுள்ளே
நிறைந்த ஞானமூர்த்தியாய நின்மலமாக வைத்து
பிறந்தும் செத்தும் நின்றிடரும் பேதமை தீர்ந்தொழிந்தேன்
நறுந் துழாயக்கண்ணியம்மா நானுன்னைக் கண்டுகொண்டே'

என்கிறபடி, அய்யரவர்களும். தமக்கு ஜனனமாணுதி ஸம்ஸார துக்கங்களில் பயமுண்டாய் அதற்காகப் பகவானைப் பிரார்த்திக்க வில்லை என்றும், பகவத்குணுனுபவத்தி லீடுபட்ட தமக்கு அப்படிப்பட்ட பயம் ஒருபொழுதும் கிடையாதென்றும் ஸூசிப்பித்து தாம் இப்பொழுது பிரார்த்திப்பது பகவத் ஸாக்ஷாத்காரமென்றும். அதைப்பெற்றுப் பகவானுடைய மருங்கிருந்து அந்தரங்க கைங்கரியம் செய்ய ஆசைகொண்டு பகவானை யாசிக்கிருரென்றும் பொருள்

ஸரஸ்வதீ மனோஹரி ராகலக்ஷணம்:—இது ஔடவ ஸம்பூர்ணராகம். 28-வது மேள

ஜன்யம். ஆரோஹணத்தில் பஞ்சம நிஷாதங்கள் வர்ஜ்யம். அவரோஹணம் வக்ர ஸம்பூர்ணம். அந்தர காந்தாரம் இராகச் சாயாஸ்வரம். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி க ம த ஸ.	ஸ நி த ப ம க ரி ஸ.

ப. ; ; ;	* தாரீபா ; மா	க்ா ; ; - ரீ	; - ஸா ; ரீ	‖
; ; ;	* எம்தவே; டு	கொம்; ; - து	; - ரா ; க	‖
2. கா ; ;	* ,,	கமபமமக - ரீ	,,	‖
வா ; ;	* ,,	கொம். . - து	,,	‖
1. ,,	* பாமாகா ; ரீ	ஸா ; ; - ரிக	மகஸா ; ரீ	‖
,,	* டம்தமே ; ல	ரா ; ; - ஓ.	ரா. . ; க	‖
2. ,,	* மாமாமா ; ரீ	ரிகமாரீ - ரிக	மக - கரி - ஸாரீ	‖
,,	* பம்தமே ; ல	ரா . - ஓ.	. . - ரா - க .	‖
3. ,,	* ,,	கமபமமக - ரிக	மக - ஸா ; ரீ	‖
,,	* ,,	ரா. . . . - ஓ.	. . - ரா ; க	‖

,,	* ,,	| ரிகமகரீ - கா	| மாதா ; ஸ்ா	||
,,	* ,,	| ரா . . . - ஓ	| . ரா ; க	||
ரிக்ம்க்ரீ	* ஸ்ாதநிபாமாகா	| ரீ ; ; - ரீ	| ; ஸா ; - ரீ	||
வா . . .	* எம்த . வே . டு	| நொம்; ; - து	| ; ரா ; - க	||
கா ; ;	* பாமாகா ; ரீ	| ஸா ; - ; ;	| ; ; - ; ;	||
வா ; ;	* பம்தமே ; லை	| ரா ; - ; ;	| ; ; - ; ;	||
அ. ; ; ;	* மாதாஸ்ா ; ரீ	| க்ா ; ; - ம்ா	| க்ா - ரிக்ம்ாக்ா	||
; ; ;	* சிம்த திர் ; சு	| ட ; ; - கெம்	| த - மோ. டி	||
ரீ ; ;	* ரீக்ாஸ்ா ; - தா	| நீபா ; - கா	| மாரீ ; - ரீ	||
ரா ; ;	* . . . ; - .	| . . ; - .	| . . ; - .	||
காஸா ;	* மாதாஸ்ா ; ரீ	| க்ா ; ; - ம்ா	| க்ா - ரிக்ம்ாக்ா	||
. . ;	* சிம்த திர் ; சு	| ட ; ; - கெம்	| த - மோ. டி	||
ரீ ; ;	* ஸ்ாரீக்ாக்ாரீ	| ஸ்ா ; ; - தா	| நீபா ; மா	||
ரா ; ;	* அம்தராத்மு	| ரா ; ; - செம்	| தரா ; து	||

கரிஸரிகம *
நே . . . . * (டெம்த)

ச. ; ; ; *	பாபாபா ; பா	டமமா ; கா	ரீ - ஸரிகாரீ ‖
; ; ; *	சித்தமம் ; து	நிங்.ரு ; ஜா	சு - ஸௌக்ய ‖
ரீ ; ; *	ஸாதா நீ ; பா	தாஸாஸா - ரிக	மா - ரிகமாகா ‖
மே ; ; *	உக்தமம் ; ப	ரு . சு - ருப்	. - பொம்கு ‖
மாமா ; *	மா தா ஸ்ா ; ரீ	க்ா ; ; - ம்ர	க்ா - ரிக்ம்ாக்ா ‖
சு ரு ; *	ஸத் தா மாத் ; ர	மா ; ; - சா	ல - நம் . மி ‖
ரீரீ ; *	ஸ்ா ரீ க்ா ; ரீ	ஸ்ா ; ; - தா	நீபா ; மா ‖
திநி ; *	ஸார்வபௌ ; ம	ஸ்ரீ ; ; - த்யா	கரா ; ஜ ‖

கரிஸரிகம *
ரு.க . . . * (எம்த)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள் ஸ்ரீராமபிரானுடைய அழகிய வார்த்தைகளைக் கேட்டானந்திக்க விரும்புகிறார்.

(62) ராகᵛபஞ்ஜரம் - ஆதிᵛ.

ப. ஸார்வபௌ᳚ம ஸாகேதராம மந - ஸார பᵛல்கராதாᵛ தேᵛவதா (ஸார்வ)

அ. பார்வதீ ரமணார்சித பாதᵛயுகᵛ - ப᳚க்தவந்த்ᵛய பராத்பர தீ᳚நபᵛந்து᳚ (ஸார்வ)

ச. முத்ᵛதுᵛமுத்ᵛதுᵛகாᵛ மாடலாடிᵛநதிᵛ - மும்துᵛராகநே ஸநாᵛ வெத ஜெம்துᵛசுநு

கத்ᵛதுᵛகத்ᵛதᵛநுசு கிரகாலமுநு - காகுᵛசும்டᵛவலெனு த்யாகᵛராஜநுத (ஸார்வ)

பத உரை

ஸார்வபௌ᳚ம - எல்லா பூமிக்கும் நாதனே

ஸாகேதராம - அயோத்தியை யாளும் ஸ்ரீராமனே

தேᵛவதா ஸார்வபௌ᳚ம - தேவர்கட் கெல்லாம் தேவனே

மநஸார - மனமார

பᵛல்கராதாᵛ - பேசக்கூடாதா

'பார்வதி...யுகᵛ'

பார்வதி - பார்வதியினுடைய

ரமண - நாயகனாகிய சிவனால்

அர்சித - பூசிக்கப்பட்ட

பாதᵛயுகᵛ - இணையடிகளை யுடையவனே

ப᳚க்தவந்த்ᵛய - பக்தர்களால் வணங்கப்பட்டவனே

பராத்பர - பெரியவனே
தீ³நப³ந்தூ⁴ - எளியவர்களின் சுற்றமே
த்யாக³ராஜநுத - தியாகராஜனல் துதிக்கப் பட்டவனே
முத்³து³முத்³து³கா³ - முத்துமுத்தாய்
மாடலாடி³நதி³ - (நீ) வார்த்தை யாடினது
முந்து³ராகயே - முன்வாராமலே, எனக்குக் கேளாமலே
வெதஜெம்து³சுநு-சங்கடப்பட்டுக்கொண்டு
கத்³து³கத்³த³நுசு - கிடைக்கும் கிடைக்கு மென்று (இன்னெரு சமயத்திலாவது உனது வார்த்தைகள் எனக்குக் கேட்கக் கிடைக்குமென்று)
சிரகாலமு - அனவரதமும்
காகு³ஜும்ட³வலெநா - நினைந்துருகிக்கொண் டிருக்கவேண்டுமா (ஸார்வ)

விசேஷார்த்தம்:—ஸ்ரீராமா! உன்னுடைய அழகிய வார்த்தைகளைக் கேட்பதற்காக நான் நெடுநாளாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். இதுகாறும் என்னுடைய மனோரதம் நிறைவேற வில்லை. நெடுங்காலம் பிரார்த்தித்தும் எனக்கு உன் இனிய வார்த்தைகளைக் கேட்கும் பாக்கியம் கிடைக்கவில்லையே! என் செய்வதென்று வருந்துகிறேன். நீ என் பொருட்டுத் தயை காட்டி மனமார இரண்டு வார்த்தைகளையாவது பேசக்கூடாதா! உனது வார்த்தைகள் எனக்குக் கேட்கக் கிடைக்குமென்று நான் நெடுங்காலம் அமைதியில்லாத மனத்துடன் வருந்திக்கொண் டிருக்க வேண்டுமோ? என் பிரார்த்தனையை நீ இப்பொழுதே அங்கீகரித்து என் மனத்திற்கு சந்தோஷ முண்டாகும்படி என்முன் நின்று இரண்டு வார்த்தைகளைப் பேசினல் உனக்கென்ன குறைவு

வந்துவிடுமோ? தேவதேவனாகிய உனக்குக் குறைவும் நிறைவும் உண்டோ? தீனபந்துவாகிய நீ ஏழையாகிய என்பொருட்டு கருணை காட்டக் கடமைப்பட்டவனல்லவோ? என்று பிரார்த்திக்கிறாரென்று பொருள்.

இராக^{v}பம்ஜர ராக^{v}லக்ஷணம்:—இது வக்ர ஷாடவராகம். 28-வது மேள ஜன்யம். காந்தாரம் வர்ஜ்யம். பஞ்சம தைவதங்கள் வக்ரம். ரிஷப தைவதங்கள் இராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி ம ப நி த ஸ.	ஸ நி த ம ரி ஸ.

ப. ; ; ; *	நீ நீ - நிததாதா	ஸ்ா ; ; - ஸ்நி	தம - பா ; மா ‖
; ; ; *	ஸார்வ- பௌ. ம	ஸா ; ; - நே.	த . - ரா ; ம ‖
மாபா ; *	,,	,,	பா - தஸ்ாநிபா ‖
ம ந ; *	,,	,,	த - ரா . . ம ‖
மாபா , ம *	,,	,,	தம - ரீ ; பா ‖
ம ந , . *	,,	,,	த. - ரா; ம ‖

ரிமரிமபம	*	,,	,,	,,	‖
ம . ந . .	*	,,	,,	,,	‖
தாஸ்ா ;	*	தாதா - நீ ; நித	ஸா ; ; - ஸரி	மரி - மா ; மா	‖
ம ந ;	*	ஸார - பல்; க.	ரா ; ; - தா.	. . - தே ; வ	‖
ரிமரிமபா	*				
தா . . .	*	(ஸார்வபௌம)			
அ. ; ; ;	*	தாஸ்ாரீ ; ரீ	ஸ்ரி ம்ா ; - ரீ	ம்ாரீ ; ஸ்ா	‖
; ; ;	*	பார்வதி ; ர	ம . ஞார்; - சி	தபா; த	‖
நிதமா ;	*	,,	ஸ்ரிம்ரிம்ா - ரீ	,,	‖
யுக . ;	*	,,	ம . ஞார். - சி	,,	‖
,,	*	தாதா - தா ; தா	நிதஸ்ா ; - ஸ்நி	தமரீ ; ஸா	‖
,,	*	பக்த - வம் ; த்ய	ப . ராத்; - ப .	ர . தி ; ந	‖
ரிமரிமபா	*				
பம் : தா	*	(ஸார்வபௌம)			

ச. ; ; ;	*	பா பாதா ; தா	பா , த - நீ ; - தா	மா - பதநீதா	‖
; ; ;	*	முத்துமு; த்து	கா , . - . ; - மா	ட - லா. . டி	‖
மாரீ ;	*	ரி மபம ரீ ; ஸா	ஸரிஸரிமா - பா	பா தா நீதா	‖
ந தி ;	*	மும்து. . ரா; க	நே. . . . - வெ	த ஜெம்.து	‖
மாபா ;	*	தாஸ்ா ரீ ; ரீ	ஸ்ரிம்ா ; - ரீ	ம்ாரீ ; ஸ்ா	‖
சு நு ;	*	கத்துக; த்த	நு . சு ; - சி	ர கா; ல	‖
நிதமா ;	*	,,	ஸ்ரிம்ரிம்ா - ரீ	,,	‖
மு. . ;	*	,,	நு . சு . . - சி	,,	‖
,,	*	ததததா ; தா	நித ஸ்ா ; - ஸ்நி	தம்ரீ ; ஸ்ா	‖
,,	*	கரகுசும் ; ட	வலெநா ; - த்யா	க . ரா; ஜ	‖
ரிமரிமபா	*				
தா.த . .	*	(ஸார்வபௌம)			

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், பகவான் ஜகத்திற்கெல்லாம் ஸூத்ர தாரியா யிருக்கும்பொழுது ஜீவன் பயப்படவேண்டிய காரணமே இல்லை என்கிறார்.

C—30

(63) ரவிசந்த்ரிக - ஆதி.

ப. மாகேலரா விசாரமு - மருகங்க ஸ்ரீராமசந்த்ரா (மா)

அ. ஸாகேத ராஜகுமார - ஸத்பக்த மந்தார ஸ்ரீகரா (மா)

ச. ஜதகூர்சி நாடகஸூத்ரமுநு - ஜகமெல்ல மெச்சக கரமுநபிடி
கதிதப்பக யாடிஞ்செதவு ஸாமீ - நதத்யாகராஜ கிரீஸவிநுத (மா)

பத உரை

மருங் கங்க - மன்மதனைப் பெற்ற

ஸ்ரீராமசந்த்ரா - ஸ்ரீராமச்சந்திரனே

ஸாகேதராஜ குமாரா - அயோத்தியாதி பதியாகிய தசரதன் மகனே

ஸத்பக்த மந்தார - நல்ல பக்தர்கட்குக் கற்பக விருக்ஷமானவனே

ஸ்ரீகரா - ஸம்பத்கரனே

மாகு - எங்கட்கு

ஏலரா விசாரமு - எதற்கு அப்பா விசாரம்

நதத் தியாகராஜ - தியாகராஜனால் வணங்கப் பட்டவனே

கிரீஸவிநுத - சிவனால் தோத்திரம் செய்யப் பட்டவனே

ஜதகூர்சி - ஜதை சேர்த்து

நாடகஸூத்ரமுநு - ஜகந்நாடக ஸூத்திரம் என்கிற கயிற்றை
ஜக^V^மு எல்லந் - ஜகமெல்லாம்
மெச்சந் - மெச்சும்படியாய்
கரமுநந்இடி^V^ - கையிற்பிடித்து
க^V^திதப்பக - அவற்றின் கதி பிசகாமல்
ஆடி^V^ம்செதவு ஸ்^ஈமீ - ஆட்டிவைக்கிறுப் அப்பனே (மாகேலரா)

விசேஷார்த்தம்:—பகவானுக்கு எல்லா உலகங்களும் நாட்டிய அரங்கமாயும், சராசரங்கள் யாவும் நாட்டிய சாதனங்களாயு மிருக்கின்றன. பொம்மை யாட்டக்காரன் தன் கையிலுள்ள சூத்திரத்தின் வழியாய் பொம்மைகளை யாட்டிக் காட்டுவதுபோல், கபட நாடக ஸூத்ரதாரி யாகிய பகவான், உலகங்களை எல்லாம் ஆட்டிக்காட்டுகிறுன். பொம்மை யாட்டத்தால் ஏற்படக் கூடிய இலாப நஷ்டங்களும் ஸுகதுக்கங்களும் எப்படி பொம்மைகளை யடையாது அவற்றை ஆட்டிவைக்கிற சூத்திரதாரனை அடைகின்றனவோ அப்படியே இந்த ஜகன் நாடகத்தினுல் உண் டாகக் கூடிய இலாபநஷ்டங்கள் எத்துணையும் ஜீவனை யணுகாது பகவானுடையதாகவே யிருக் கிறது. ஜீவாத்மா ஸ்வதந்திர மற்றவனுப் அத்யந்த பகவத்பாரதந்திரிய முடையவனு யிருக்கிற படியால் கருமபலன்கள் அவனைச் சேராது. பகவான் ஸூத்ரதாரியாகையால் சுகதுக்கங்கள் அவனைச் சேர்ந்ததேயாம். அப்படியிருக்க மனிதன் கொஞ்சமாகிலும் விசாரப்படவேண்டிய அவசியமே கிடையாது. உலகிலுள்ள சராசரங்கள் யாவும் பகவானுக்கே உரியவைகள். அவ னுடைய சொத்துகளை அவன் என்னவாவது செய்து கொள்ளட்டும். நாமேன் விசாரப்பட

வேண்டுமென்று அய்யரவர்கள் தம்முடைய அத்யந்த பாரதந்திரியத்தைப் பிரகடிக்கிறாரென்பது பொருள்.

ரவிசம்த்^{v}ரிகை இராக^{v}லக்ஷணம்:—இது ஔடவ ஷாடவராகம். 28-வது மேளத்திற் பிறந்தது. பஞ்சமம் வர்ஜியம். சுத்த மத்யம கைசிகி நிஷாதங்கள் இராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி க ம த ஸ.	ஸ நி த ம க ரி ஸ

ப. ; ; ; * மா ; கா ; மா	கா ; ; - ரீ	; ஸா ; ரீ	‖
; ; ; * மா ; கே ; ல	ரா ; ; - வி	; சா ; ர	‖
கா ; ; * ,,	கா ; ; - ரிக	ரிக - ஸா ; ரீ	‖
மு ; ; * ,,	ரா ; ; - வி.	. . - சா ; ர	‖
,, * ,,	தா ; மா - மக	கரிஸா ; ரீ	‖
,, * ,,	ரா ; . - வி.	. . சா ; ர	‖
,, * மா ; தா ; நீ	நிததா ; - மக	,,	‖
,, * மா ; கே ; ல	ரா. . ; - வி	,,	‖

,, * மகமாதா ; நி | நிதகா ; தநி | ஸ்ாஸ்ா - ஸ்நிநித ||
,, * ம. ருக ; ங்க | ஸ்ரீ . ; ரா. | . ம - சங் . . ||

ஸ்நிநித-தா *
த்ர. . . - . * (மாகேல)

அ. ; ; ; * தாநீதா ; நீ | ஸ்ா ; ; - ரிக் | ம்ாக்ாரீ - க்ம் ||
; ; ; * ஸா.கே ; த | ரா ; ; - ஜ. | கு .மா- . . ||

க்ரிஸ்ா ; * ஸ்நிநீ - நிததாமா | மா ; தா ; | நீ - ஸ்நிநீதா ||
. . ரா ; * ஸ . . - த்பக் . த | மம் ; தா ; | ர - ஸ்ரீ . . க ||

ஸ்நிநிதகா *
ரா. . . . * (மாகேல)

ச. ; ; ; * மாமாமா ; மா | மகா ; - மா | பா - தா ; நீ ||
; ; ; * ஜ தகூ ; ர்சி | நா. . ; - ட | க - ஸ ெ; த்ர ||

தா , தா , * தநிஸ்நிநிததாமா | மககரிஸா - ரிக | மா - மாதாநீ ||
மு , து , * ஜ. க . . மெல்ல | மெச். . ச - க. | க - ர முந ||

தாதா ; * தாநீதா ; நீ	ஸா ; ; - ரிக்	ம்ா க்ாக்ரீ	‖
நி டி ; * க திதப் ப	க ; ; - யா	டிம்செதவு	‖
க்ம்க்ரிஸா * ஸ்நிநீ - நிததாமா	மா ; தா ;	தநிஸ்நிநீதா	‖
ஸா . . மீ * ந . த - த்யா . க	ரா ; ஜ ;	கிரீ . . . ஶ	‖

ஸ்நிநிததா *
வி . நு . த * (மாகேல)

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், ஸ்ரீராமனுடைய கல்யாணகுணங்களை வருணிக்கிறார்.

(64) ரவிசந்த்ரிக - ஆதி.

ப. நிரவதிஸுக,த நிர்மலரூப - நிர்ஜித முநிஶாப (நிர)

அ. ஶரதிபம்த,ந நத ஸம்க்ரம்தந
ஶம்கராதி கியமாந ஸாதுமாநஸ ஸுஸதந (நிர)

ச. மாமவ மாகத மணிநிப,ᵛதேᵛஹ
ஸ்ரீரமணீலோல ஶ்ரிதஜநபால
பீᵛ,ம பராக்ரமபீᵛ,ம கார்சித
தாமஸ ராஜஸ மாநவதூᵛர த்யாகᵛராஜ விநுத சரண (நிர)

பத உரை

நிரவதி,ᵛஸுக,தᵛ - அளவிறந்த சுகத்தைக் கொடுப்பவனே

நிர்மலரூபா - மலினமில்லாத உருவமுடையவனே

நிர்ஜித முநிஶாப - ஜயிக்கப்பட்ட முனி சாபங்களை யுடையவனே

ஶரதி,ᵛபᵛம்த,ᵛந - சமுத்திரத்தி லணையிட்டவனே

நத ஸம்க்ரந்தᵛந - இந்திரனால் வணங்கப்பட்டவனே

ஶம்காரதிᵛ கேᵛயமாந - சங்கரன் முதலியவர்களால் கொண்டாடப்பட்டவனே

ஸாது,ᵛ - ஸாதுக்களுடைய

மாநஸ - மனதை

ஸுஸதᵛந - நல்லவீடாக உடையவனே

மாகதமணி நிப,ᵛதேᵛஹ - பச்சைக் கல்லைப்போன்ற சரீரகாந்தியை யுடையவனே

ஸ்ரீரமணீலோல - இலக்குமியோடு விஹரிப்பவனே

ஶ்ரிதஜநபால - ஆஶ்ரிதர்களைக் காப்பாற்றுபவனே

பீ,ᵛம பராக்ரம - மிக்க பராக்கிரமமுடையவனே

பீ⁴மகரார்சித - சிவனல் பூசிக்கப்பட்டவனே
தாமஸராஜஸமாநவ தூ³ர - தமோகுண ரஜோகுண முடைய மனிதர்கட்கு தூரத்தி லிருப்பவனே
த்யாக³ராஜ விநுத சரண - தியாகராஜனல் துதிக்கப்பட்ட பாதங்களை யுடையவனே
மாம் அவ - என்னைக் காப்பாற்றுவாய்

விசேஷார்த்தம்:—'கிரவதி³ ஸுக²தா³' என்னும் விசேஷணத்தால், பகவானுடைய திருவடிகளே, ப்ராப்யமும் ப்ராபகமுமென்று அத்யவஸித்திருக்கிற பக்தர்கட்கு புநராவர்த்தி ரஹிதமாகிய இன்ப வீட்டைத் தரும் என்கிறார். 'நிர்மலரூப' என்பதனல், உயர்வற வுயர்நலமுடையவனாகவும் பரம பாவனனாகவும் விளங்குவதால் பாவங்களைப் போக்கடிக்க வல்லவனென்கிறார். 'நிர்ஜித முநிசாப' என்பதனல், ஸ்ரீராமனுடைய திருவடியின் சம்பந்தத்தால், கௌதமனுடைய சாபவலியால் கல்லாய்ச் சமைந்திருந்த அகலிகை சாபம் நீங்கினவளாய் பண்டைய உருவத்தை யடைந்தாளென்றால் ஸ்ரீராம சம்பந்தத்தினல் நீங்காத பாவமுள்ளதோ வென்கிறார். 'ஜலதி³ப³ந்த⁴ந' என்பதனல், சமுத்திரத்தி லணையிட்டவனுக்கு அசாத்தியமான காரிய மொன்றில்லை என்று ஸ்ரீராமனுடைய அதிமானுஷ சேஷ்டிதத்தைக் காண்பிக்கிறார். 'நத ஸங்க்ரந்த³ந' என்பதனல், தேவேந்திரனுடைய அகங்காரத்தைப்போக்கி உபேந்திர னென்று பெயர் பெற்றவனென்கிறார். 'ஶங்கராதி³ கே³யமாந' என்பதனல் சிவன் முதலானவர்களால் துதிக்கப்பட்டவனுய் சமானனும் அதிகனுமில்லா திருப்பவன் என்கிறார். 'ஸாது⁴மாநஸ ஸுஸத³ந' என்பதனல்,

'நிர்ந்தவடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல ஆர்ந்த புகழ் அச்சுத'னுப் பக்தர்களை ஆட்கொண்டு அவர் மனத்திடத்து வசிப்பவன் என்கிருர்.

'மரகதமணி நிப⁴தே³ஹ' என்பதனுல்; 'பச்சைமா மலைபோல் மேனி' என்கிருர். 'ஸ்ரீரமணீ லோலா' என்பதனுல்; பரமபுருஷகாரி யாகிய இலக்குமி தேவிக்கு மிகவும் வசப்பட்டவனு யிருக்கிறபடியால் ஆஸ்ரயித்த உடனே க்ஷேமம் உண்டாகுமென்று நிரூபிக்கிறர். 'ஸ்ரிதஜநபால' என்பதனுல்; ஆஸ்ரிதர்கள் எப்படியும் காப்பாற்றப் படுவார்கள் என்கிருர். 'பீ⁴மபராக்ரம' என்பதனுல் நிகரற்ற பராக்ரம முடையவனுனதால் எப்படிப்பட்ட காரியத்தைச் செய்தாகிலும் ஆஸ்ரிதர்களைக் காப்பாற்றுவான் என்கிருர். 'தாமஸ ராஜஸ மானவ தூ³ர' என்பதனுல் தமோகுணம் ரஜோகுணம் மேலிட்டவர்கட்கு மிகவும் தூரத்தி லிருப்பவனென்றும் ஸத்வகுணம் மேலிட்டவர்கட்கு அருகிலேயே யிருப்பவனென்றும் தெரிவிக்கிருர்.

ப. ஸாரீகாமாரீ ஸா - ரிகமக	ரிகமகரீகா	ரீ ; கரிஸநி	‖
நி ரவ தி ஸுக - த . . .	நிர் . . மல	ரூ; ப. . .	‖
ஸரிகமதாநீ - தாமா - மககரி	ஸா ; ; ;	ரிகமககரிஸநி	‖
நிர். . . ஜி த - மு நி - ஶா. .	ப ; ; ;	. . . .	‖
அ. ; தநிதாஸ்ா - தஸ்நிதஸ்ா ; -	; - ரிர்ரீ ரீ	ஸ்ரிக்ர்ரீ ;	‖
; ஶ. ர தி - பம். . த ந ; -	; - நதஸம்	க்ரம்.தந ;	‖

	ஸ்ரிஸ் - நீஸ்நி - தநிநித - தநிஸ்ரி	ஸ்ாநீதாமா	மகரிகரிஸநீ ‖
	ஸம். க - ரா. தி - கி. ய. - மா. ந.	ஸாதுஜ ந	ஸு . ஸத . ந ‖
ச.	; மா ; மக - கரிஸாரீகா	; - மதாமகா	ரிகமகரிஸா ‖
	; மா ; மவ - ம. ர கத	; - மணிநிப	தே. . . ஹ ‖
	; ஸா ; ஸஸா - ரி கம க - ரி கமா	; - கமாதமா	தா ; தா ; ‖
	; ஸ்ரீ ; ர ம - ணி. . . - வோ. ல	; - ஶ்ரிதஜந	பா ; ல ; ‖
	; - ஸ்ா ; ஸ்ஸ்ர் - ஸ்நிதா - ஸ்ாஸ்ா	; - ரீ ; ரிரீ	ஸ்ரிக்ாக்ரிரீ ‖
	; - பி ; ம ப - ரா. . - க்ர ம	; - பி, மக	ரார் . சி . த ‖
	ஸ்ாரிஸ் - நீஸ்நி - தாநித - தநிஸ்ரி	ஸ்ாநீதாமா	மகரிகாரிஸநி ‖
	தாமஸ - ராஜஸ - மாநவ - தூ . ர	த்யா க ராஜ	விநுத. சரண ‖

அவதாரிகை:—இந்தக் கீர்த்தனத்தில் அய்யரவர்கள், ஸ்ரீராமா! நான் வயிறு வளர்ப்பதற்காக பக்தவேடம் போடவில்லை. உண்மையிலேயே உன் திருவடிகளை நம்பினவன் என்று தம்முடைய அத்தியந்த விசுவாஸத்தை விளக்குகிறார்.

(65) மாளவி - ஆதிᵛ.

ப. நெனருஞ்சினானு அந்நிடிகி - நீ தாᵛஸுடᵛநி நேனு நீதᵛபை (நெ;

அ. கᵛநாகᵛஜீமூதாஸுகᵛ ஜலதிᵛ - கᵛம்பீᵛர நீ பாதᵛமுலபை (நெ)

ச. கலிலோ மாடலு நேர்சுகொநி - காம்தலநு தநயுலநு ப்ᵛரோசுடகு
ஸிலாத்முடைᵛ பலுக நேரநா - ஸ்ரீ த்யாகᵛராஜாப்த நீவெபடᵛ (நெ)

பத உரை

'கᵛநா... ஆஸுகᵛ'
கᵛந - பெரியதாகிய
அகᵛ - பாவமென்கிற
ஜீமூத - மேகங்கட்கு
ஆஸுகᵛ - காற்றைப்போன்றவனே
ஜலதிᵛகம்பீᵛர - சமுத்திரத்தைப்போல் கம்பீரமானவனே
நீ - உன்னுடைய
பாதᵛமுலபைந் - பாதங்களில்
நெநரு - மனதை
உஞ்சிநானு - வைத்தேன்
அந்நிடிகிந் - எல்லாவற்றிற்கும்
நீதாஸுடᵛநி - உன் தாஸனென்று
நேனு - நான்
நீதᵛபைந் - உன்பேரில் (நெனருஞ்சினானு - மனம்வைத்தேன்)
கலிலோந் - கலியுகத்தில் (வழக்கமாகிய)
மாடலந் - வார்த்தைகளை (பொய்களை)
நேர்சுகொநி - கற்றுக்கொண்டு
காம்தலநு - பெண்டிர்களையும்

தநயுலநு - பிள்ளைகளையும்
ப்ʼரோசுடகுந் - காப்பாற்றுவதற்காக
ஶிலாத்முடைʼ - கன்மன முடையவனுப்
பலுகந் - பேச
நேரநாரா - அறியேனடா
ஸ்ரீ த்யாகʼராஜாப்த - தியாகராஜனுக்கு ஆப்தனுகிய ஸ்ரீராம
நீயெடʼந் - உன்னிடத்தில் (நெருஞ்சினுநமனதை வைத்தேன்)

விசேஷார்த்தம்:—'ஸ்ரீராமா! நான் உலகத்திலுள்ள வேஷதாரிகளைப்போல் பக்தவேஷம் போட்டுக்கொண்டு பெண்டுரையும் மக்களையும் காப்பாற்றும் பொருட்டாய்த் திரவியம்தேடினேனில்லை. மனத்தில் கொஞ்சமேனும் பயமில்லாமல் பொய்புரட்டுகளைச் சொல்லிப் பிறர் பொருளை அபகரிக்கிற தன்மை என்னிடத்துக் கொஞ்சமேனும் கிடையாதென்பது உனக்கே தெரியும். 'கையார் சக்கரத்து என் கருமாணிக்கமே என்றென்று, பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி, மெய்யே பெற்றொழிந்தேன், விதிவாய்க்கு இன்று காப்பாரார்;ஐயோ கண்ணபிரான் அறையோ வினிப்போனுலே' என்கிறபடி, உண்மையில்லாமல் பொய்யாகவேனும் உன்னுடைய நாமங்களைச்சொல்லிக் கிருதார்த்தரானவர்கள் அநேகரிருக்க உண்மையில் உன்னிடத்தில் ஆத்மஸமர்ப்பணம்செய்த நான் உய்யாதொழிவனே? நான் உன் பொருளல்லவோ என்கிறார் என்பது பொருள்.

மாளவி ராகலக்ஷணம்:—இது வக்ர ஸம்பூர்ணராகம்; 28-வது மேளத்தில் பிறந்தது. கைசிகி நிஷாதம் இராகச் சாயாஸ்வரம். ஹரிகாம்போஜி ஜந்யம் எப்போதும் பாடத் தகுந்தது.

ஆரோஹணம்.	அவரோஹணம்.
ஸ ரி க ம ப நி ம த நி ஸ	ஸ நி த நி ப ம க ம ரி ஸ.

ப. த நிபா ; மகம	ரீ ; - ரி	கமபநி	‖
நெகரும், சிநா.	து, - அ	ந்நிடி. கி	‖
2. தநிபா ; ம - பமகம	,,	,,	‖
நெரும் ; சி - நா. . .	,,	,,	‖
மநி தநி - ஸ்நிதநி - பமகம	ரீ - ; - ஸ்	, ஸ் - ஸ்நிநி	‖
நீதாஸ - ட . நி. - நே. . .	நு- ; - நீ	, து - பை.	‖
அ. மநிதநிஸா - தநி	ஸ்ா ; -	ஸ்நிதநிபாமா	‖
கநா.க ஜ் - மூ.	தா ; -	. . . . . .	‖
2. ,,	ஸ்ா - தநிஸ்ா	,,	‖
,,	தா - . . .	,,	‖

3. மநிதநிஸ்ா - தநிஸ்ா -	ாிக்ம்ா - க்ம்ாீ	,,	‖
கநாகஜீ . - மூ . -	தா . - . .	,,	‖
4. ,,	ஸ்ா , - த	நிஸ்ாிக்	‖
,,	தா , - ஸ	கஜலதி	‖
ம்ா , - க்ாம்ாீ -	, ஸ்ாநி	தநிஸ்ாி	‖
கம் , - பீ ரநீ -	, பா த	முலபை	‖
ச. மப நீ ; - மா	த நிபா	, ம - க ம	‖
கலிலோ; - மா	டலுமே	, ர்சு - கொநி	‖
ரீ , கம ப - ஸாி	கம பா -	மப நீ	‖
காம், தலநு - த ந	யுலப்ரோ-	சுடகு	‖
ம தா நி ஸ்ாத நி	ஸா , த	நிஸாிக	‖
ஸிலாத்முடைபனு	க ; நே	. ரநர	‖
ம்ா , க்ா ம் ாீ	ஸ்ா , நி	தநிஸ் ாி	‖
ஸ்ரீ , த்யாகரா	ஜாப், த	நீ . யெட	‖

